REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

தினகரன்

THINAKARAN

தினகரன்

2024 ஜனவரி 8 திங்கட்கிழமை

வரு. 92 இல. 07 | Monday 08, January, 2024 | 16பக்கங்கள் | 50/-

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில்

லோரன்ஸ் செல்வநாயகம்

உத்தேச திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் அடுத்த வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 06

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மூலம்

டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 569.7 மில். டொலர் வருவாய்

அந்நிய செலாவணியாக நாட்டுக்கு கிடைத்துள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

2023 இல் 07 பில்லியன் ரூபாவை பணியகம் திறைசேரிக்கு வழங்கியிருப்பதாகவும் அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் கடந்த வருடத்தில் திறை சேரிக்கு ஏழு பில்லியன் ரூபாவை பெற்றுக் கொடுத்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தாம், தொழில் அமைச்சராக பதவியேற்ற 2022 மே மாதத்திலிருந்து இதுவரை வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலம் 8.72 பில்லியன் டொலர்கள் அந்நிய செலாவணியாக நாட்டுக்கு கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ள இலங்கையர் கடந்த 2023 டிசம்பர் மாதம் மாத்திரம் 569.7 மில்லியன் டொலர்களை நாட்டுக்கு அந்நிய செலாவணியாக அனுப்பியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ள இலங்கையின் அர்ப்பணிப்பை பாராட்டுவதாக தெரிவித்துள்ள அமைச்சர், அவர்களின் முன்னேற்றத்துக்காக 06

வடக்கில் முன்னுரிமை அடிப்படையில்

சுகாதாரம், கல்வி பிரச்சினைகள் தீர்வுக்கு விரைவில் நிதி ஒதுக்கீடு

ஜனாதிபதி

முன்னுரிமை அடிப்படையில் வடக்கின் சுகாதாரம் மற்றும் கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்க உடனடியாக நிதி வழங்கப்படுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன் கீழ் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு காணி ஒதுக்கீடு மற்றும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புக்கான நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார். யாழ். மாவட்டச் செயலகத்தில் (06) சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகள் தொடர்பில் இளைஞர் சமூகத்தின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

சுகாதாரத்துறை, கல்வித்துறை சார்ந்த இளைஞர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 300 பேர் இதில் கலந்துகொண்டனர். அவர்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி பதில்களை வழங்கினார். 06

யாழ். ரயில் சேவைகள் நேற்று முதல் நிறுத்தம்

வடக்கு ரயில் பாதையில் மஹவ மற்றும் அநுராதபுரத்துக்கு இடையிலான ரயில் பாதை நேற்று (07) முதல் தற்காலிகமாக மூடப்படுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹவ மற்றும் அநுராதபுரத்துக்கிடையிலான பாதை அபிவிருத்திக்காகவே 06 மாதங்களுக்கு இப்பாதை மூடப்படவுள்ளதாக ரயில்வே பிரதி பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். இதன்படி, நேற்று (07) முதல் கொழும்பிலிருந்து மஹவ வரையும் அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரையுமே 06

மிக மோசமான குற்றவாளிகள் 1130 பேர் இதுவரை இனங்காணல்

38 பேர் வெளிநாடுகளில் இயங்கியதாக அமைச்சர் டிரான் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் மிக மோசமான குற்றவாளிகள் 1,092 பேர், இனங்காணப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, வெளிநாடுகளில் தங்கியிருந்து இலங்கையில் போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் குற்றச் செயல்களை செயற்படுத்தும் 38 குற்றவாளிகளும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மைக் காலங்களில் நாட்டில் மனிதப் படுகொலை உள்ளிட்ட மோசமான 06

தங்கம் வென்ற அகிலத் திருநாயகி ஜனாதிபதி பாராட்டி கௌரவிப்பு

பிலிப்பைன்சில் நடைபெற்ற 22 ஆவது மூத்தோருக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில், தங்கப்பதக்கம் வென்ற முல்லைத்தீவைச் சேர்ந்த அகிலத் திருநாயகியை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டி கௌரவித்தார். வடமாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில்(06) இச்சந்திப்பு நடைபெற்றது.

RELEASED

06 ஆயுள்தண்டனை புலி உறுப்பினர்கள் பொதுமன்னிப்பில் விடுதலை

06 முதலில் ஜனாதிபதி தேர்தலே நடக்கும் வேட்பாளராக ரணிலே களமிறங்குவார்

நிமல் லான்சா எம்.பி நம்பிகை தெரிவிப்பு

பெங்கு ஒழிப்பு விசேட திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பம்

புதிய 011 7966366 தொலைபேசி இலக்கம் அறிமுகம்

லோரன்ஸ் செல்வநாயகம்

டெங்கு கட்டுப்படுத்தலுக்கான விசேட வாரம் அறிவிக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் இதற்கான வேலைத்திட்டம் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் விஷேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். 06

IMF பிரதிநிதிகள் குழு 11 இல், இலங்கை வருகை

ஜனாதிபதி, நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் ஆளுநருடனும் பேச்சுவார்த்தை

லோரன்ஸ் செல்வநாயகம்

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் 11ஆம் திகதி நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது அலுவலக மட்ட பிரதிநிதிகளின் வருகையாகும் என தெரிவித்துள்ள அவர், இப்பிரதிநிதிகள் குழு இலங்கையில் தங்கியுள்ள காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிதியமைச்சின் அதிகாரிகள், மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள், எரிசக்தி மின்சக்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் முக்கிய நிறுவனங்கள் சிலவற்றின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 06

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபா

நாளை, முக்கிய பேச்சுவார்த்தை

லோரன்ஸ் செல்வநாயகம்

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தை, நாளை (09) தொழிலமைச்சில் இடம்பெறவுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவானது, தொழிலமைச்சில் 06

ஜனாதிபதி தேர்தல்: தமிழ் தேசியத்தின் ஒன்றுபட்ட முடிவுகள் மிக அவசியம்

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பேசுவதற்கு தமிழரசுக் கட்சி தயார்

வவுனியா விசேட நிருபர்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒற்றுமையாக ஒரு முடிவை எடுக்க வேண்டும். சிவில் அமைப்புக்களுடனும், தமிழரசுக் கட்சியுடனும் இது தொடர்பில் பேசுவோம். கஜேந்திரகுமார் 06

யாழ். நகரை பூர்வீகமாகக்கொண்ட

இளம் தமிழ் பெண் வைத்தியர் நோர்வேயில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக்கொண்ட இளம் தமிழ் பெண் வைத்தியர் ஒருவர், நோர்வேயின் எல்வெரும் (Elverum) பகுதியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். வைத்தியசாலை ஒன்றுக்கு வெளியே காரில் வைத்து இப்பெண் வைத்தியர் கொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் போது காரில் மற்றுமொரு நபரும் பலத்த காயங்களுடன் காணப்பட்டுள்ளார். அவரை மீட்ட பொலிஸார் ஓஸ்லோவில் உள்ள வைத்தியசாலைக்கு விமானம் மூலம் கொண்டு சென்ற போதிலும், அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கைத்துப்பாக்கி ஒன்றும் காரின் உள்ளேயிருந்து மீட்கப்பட்டுள்ளது. அந்தத் துப்பாக்கியே கொலைக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. இளைஞர் ஒருவர், இவ்விளம் 06

கிழக்கு ஆளுநர் செந்திலின் ஏற்பாட்டில் கிண்ணியாவில் படகோட்டப் போட்டி

பிரதம அதிதியாக Dr. வெங்கடேஸ்வரன்

55 படகுகளுடன் 110 போட்டியாளர் பங்கேற்பு

கிழக்கு ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில், பொங்கல் விழா நிகழ்வின் மற்றுமொரு அம்சமாக படகோட்டப்போட்டி இடம்பெற்றது.

கிண்ணியாவில் நடந்த இப்போட்டியில், 55 படகுகளுடன் 110 போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர் டாக்டர் வெங்கடேஸ்வரன் பங்கேற்றதுடன், படகோட்டப் போட்டியை ஆளுநர் செந்தில் தொண்டமான், டாக்டர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் பச்சை கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தனர். இப் போட்டியை பார்ப்பதற்காக 06

2024 இல் 23 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை எதிர்பார்ப்பு

நான்கு தினங்களில் 25,000 பேர் வருகை; சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இவ்வருடத்தின் கடந்த நான்கு தினங்களில் 25,000 சுற்றுலாப்பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்தவகையில் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 4 ஆம் திகதி வரையில் மாத்திரம் 25,619 உல்லாசப் பிரயாணிகள் பல்வேறு நாடுகளிலிருந்து நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

ரஷ்யாவிலிருந்தே அதிகளவான உல்லாசப் பிரயாணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். இந்நிலையில் 5,060 பேர் ரஷ்யாவிலிருந்தும் 3,333 பேர் இந்தியாவிலிருந்தும் நாட்டிற்கு 06

நகர்வலம்

அநுராதபுரம் மாவட்டத்தில்;

பயிரிடப்பட்டுள்ள சோளச் செய்கையில் ஒருவகையான நோய் தாக்கம்

உரிய நடவடிக்கைக்கு அமைச்சர் அமரவீர உத்தரவு

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தின் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சோளச் செய்கைக்கு ஏற்பட்டுள்ள இனங் காணப்படாத நோய்த்தாக்கத்தினை கண்டுபிடிப்பதற்காக வேண்டி விவசாயத்திணைக்கள அதிகாரிகளுக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர உரிய ஆலோசனைகளை வழங்கியுள்ளதாக விவசாயத்திணைக்களத்தின் அநுராதபுரம் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தேனுவர தெரிவித்தார்.

மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கறுக்கங்குளம, கல்பொத்தேகம மற்றும் அலயாபத்துவ மாணியங்கமுவ பகுதியிலுள்ள பாரிய அளவிலான அறுவடை செய்வதற்கு அண்மித்துள்ள சோளச் செய்கைக்கே இனங் காணப்படாத நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதென பட்டுள்ள விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து விவசாயத்திணைக்களம் விசேட கவனம் செலுத்தியுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சோளச் செய்கையினை பரிசோதனை செய்வதற்காக வேண்டி விவசாயத்திணைக்கள அதிகாரிகள் குழுவொன்றினை அப்பகுதிக்கு அனுப்பியுள்ளதாக மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தேனுவர மேலும் தெரிவித்தார்.

வெளிப் பிரதேசங்களுக்கு போதைப்பொருள் கடத்தல்;

கொழும்பு உட்பட பல பகுதிகளிலும் வீதித்தடை ஏற்படுத்தி தீவிர சோதனை

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தகவல்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு வாகனங்கள் மூலம் போதைப் பொருள் கடத்திச் செல்வதை தடுக்கும் வகையில் கொழும்பு, நிட்டம்புவ, நீர் கொழும்பு, மொறட்டுவ உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வீதிச் சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கொழும்பிலிருந்து தூரப் பிரதேசங்களுக்கு பயணிக்கும் பஸ் வண்டிகள் மற்றும் ஏனைய சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் இந்த வீதிச் சோதனை சாவடிகளில் நிறுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் பயணிகளின் பயணப் பைகளும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது போதைப் பொருளுடன் பல சந்தேக நபர்களை கைது செய்ய முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்படும் வாகனங்களில் ஸ்டிக்கர் ஒன்றை பொலிசார் ஒட்டுவதாகவும் அவ்வாறு ஸ்டிக்கர் ஒட்டப்படும் போது அடுத்து வரும் சோதனைச் சாவடியில் குறித்த வாகனம் அசௌகரியங்களுக்கு உட்படுத்தப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நேற்றுக் காலை 6:00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் பாதாள உலக குழுக்களை இனங் கண்டு கைது செய்யும் யுக்திய சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் மூலம் 1133 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் போது ஹெரோயின், ஹசீஸ், உள்ளிட்ட போதைப் பொருள் கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளையும் கைப் பற்ற முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு கடந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ள 54 பேரை தடுத்துவைத்து விசாரணை செய்வதற்கான உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் மேலும் 38 போதைப் பொருளுக்கு அடிமையான நபர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில்;

போதைப்பொருட்களுடன் 13 பேர் பொலிஸாரால் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

இனந்தெரியாத நபர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி முன்னர் உயிரிழந்த எஸ். எப். லொக்காவின் நெருங்கிய உதவியாளர் ஒருவர் உட்பட 13 பேரை போதைப்பொருட்களுடன் கைது செய்துள்ளதாக அநுராதபுரம் கோட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களில் பிரதான சந்தேக நபர் அநுராதபுரம் ஸ்ரீராவஸ்திபுர 05வது அலை பகுதியைச் சேர்ந்தவராவர். கைது செய்யப்பட்டுள்ள ஏனைய 12 சந்தேக நபர்களும் பிரதான சந்தேக நபரிடம் ஈஸிகேஷ் முறையில் ஹெரோயின் பெற்று கொள்வதற்கு வந்த 20 35 வயதுக்குட்பட்டவர்கள் என பொலிசார் தெரிவித்தனர்.

கராத்தே ஷிஹான வசந்த சொய்சாவின் கொலையுடனான பிரதான சந்தேக நபரான எஸ்.எப். லொக்காவின் உதவியாளரான இந்த சந்தேக நபர் 2400 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னர் 160 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டவர் என பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் அநுராதபுரம் நகர் மற்றும் அதனைச் சூழவுள்ள நகரங்களுக்கு நான்கு வருடங்களாக ஹெரோயின் போதைப் பொருள் விநியோகித்து வந்துள்ளதாகவும் பொலிஸார் மேற் கொண்டவிசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. போதைபொருள் வியாபாரத்திற்காக பயன்படுத்திய 04 கையடக்க தொலை பேசிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் .

தற்போது நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய தேடுதல் நடவடிக்கையினால் போதைப் பொருளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் தூர பிரதேசங்களிள் இருந்து அநுராதபுரம் பகுதிக்கு ஹெரோயின் போதைப்பொருள் பெற்றுகொள்வதற்கு வருகை தருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள ஏனைய 12 பேரும் ஹொரவப்பொத்தானை, கஹட்டகஸ்திகிலிய, இராஜாங்கனை மற்றும் கலாஓயா பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இனிய நந்தவனம் சஞ்சிகையின் 27 ஆவது ஆண்டு நிறைவு விழா

இனிய நந்தவனம் சஞ்சிகையின் 27 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று திருச்சியில் உள்ள பிரீஸ் ஹோட்டலில் நடைபெற்றது. விழாவில் வெளியிடப்பட்ட சஞ்சிகையின் ஆண்டு விழா மலரின் முதலாவது பிரதியினை இலங்கையில் இருந்து கலந்து கொண்ட புரவலர் ஹாசிம் உமர், நூலாசிரியர் இனிய நந்தவனம் சந்திரசேகரனிடமிருந்து பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம். அருகே தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், துபாய் தொழில் அதிபர் அப்துல் வஜீத், சமூக சேவையாளர் திருச்சி டொக்டர். கே. சீனிவாசன் உட்பட பிரமுகர்கள் காணப்படுகின்றனர்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை ஏற்பாட்டில்

கொழும்பில் "FACETS Sri Lanka" கண்காட்சி; உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்கள் பங்கேற்பு

பிரதம அதிதியாக அமைச்சர் ரமேஷ் பத்திரன

ருஸைக் பாரூக்

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA), தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை (NGJA) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து, ஆசியாவின் முதன்மையான 30ஆவது இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியான FACETS Sri Lanka இன் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை (06) கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலின் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி , தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் (NGJA) தலைவர் விராஜ் டி சில்வா, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் (EDB) தலைவர் கலாநிதி கிங்ஸ்லி பெர்னார்ட், SLGJA தலைவர் அஜ்வர்ட் டீன் மற்றும் FACETS ஸ்ரீலங்கா தலைவர் அல்தாப் இக்பால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

FACETS Sri Lanka இன் 30வது பதிப்பு, இலங்கையின் ரத்தினம் மற்றும் நகை மரபுகளை உள்ளடக்கிய பல பெவிலியன்களைக் கொண்டுள்ளது. பங்கேற்பாளர்கள் Gem Pavilion, Premier Jewellery Pavilion, Sustainable Pavilion, Sapphire Masterpiece Pavilion, NGJA SME Pavilion, and the SLGJA Pavilion, ஆகியவை ஒவ்வொன்றும் இலங்கை வழங்கும் உன்னதமான கற்கள் மற்றும் நகைகள் பற்றிய தனித்துவமான கண்ணோட்டத்தை வழங்குகிறது.

இந் திறப்பு விழாவில் மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம், பிரேசில் போன்ற வெளிநாட்டு தூதுவர்கள், வெளிநாட்டு மற்றும் உள்ளூர் மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபாரிகள் கலந்து கொண்டனர். இக்கண்காட்சி இன்று (8) நிறைவு பெறவுள்ளது.

புதிய ஆண்டின் ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டபின் சமகால அரசியல் சம்பந்தமாகவும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவும் புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான நடராஜா ரவிக்குமார், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை விஜேராம இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது...

உடப்பு கரைவலை மீன்வாடியில் தீ விபத்து; உபகரணங்கள் நாசம்

(உடப்பு குறூப், கற்பிட்டி தினகரன் நிருபர்கள்)

உடப்பு, பாரிப்பாடு பகுதியில் அமைந்துள்ள கரைவலை மீன் வாடி ஒன்றில் நேற்று முன்தினம் (6) மாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் பல மீன்பிடி உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

உடப்பு இராமன் ஜெயசீலனுக்குச் சொந்தமான இந்த மீன்பிடி வாடி, அன்றைய தினம் மாலையில் தீப்பிடித்துள்ளது. காவல்காரன் அருகில் சென்றிருந்த வேளையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. மீன்பிடி வாடியில் வலை இழுக்கும் கயிறு (கம்மான்) 20, மீன் பிடிக்கும் மடி 19, மீன் பிடிக்கும் சல்வாய் 1, படகு என்ஜின் 1, அத்துடன் வாடி முற்றாக எரிந்துள்ளது. இவை, சுமார் 40 இலட்சத்துக்கும் மேற்பட்டவை என மதிப்பிடப்படுகிறது.

இவை சம்பந்தமாக உடப்பு பொலிசில் முறைப்பாடு ஒன்றும் சம்பந்தப்பட்டவர்களினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை உடப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2024 ஜனவரி 8 திங்கட்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 05.03
லுஹர் - 12.18
அஸர் - 03.39
மஃரிப் - 06.09
இஷா - 07.24

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் மார்கழி 24
ராகுகாலம் : காலை : 8.02 - 9.32வரை
சுபநேரம் : பகல் : 12.32 - 2.02வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

தீவிரமான அரசியல் பரபரப்புடன் உதயமாகியுள்ள 2024 புத்தாண்டு!

தேர்தல் குறித்த எதிர்பார்ப்புடன் 2024 ஆம் ஆண்டு பிறந்திருப்பதால் அரசியல் களம் படிப்படியாகச் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. தேர்தல் கூட்டணியை புதிதாக உருவாக்குதல், கட்சித் தாவல்கள் என்பன ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளதால், அரசியல் களம் படிப்படியாக மேலும் சூடாகி வருகின்றது.

அரசியலமைப்புக்கு அமைய 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 18ஆம் திகதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதன் அடிப்படையில் பார்க்கும்போது, ஏறத்தாழ தேர்தலுக்கு இன்னமும் 285 நாட்களே காணப்படுகின்றன.

அதேநேரத்தில், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்றுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அரசியல் களத்தில் பேச்சுக்கள் அடிபடுகின்றபோதும், எந்தத் தேர்தலை ஜனாதிபதி முதலில் நடத்துவதற்கு விரும்புகின்றார் என்பது இன்னமும் உறுதியாகத் தெரியவில்லை.

எவ்வாறிருந்த போதிலும், அரசியல் கட்சிகள் யாவும் தம்மை ஏதாவது ஒரு தேர்தலுக்குப் பலப்படுத்தும் காரியத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

தேர்தலை இலக்கு வைத்து கூட்டணிகளை அமைக்கும் பணிகள் தீவிரமடைந்திருப்பதுடன், எதிர்கால அரசியலைக் கருத்தில்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கட்சித் தாவல்களையும் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தாம் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

மறுபக்கத்தில், பொதுஜன பெரமுன சார்பில் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் தயாராக இருப்பதாகவும், பொருத்தமானவரைக் களமிறக்கப் போவதாகவும் அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிடுவார் எனக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றபோதும், இது பற்றி அவர் இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

நாடு மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தபோது அதனை மீட்பதற்குத் தானாக முன்வந்து கடுமையான முயற்சியின் ஊடாக ஓரளவுக்கு உறுதியான நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டாயம் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக இருந்து வருகிறது.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி, தெரிவுசெய்யப்படும் பாராளுமன்றத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வரவுள்ளார் என்ற சந்தேகங்கள் முன்னர் வெளியிடப்பட்டு வந்தன. எனினும், இந்த சந்தேகங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும், அதனைத் தொடர்ந்து மிக விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப் படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது கூறியிருந்தார்.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்குப் பதிலாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார கடந்த வாரம் ஊடகங்களுக்கு உறுதியளித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவளிக்க ஒரு பெரிய கூட்டணியை அமைக்கத் தொடங்கியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி தரப்புடன் ஏராளமான எம்.பிக்கள் ஒன்றிணைந்து பாரியதொரு தேர்தல் கூட்டணியை உருவாக்கும் ஏற்பாடுகள் ஆரம்பம்!

'இன்றைய அரசியல் நிலைமையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தேர்தலில் போட்டியிடுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கவில்லை' என்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கேபண்டார

'நாங்கள் பல அரசியல் கட்சிகளுடன் பேசுகிறோம், மேலும் பலர் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேரிதலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க எங்களுடன் இணைவார்கள்' என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

அவர் இன்னும் ஒரு படி மேலே சென்று "ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச இந்தக் கட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கவில்லை" என்றும் கூறியிருந்தார்.

'காலம் செல்லச் செல்ல தனக்கு ஒரு வலிமையான அணி இல்லாமல் போய்விடும் என்பதால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை' என்றார் அவர்.

இந்தக் கூற்றுக்கள் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்களை குழப்பம் டையச் செய்யும் நோக்கில் முன்வைக்கப்படும் கருத்துக்களாக இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சி, தெரிவுசெய்யப்பட்ட ஐக்கி மக்கள் சக்தி உறுப்பினர்கள், பொதுஜன பெரமுன மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக ஜனாதிபதி பரந்ததொரு கூட்டணியை உருவாக்க உத்தேசித்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர, இந்தக் கூட்டணியின் கணிசமான அங்கமாக பொதுஜன பொரமுனவின் அதிருப்தியடைந்த பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமையவுள்ளது.

இந்தக் குழுவை ஒழுங்கமைக்கும் பணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக இருக்கும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவிடம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தக் கூட்டணியில் தலைமைப் பொறுப்பு முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கூட்டணி அண்மையில் இராஜகிரியவில் உள்ள அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. நிமல் லான்சா, அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் பிரியங்கர ஜயரட்ன ஆகியோர் தற்போதைக்கு இதில் அங்கம் வகிக்கின்றனர்.

ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் மேலும் பலர் இதில் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா குறிப்பிடுகையில், 'பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படும் என்பது எதிர்க்கட்சிகளின் கருத்து. ஜனாதிபதித் தேர்தலுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுப்பார் என்பதே எனது கருத்து. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தாத அக்கட்சியில் போட்டியிட்ட 71 பேர் பாராளுமன்றத்தில் உள்ளனர். அந்த 71 பேரை பிரதிநிதித்துவப்படுத்தி புதிய கூட்டணியை உருவாக்க பாராளுமன்றத்தில் புதிய பேச்சை தொடங்கினோம். பாராளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டணியையும், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிக எண்ணிக்கையிலான கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டணியையும் எங்களால் உருவாக்க முடியும்' என்றார்.

இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள கூட்டணி பெரும்பாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும். இந்தக் கூட்டணியில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் எதிர்காலத்தில் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

சம்யுக்தன்

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து அதிருப்தியாளர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதால் தேர்தலை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள முடியாமல் பலவீனமடைகிறது ஐ.ம.ச!

தபால் திணைக்களத்துக்கு கிழக்கிலிருந்து கிடைக்கும் வருவாயை அதிகரிப்பதே இலக்கு

மேல் மாகாணத்திலிருந்து 54 வீத வருமானம்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

தபால் திணைக்களத்துக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை பத்து வீதமாக அதிகரிக்க வேண்டுமென அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.கிழக்கு மாகாண தபால் நிர்வாகக் கட்டடத் தொகுதி 45 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தபால் திணைக்களத்துக்கு கிடைக்கும் வருமானத்தில் 54 வீதமான வருமானம் மேல் மாகாணத்திலிருந்தே கிடைக்கிறது. கிழக்கு மாகாணத்திலிருந்து கிடைப்பது ஏழு அல்லது ஆறு வீதமாகவே உள்ளது. இது 10 வீத இலக்காக அதிகரிக்கப்பட வேண்டும். இதற்காகவே படித்து பட்டம் பெற்ற ஒருவரை கிழக்கு மாகாண தபால் மாஅதிபராக நியமித்துள்ளோம். அஸ்லம் அவர்கள் இதனை பத்து சதவீதமாக மாற்றியமைக்க வேண்டும் அதற்காகவே இதனை அவரிடம் கையளித்திருக்கிறோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்றைய நாட்களில் பிரதமராக இருந்தபோது, இக்கட்டடம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்த நடவடிக்கைகள் மந்தகதியிலேயே நடைபெற்றன.

06

இ.போ. சபைக்கு 66 வருடம் பூர்த்தி அநுராதபுரத்தில் விசேட சமய நிகழ்வு

இலங்கை போக்குவரத்து சபையின் 66 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, அநுராதபுரம் ருவன்வெலி சாயவில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் விசேட சமய நிகழ்ச்சி நடைபெற்றது.

நாட்டுக்கும், மக்களுக்கும், நிறுவனத்துக்கும் ஆசி வழங்கும் முகமாக ருவன்வெலிசாயவில் கப்ருக்க பூஜை நடத்தப்பட்டதுடன், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து இ.போ.ச டிப்போக்களிலிருந்தும் ருவன்வெளி சாயவிற்கு 750 க்கும் மேற்பட்ட அட்டபிரிக்கர சமர்ப்பிக்கப்பட்டு விசேட ஆசிர்வாத பூஜையும் நடைபெற்றது.

ருவன்வெலிசாய சைத்தியராமாதிபதி, சாஸ்த்ரபதி வணக்கத்துக்குரிய ஈத்தலவெட்டுனுவெவே ஞானதிலக நாயக்க தேரரின் ஆலோசனைக்கமைய, வத்தேவெவே சுமண நாயக்க தேரரால் சமய வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

06

சுதந்திர தினத்துக்கு முன்னதாக அரசியல் கைதிகளை விடுவிக்கவும்

(யாழ். விசேட நிருபர்)

சிறையில் வாடும் 12 அரசியல் கைதிகளையும் சுதந்திர தினத்துக்கு முன் விடுதலை செய்யுமாறு, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு நோக்கிய விஜயத்தை இலக்காகக் கருதி, கடந்த வாரம் முதல், சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கையெழுத்து வேட்டையை, குரலற்றவர்களின் குரல் அமைப்பு முன்னெடுத்திருந்தது. மிகநீண்ட காலங்களாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகளையும், எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னதாக விடுதலைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி மதத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்,

06

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 24ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 24

குறள் தரும் சிந்தனை

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்

குணத்தில் கயவராக இருப்பர். ஆனால், நல்லவரைப் போலக் காட்டிக் கொள்வார். மனிதர்களிடம் மட்டும்தான் இப்படி இருவகையான நிலைகளை ஒரே உருவத்தில் காண முடியும்.

பொருளாதார முன்னேற்றத்திற்கு மதநல்லிணக்கத்தின் அவசியம்

வடமாகாணத்திற்கு நான்கு நாட்கள் விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அம்மாகாணத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். சர்வமதத் தலைவர்கள், கல்வி சமூகத்தினர், சிவில் சமூகத்தினர், சட்டத்தரணிகள், கலைஞர்கள், தொழில்முனைவோர் மற்றும் தொழிலதிபர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இந்தச் சந்திப்புக்களின் போது பல்வேறு தரப்பினரும் தாங்கள் முகம்கொடுத்துள்ள பல்வேறு பிரச்சினைகளையும் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்த அதேநேரம், அவர்களது எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

அத்தோடு பொருளாதார ரீதியில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவது குறித்தும் கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, நாட்டின் அபிவிருத்திக்கு வடபகுதியின் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் எடுத்துக் கூறியுள்ளார். குறிப்பாக நாட்டின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் கல்வி முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளுக்கும் இடமளிக்கப்படும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட சர்வமதத் தலைவர்களுடனான சந்திப்பின் போது, 'இனம் மற்றும் மதம் என்ற அடிப்படையில் பிளவுபட வேண்டிய அவசியமில்லை' என வலியுறுத்திய ஜனாதிபதி, 'அனைத்து மக்களும் உரிமைகளைப் பெற்றுக் கொண்டு ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு மதநல்லிணக்கம் மிகவும் முக்கியமானது' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதார ரீதியில் நாடு முன்னேற்றமடைய வேண்டும். மக்களுக்கு வளமானதும் சுபீட்சமானதுமான வாழ்வு கிடைக்கப்பெற வேண்டும். அதற்கு பொருளாதார அபிவிருத்தி இன்றியமையாதது. அதேநேரம் இனியும் பின்தங்கிய பொருளாதார நாடாக இருக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் நாட்டின் மீது உண்மையான பற்று கொண்டவர்கள் உள்ளனர்.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதி முன்வைத்திருக்கும் இந்த வலியுறுத்தலை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். பல்லின மக்கள் வாழும் நாடொன்றின் அபிவிருத்திக்கும் பொருளாதார சுபீட்சத்திற்கும் இன, மத ரீதியிலான பார்வையும் பிளவும் எவ்விதத்திலும் நன்மை பயக்காது. அவை பொருளாதார முன்னேற்றத்திற்கு தடையாகவே இருக்கும். இதற்கு உலகில் நிறையவே அனுபவங்கள் உள்ளன. மதநல்லிணக்கம், சக வாழ்வு நிலவும் பல்லின மக்கள் வாழும் நாடுகள் அனைத்தும் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக இந்நாடு சுதந்திரமடையும் போது ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தில்தான் இருந்தது. ஏனைய நாடுகள் இலங்கையை விடவும் பின்தங்கிய நிலையில் இருந்தன. ஆனால் அந்த நாடுகளில் பெரும்பாலானவை கடந்த ஏழு தசாப்த காலப்பகுதியில் இலங்கையை விடவும் பல மடங்கு முன்னேற்றமடைந்து விட்டன. அவற்றில் பல்லின மக்கள் வாழும் பல நாடுகளும் உள்ளன.

இதன் ஊடாக பல்லின மக்கள் வாழும் நாடொன்றின் முன்னேற்றத்திற்கு இன, மத ரீதியிலான ஒற்றுமையினதும் சகவாழ்வினதும் அவசியம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

இந்த நிலையில் இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை காணப்படுகிறது. அதன் முக்கியத்துவமும் பரவலாக உணரப்பட்டிருக்கிறது. நாடென்ற ரீதியில் இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒற்றுமையாக முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். அதற்கு சர்வமதத் தலைவர்களும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். பல்லின மக்கள் வாழும் நாடொன்றின் பொருளாதார வளர்ச்சிக்கு மதநல்லிணக்கம் இன்றியமையாததாகும்.

இப்பின்னணியில்தான் ஜனாதிபதி, 'நாட்டின் சமய, கலாசார விழுமியங்களை முன்வைத்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்' எனக் குறிப்பிட்டிருக்கிறார். அதனால் நாட்டின் முன்னேற்றத்திற்கான ஆக்கபூர்வ வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதற்கு சர்வ மதத் தலைவர்களின் பங்களிப்பும் இன்றியமையாததாகும்.

ஆகவே சர்வமத நல்லிணக்கம் நிறைந்த பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும் பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதியில் பொருளாதார மறுமலர்ச்சிக்கு வித்திடும். மக்கள் வளமான பொருளாதார வாழ்வைப் பெற்றுக்கொள்ள அது வழிவகுக்கும். அதனால் மதநல்லிணக்கத்துடன் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கி பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிப்பது மிகவும் முக்கியமானது. மக்களின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு பத்தாவது வருடமாக தமிழ்நாட்டில் கோலாகலம்

உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு(10 ஆவது ஆண்டு) கடந்த 6 ஆம் திகதி தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆறுமுகம் தலைமையில் உலகத் தமிழ் வம்சாவளி அமைப் பின் தலைவர் செல்வகுமார் வரவேற்புரை நிகழ்த்த, அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, வெளி நாடுவாழ் தமிழர் நலன்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன், மலேசியாவைச் சேர்ந்த பினாங்கு மாநில வீட்டு வசதித்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சுந்தரராஜு, நாடாளுமன்ற உறுப்பினர் யுனேசுவரன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் குணசேகரன் குமரன், குமரேசன், வி.ஐ.டி துணைத் தலைவர் செல்வம் ஆகியோரும்ம் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

இந்நிகழ்வில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் கலந்து கொண்ட தமிழ் பாரம்பரிய மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள், பேராளர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மிக்ஜாம் புயலின் போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மலேசியாவில் இருந்து உதவி செய்த டத்தோ ஸ்ரீ ஹரிஹரன், KPY பாலா ஆகியோருக்கு சாதனையாளர் விருதும், இலங்கையைச் சேர்ந்த பிரகாஷ் அவர்களுக்கு தமிழ் நிறுவன விருதும் வழங்கப்பட்டன.

சிறந்த ஊடக சேவைக்கான விருது மலேசியா நவநீதனுக்கு வழங்கி வைக்கப்பட்டது. உணவு இடைவெளிக்குப் பின்னர் கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்ட சொற்போர் எனும் பேச்சுப்போட்டி நடைபெற்றது. வெற்றியாளர்களுக்கு துணை வேந்தர் ஆறுமுகம், பதிவாளர் செந்தில்குமார் ஆகியோர் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வை உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.

கல்முனை மாநகரசபை பிரதேசத்தில் முன்னோடி வேலைத்திட்டங்கள்

மாநகரசபை ஆணையாளர் அஸ்மி நடவடிக்கை

கல்முனை மாநகரசபையை மக்களின் விருப்பத்துக்குரிய சபையாகவும், தேசிய ரீதியில் முன்னணி மாநகர சபையாகவும் அபிவிருத்தி செய்வதில் இலங்கை நிர்வாக சேவை (முதலாம் தரம்) சிரேஷ்ட உத்தியோகத்தரும், கல்முனை மாநகர சபை ஆணையாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார். அதற்காக அவர் பல்வேறு முன்னோடி வேலைத்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

'பசுமை நகர்' வேலைத்திட்டத்தின் கீழ், கல்முனை மாநகர பிரதான வீதி மத்தியில் மரக் கன்றுகளை நட்டு, அழகுபடுத்தும் வேலைத்திட்டம் ஏற்கனவே ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத் திட்டத்தின் கீழ், பொருத்தமான இடங்களில் பழமரம் மற்றும் நிழல்மரக் கன்றுகள் நடப்படவுள்ளன.

மாநகர சபை நிர்வாகப் பிரிவில் தினசரி அகற்றப்படும் கழிவுகளை தரம் பிரித்து அகற்றும் துரித வேலைத்திட்டம் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது. ஆரம்பக் கட்டமாக பாடசாலைகளில் இவ்வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பாடசாலை அதிபர்களுக்கு விரிவான விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் நடைமுறைப்படுத் தப்படும் தரம்பிரிக்கப்பட்ட திண்மக் கழிவகற்றல் வேலைத்திட்டம், விரைவில் குடியிருப்புப் பிரதேசங் களுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது. இதற்கான அறிவுறுத்தல், வழிகாட்டல் ஆலோசனைகளை மாநகரசபை வழங்குவதுடன், கழிவகற்றலுக்குத் தேவையான பைகளையும் மாநகர சபை விநியோகிக்கவுள்ளது.

அத்துடன் கல்முனை மாநகர சபை நிர்வாகப் பிரிவிலுள்ள வீதிகளுக்கு,பெயரிடும் பணி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கல்முனை மாநகர மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான இப்பணியை நடைமுறைப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் நிறைவு பெற்றுள்ளன. இப்பணிக்கு அமானா வங்கி அனுசரணை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, கல்முனை மாநகர பஸ்நிலையத்தில் நவீன முறையிலான கழிவறை வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. இதற்கான பணிகளும் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. கல்முனை பஸ்நிலையத்திற்கு நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் பஸ்வண்டிகள் வருகை தருகின்றன. அதேபோன்று, 24 மணிநேரமும் பயணிகள் நடமாட்டம் காணப்படுகின்றமையால், அவர்களுக்குத் தேவையான அடிப்படை கழிப்பறை வசதிகளை வழங்க வேண்டியது அவசியமாகும்.

இவைதவிர, கல்முனை வர்த்தகர்களின் குறைகள் நிவர்த்திக்கப்படவுள்ளன. கல்முனை பொதுச்சந்தையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்திக்கும் நோக்கில் கல்முனை வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை இடம் பெற்றுள்ளது. இதுதொடர்பில் நீண்டகாலத் திட்டமொன்றை வகுத்து நடைமுறைப்படத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரை அபிவிருத்தி செய்து, அழகுபடுத்தும் வேலைத்திட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரினதும் உதவி, ஒத்துழைப்பு கிடைத்துள்ளமை வரலாற்றுப் பதிவாகும். அதற்காக மாநகர ஆணையாளர் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன் என்கிறார் ஏ.எல்.எம். அஸ்மி.

பொத்துவில் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆணையாளர் அஸ்மி சிரேஷ்ட சட்டத்தரணி ஆதம்லெவ்வை_ ஹலீமா தம்பதியினரின் புதல்வராவார்.

முகம்மட் றிஸான்...✍
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

கறைபடியாத அரசியல்வாதியாக விளங்கியவர் பொத்துவில் முன்னாள் முதல்வர் உதுமாலெவ்வை

ஒன்பதாவது நினைவுதினம் இன்று

அம்பாறை மாவட்டம் பொத்துவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த எம்.ஐ. உதுமாலெவ்வை காலமாகி இன்றோடு (08.01.2024) ஒன்பது வருடங்கள் நிறைவு பெறுகின்றன.

அக்கரைப்பற்று மண்ணில் 13.03.1935 ஆம் ஆண்டு பிறந்த மர்ஹூம் உதுமாலெவ்வை ஆரம்பக் கல்வியை அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியிலும் பின்னர் மட்டக்களப்பு மத்திய கல்லூரியிலும் பயின்றார். பணிசெய்யும் ஆசிரியத் தொழிலை தேர்ந்தெடுத்த இவர், இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் இப்பணியை மேற்கொண்டார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபராக 1979 ஆம் ஆண்டு முதல் பணியாற்றிய காலம் இக்கல்லூரியின் ஒரு பொற்காலமாகும். அரசியல்வாதிகளுடன் நட்பு றவு பேணி தனது பாடசாலைத் தேவைகளை அவ்வப்போது நிறைவேற்றி வந்தார். அத்தோடு மாத்திரம் நின்றுவிடாது ஊர் தேவைகளையும் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்துவந்தார்.

அக்காலகட்டத்திலேயே அவருக்கு நியமனப் பட்டியல் மூலம் 31.03.1983 இல் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்புக் கிட்டியது.

1989 ஆம் ஆண்டுவரை பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த இவர், கிழக்கிலேயே முதலாவது தேசிய பாடசாலையாக தான் கடமையாற்றிய பாடசாலைய தரம் உயர்த்த அயராது உழைத்தார். அக்கரைப்பற்று கல்விப்பணிமனையை ஸ்தாபித்தமை, ஆண்கள் பாட சாலையை வளவு வாங்கி விஸ்தரித்தமை, ஆறு பாடசாலைகளை புதிதாக உருவாக்கியமை, நான்கு பாடசாலைகளை தரமுயர்த்தியமை, மின்சாரதிட்டங்களை விஸ்த்தரித்தமை, நீதிமன்றக்கடிடமொன்றை ஸ்தாபித்தமை, வாசிகசாலை ஒன்ற உருவாக்கியமை, பிரதேச செயலகம் போன்ற அரச நிறுவனங்களுக்கு நிரந்தரமான கட்டடங்களை நிர்மாணித்துக் கொடுத்தமை போன்ற பணிகளையும் மேற்கொண்டதோடு விவசாய, நீர்ப்பாசன அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொண்டார்.

மக்களின் பல்வேறு குறைகளை தெரிந்து கொள்வதிலும், அவற்றுக்குத் தீர்வு காண்திலும் அவர் பாடுபட்டார்.

தனது தேவைகளை நிவர்த்தி செய்ய வரும் ஒவ்வொருவரினது ஆதங்கங்களையும் மிகவும் பொறுமையோடு செவிமடுப்பார். தொலைபேசியில் முடிக்கக்கூடியவற்றை அவ்வப்போதே செய்துகொடுப்பார். பெரிய விடயங்களாயின் காரியலயங்களுக்கு அழைத்துச் செல்வார். அமைச்சு மட்டங்களிலான விடயங்களாயின் கடிதங்கள் மூலம் தொடர்புகளை மேற்கொள்வார். பின்னர் அமைச்சுகளுக்கும் செல்வார்.

அக்கரைப்பற்றில் முதன் முதலாவதாக பாலர் பாடசாலை ஒன்றை அக்கரைப்பற்று மூன்றாம் குறிச்சியில் ஆரம்பித்தார். இப்பிரதேசத்தில் முதன்முதலாக ஜனாஸா நலன்புரிச்சங்கமொன்றை ஸ்தாபித்து இயங்கவைத்த பெருமையும் அவரையே சாரும்.

மர்ஹூம் உதுமாலெவ்வை அடக்கமான அமைதியான கறைபடியாத அரசியல்வாதி ஆவார்.

கலாபூசணம் எம்.எ.பகுர்தீன்...✍
(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

ஆயிரம் யாத்திரிகர் ஹஜ், உம்ரா செல்ல சவூதி அரசினால் இலவச வாய்ப்பு

இலங்கையர்களுக்கும் சந்தர்ப்பம்

அண்மைய காலங்களில் சவூதி அரேபிய அரசாங்கம் மேற்கொண்ட பாராட்டத்தக்க நடவடிக்கைகளாக இரண்டு ஹரம்களையும் விஸ்தீரணப்படுத்தல், அதிவேக ரயில் சேவையினை ஆரம்பித்தல், மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச விமான நிலையத்தைத் திறந்துவைத்தல், ஹஜ் யாத்திரிகர்களுக்கான கடவுச்சீட்டு, போக்குவரத்து வசதிகள், உணவு, குடிபானம், வதிவிட வசதிகளை மேம்படுத்தல் போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

இஸ்லாமியர்கள் சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதற்கு பேராவல் கொள்ளும் பிரதான இடங்களாக இரு ஹரம்களும் திகழ்கின்றன. அதற்கான பிரதான காரணமாக ஹஜ், உம்ரா பயணங்களை நிறைவுசெய்தல், இறையில்லத்தில் இஃதிகாப் இருத்தல், மஸ்ஜிதுன் நபவியைத் தரிசித்தல் மற்றும் பன்மடங்கு நன்மைகளை அள்ளித்தரும் தொழுகைகளைத் தொழுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பெரும்பாலான முஸ்லிம்களின் கனவு அப்புண்ணிய பூமியைத் தரிசிக்க வேண்டும் என்றிருந்தாலும், பொருளாதார மந்த நிலையின் காரணமாக பலரின் கனவு நனவாகாமலேயே சென்று விடுகின்றது. எனினும் அண்மைய காலங்களில் சவூதி அரேபிய அரசாங்கம் பல நாட்டினருக்கும் இலவசமாக ஹஜ், உம்ரா செய்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது பாராட்டத்தக்க அம்சமாகும்.

இவ்வருடம் உலகின் உலக நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 1000 யாத்திரிகர்களுக்கு சவூதி மன்னரின் நிதியில் இலவசமாக ஹஜ், உம்ரா மற்றும் ஸியாரத் செய்வதற்கான வாய்ப்பு வழங்குவதற்கு சங்கைக்குரிய இரு ஹரம்களினதும் பணியாளர், சவூதி அரேபிய மன்னர் ஸல்மான் இப்னு அப்தில் அஸீஸ் இணக்கம் தெரிவித்துள்ளதாக சவூதி அரேபிய தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இதனை முன்னிட்டு சவூதி அரேபியாவின் இஸ்லாமிய விவகாரங்கள், அழைப்பு மற்றும் வழிகாட்டலுக்கான அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் இப்னு அப்தில் அஸீஸ் ஆலுஷ் ஷைஹ் கருத்துத் தெரிவிக்கையில், இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் இத்தகைய பெரும் சேவை புரிவதற்கும், உலகின் நாலாபுறங்களிலிமுள்ள முஸ்லிம் களிடத்தில் இஸ்லாமிய ஐக்கியத்தை ஏற்படுத்த முனைவதற்கும் சங்கைக்குரிய இரு ஹரம்களினதும் பணியாளர், சவூதி அரேபிய மன்னர் ஸல்மான் இப்னு அப்தில் அஸீஸ் ஆலு ஸுஊத் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இந்த இலவச ஹஜ், உம்ரா செயற்திட்டத்திற்கு உலகின் பல நாடுகளிலிருந்தும் இஸ்லாமிய பிரபலங்கள், இஸ்லாமிய பேச்சாளர்கள், போதகர்கள், மத்ரஸாக்கள் மற்றும் பல்கலைக்கழக விவிவுரையாளர்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் சேவை செய்வதற்கும், இஸ்லாமிய மார்க்கத்தின் விழுமியங்கள் மற்றும் கொள்கைகளைப் பரப்புவதற்கும், வெறுப்பு மற்றும் தீவிரவாதத்தை எதிர்கொள்வதற்கு பங்களிக்கும் பல்வேறு துறைகளில் இஸ்லாமிய விவகார அமைச்சு பெற்றுள்ள மகத்தான, தொடர்ச்சியான ஆதரவை மதிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு புனித பள்ளிவாசல்களின் பணியாளர் மற்றும் முடிக்குரிய இளவரசருக்கும் அவர்கள் உலகாவிய ரீதியில் முஸ்லிம்களுக்கு வழங்கும் மகத்தான சேவைகளுக்காகவும், முஸ்லிம்களின் ஒற்றுமைக்காகவும், அந்நாட்டில் பாதுகாப்பு மற்றும் செழுமையை நிலை நிறுத்துவதற்கும், யாத்திரிகர்களின் ஹஜ், உம்ரா வணக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் அவர் வேண்டிக் கொண்டார்.



அஷ்ஷேக்
ளபர் இப்னு முஹம்மத் அல்அஜ்வாத் ...✍
(பஹ்ஜி, மதனி)

மானுடவியல்

148

அடியவர் வந்து கேட்டால் என்ன செய்வேன்? அவரின் உடல் குளிரில் நடுங்க காரணமாகி விட்டேனே.' அடியவருக்கு தீங்குசெய்து பெரும்பாவி ஆகி விட்டேனே என மனதிற்குள் தினைத்து மருவி உருகினார்.

அழுக்குக் கச்சையாக இருந்தாலும் குளிரிலிருந்து அவரைக் காக்குமே? நான்தான் அவரிடம் வலுக் கட்டாயமாக வெளுத்து உலர்த்தி தருகிறேன் என்று பிடுங்கினேன் இப்பாவம் எம்மை சும்மாவிடாது. அடியவரை நான் எவ்வாறு காண்பேன்? அடியாருக்கு துன்பம் இளைத்த நான் இம்மண்ணில் வாழ்வதைவிடவும் உயிரை விடுவதே சரி' என்று எண்ணினார்.

துணி துவைக்கும் பாறையில் தன்னுடைய தலையை மோதிக்கொள்ள எண்ணி தலையைச் சாய்த்தார். அப்போது அப்பாறையின் அருகே ஏகாம்பரநாதர் தம்முடைய மலர்கரத்தால் திருக்குறிப்புத் தொண்டர் தலை பாறையில் மோதாமல் தடுக்கச் செய்தார்.

திருக்குறிப்புத் தொண்டர் தொண்டுக்கு உறுதுணையாக இருந்த துணி வெளுக்கும் பாறை, இறைவனின் திருக்கரம் எழுந்தருளிய ஆலயமாக மாறியது.

மேகங்கள் மறைந்தன. பொன்னொளி எங்கும் பரவியது. சிவனார் உமையம்மையுடன் இடபவாகனத்தில் எழுந்தருளினார்.

இறைவன் "உலகம் முழுவதும் உன்னுடைய திருத்தொண்டின் பெருமையை அறிவித்தோம். நீ எம்முடன் இருந்து இன்புறுவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

திருக்குறிப்புத் தொண்டர் நிலைத்த வீடுபேறாகிய சிவபுரத்தில் மூழ்கி இன்புற்று இருந்தார்.

அறுபத்துமூன்று நாயன்மார்களிலும் ஒருவராக இறைவனால் அருளப்பெற்றார்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் குருபூசை சித்திரை மாதம் சுவாதி நட்சத்திரத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது.

திருகுறிப்புத்தொண்ட நாயனார் திருவடிகள் போற்றி

அம்மையப்பன் மலரடிகள் போற்றி போற்றி.

(தொடரும்)

கலாநிதி சிவஶ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

இன்றும் நம்மோடு சூட்சும வடிவில் இருக்கும் தெய்வம் அனுமன்

அஞ்சனையின் மைந்தனாகத் தோன்றியவனும், ஐம்புலன்களை வென்றவனும், சூரியதேவனிடம் வேதங்களின் பொருள் உணர்ந்தவனும், ராமபிரானின் மலரடிகளை மறவாத மனம் கொண்டவனும், நித்திய சிரஞ்சீவியாகத் திகழ்பவர் என்றும் அனுமனைப் போற்றுகிறார் கம்பர்.

நித்திய சிரஞ்சீவியாகத் திகழும் அனுமன் இன்றும் நம்மோடு சூட்சும வடிவில் இருக்கும் தெய்வம். மனமுருகிப் பிரார்த்திப்பவர்க்கு பிரத்யட்சமாகத் தோன்றி அருள்புரியும் தெய்வம். எங்கெல்லாம் ராமநாமம் ஒலிக்கிறதோ, அங்கெல்லாம் தோன்றுபவர்.

மார்கழி மாதம் மூல நட்சத்திரத்தில் அவதரித்தவர் அனுமன். அன்றைய தினம் அனுமன் ஜயந்தி அனைத்துக் கோயில்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.

'அறிவு, ஆற்றல், இசை ஞானம், உடல் வலிமை, துணிவு, புகழ், அடக்கம், ஆரோக்கியம், சொல்லாற்றல்' என்று அனைத்துக்குமே எடுத்துக்காட்டாக விளங்குபவர் அனுமன் என்று கம்பர் கூறுகிறார்.

அனுமனின் வரலாறு...

திரேதாயுகத்தில் வாழ்ந்த சிவபக்தனான குஞ்சரன் என்பவர் குழந்தை வரம் கேட்டு ஈஸ்வரனை நோக்கித் தவம்புரிந்தார். 'சர்வலட்சணமும் கொண்ட அழகிய மகள் உனக்குப் பிறப்பாள். அவளுக்குப் பிறக்கும் மகன் எனது அம்சமாகத் தோன்றி வலிமையும், வீரமும் கொண்டு சிரஞ்சீவியாக வாழ்வான்' என்று ஈசன் வரமளித்து மறைந்தார்.

ஈசனின் அருளால் குஞ்சரனுக்குப் பிறந்த மகள், அஞ்சனை என்ற திருநாமம் கொண்டு வளர்ந்தாள். மணப்பருவம் அடைந்த அஞ்சனை, கேசரி என்னும் வானர மன்னரை மணந்துகொண்டாள். திருமணம் முடிந்தும் அஞ்சனைக்குப் புத்திர பாக்கியம் இல்லாமல் இருந்தது. இதனால் எந்நேரமும் ஈசனை எண்ணி கண்ணீர் வடித்தாள்

அஞ்சனை. பக்தியும், நற்குணங்களும் கொண்ட அஞ்சனையின் நல்ல குணங்களை மெச்சி தர்ம தேவதை அவளின் முன்தோன்றி, 'அஞ்சனையே நீ மாலவன் வீற்றிருக்கும் திருவேங்கடமலைக்கு உன் கணவருடன் சென்று தங்கி, ஈசனைக் குறித்து தவம்செய். ஈசன் அருளால் எவராலும் வெல்ல முடியாத அழகிய மகனைப் பெறுவாய்' என்று ஆசி கூறினாள்.

தர்மதேவதை கூறியவாறே திருமலைக்குச் சென்று கடும் தவம் இருந்தாள் அஞ்சனை. பஞ்சபூதங்களும் வியக்கும் வண்ணம் அவள் இருந்த தவம் கண்டு வாயு தேவன் மகிழ்ந்தார். ஈசனின் ஆணைப்படி அஞ்சனையின் தவத்தை மெச்சி வாயுதேவன் ஓர் அற்புதக்கனியைப் பரிசளித்து ஆசிர்வதித்தார். அந்தக் கனியை உண்ட அஞ்சனை கருவுற்றாள். மார்கழி மாத மூல நட்சத்திர நன்னாளில் அனுமன் அவதரித்தார். சிவசக்தி அருளால் தோன்றிய அனுமன், வாயுபுத்திரன், அஞ்சனை மைந்தன், ஆஞ்சநேயன் என்று திருப்பெயர்கள் கொண்டார்.

ஈசனின் அம்சமாகப் பிறந்த அனுமன், எல்லாக் கலைகளிலும் சிறந்து விளங்கி ராமாயணக் காவியத்தில் ஒரு சிறந்த படைத்தளபதியாக விளங்கினார். ஸ்ரீராமரின் குலத்தையே காத்த கடமை வீரராக விளங்கினார். எண்ணிய காரியங்களை வெற்றியாக மாற்றும் ஆற்றல் மிக்க தீரனாக விளங்கினார். இதனால் சகல கடவுளர்களின் ஆசியோடும், வரத்தோடும் நித்ய சிரஞ்சீவி பட்டமும் பெற்றார். எவர் ஸ்ரீராமரையோ, ஆஞ்சநேயரையோ மனமுருகி வேண்டினாலும் அவர்களைக் காக்கும் பெரும் பொறுப்பை ஏற்றார். வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் அனுமன் விரதம் இருப்பது சிறப்பானது.

சகல ஆனந்தங்களையும் அள்ளித்தருபவர் ஆஞ்சநேயர் என்று புராணங்கள் கூறுகின்றன. சிவனையும் திருமாலையும் ஒன்றிணைக்கும் தெய்வமாக விளங்குபவர் ஆஞ்சநேயர், எனவே இவரை வணங்கி அளவில்லாத ஆனந்த நிலையினைப் பெறலாம்.

19510) கடவுளை ஏன் வணங்க வேண்டும்? வணங்கா விட்டால் தான் என்ன?

மூன்று வேளையும் ஏன் சாப்பிட வேண்டும்? சாப்பிடா விட்டால் தான் என்ன? என்று கேட்டால் என்ன பதிலோ, அதுதான் இதற்கும். கடவுளை வணங்குபவன் பாதுகாப்பு உணர்வைப் பெறுகிறான்.

19511) புனரபி ஜனனம் என்றால் என்ன?

நமக்குப் பல பிறவிகள் உண்டு. உயிர் என்றும் அழியாதது. நாம் ஒரு ஊருக்கு அடிக்கடி சென்று வருவது போல நாமும் இப்பூமியில் பிறந்து, பிறந்து இறக்கிறோம். இதைத் தான் "புனரபி' என்கிறார் சங்கரர்.

19512) திருமாலின் மருமகன் யார்?

முருகன்

19513) திருப்புகழில் பாடல் முடிவில் "பெருமாளே' என முடிகிறதே. முருகனுக்கும் பெருமாளுக்கும் என்ன சம்பந்தம்?

19514) முருகன் திருமாலின் மருமகன் அல்லவா?

பெருமாள் என்பது இறைவனுக்குரிய பொதுப்பெயர். சிறப்புப் பெயராகத் திருமாலைக் குறிக்கும். சிவன் விஷ்ணு என்ற பெயர்கள் கூட இலக்கண அடிப்படையில் பொருள் பார்த்தால் எல்லா தெய்வங்களுக்கும் பொருந்தும். குணத்தின் சிறப்பைக் கொண்டு காரணப் பெயராய் தனி ஒரு தெய்வத்தின் திருநாமமாயிற்று.

அருணகிரிநாதர், பேதமின்றி எல்லாக் கடவுளரையும் திருப்புகழில் பாடுவதைக் காணலாம்.

ஆறநெறி நிவுநோடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

19515) அஷ்டமி, நவமி திதிகளில் மங்கள நிகழ்ச்சிகள் நடத்தக்கூடாது. ஏன்?

19516) ஒவ்வொரு திதிக்கும் ஒவ்வொரு தேவதை உண்டு. அந்த தேவதைகள் நற்பலன்களை அளிப்பவர்களாக இருந்தால் அந்தத் திதி, மங்கள நிகழ்ச்சிகளுக்கு உகந்ததாகும். உதாரணமாக வார நாட்களில் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் மங்கள நிகழ்ச்சிகள் நடத்துவதில்லை. காரணம் இவ்விரு கிரகங்களும் பாப கிரகங்கள். இது போல் பதினைந்து திதிகளில் முதலாவதாகிய பிரதமை எட்டாவது அஷ்டமி, ஒன்பதாவது நவமி, பதினைந்தாவது அமாவாசை இந்த நான்கு திதிகளிலும் தீய பலன்களைக் கொடுக்கும் தேவதைகளின் பலம் அதிகம் என்பதால் இந்த நாட்களில் மங்கள நிகழ்ச்சிகள் செய்வதில்லை. அதனால் தான், இந்த திதிகளில் துர்க்கை, பைரவர் போன்ற தெய்வங்களை வழிபடுகிறோம்.

19517) சிவன் கோயிலில் அம்மன் என்றும், பெருமாள் கோயிலில் தாயார் என்றும் அழைக்கக்காரணம் என்ன?

இரண்டுமே "அம்மா' என்ற பொருளைத் தருகிறது. நம்மைப் பெற்றவள் ஒரு தாய். நம்மைப் பாதுகாக்கும் இவள் லோகமாதா. அதாவது, உலகத்துக்கே தாய். இரண்டும் ஒரு பொருள் தருவது தான். இந்துமதம் ஆறாகப் பிரிந்திருந்த காலத்தில், வித்தியாசப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட சொற்கள் தான் இவையே அன்றி, வேறு காரணங்கள் இருக்க சாத்தியமில்லை.

19518) இருமகன்களில் மூத்தவர் மனைவியை இழந்தவர். இளைய மகனுக்கு மனைவி உண்டு. இருவரில் யார் பித்ரு காரியம் செய்ய வேண்டும்?

பெற்றோர் இறந்த சமயம் செய்யும் பித்ரு காரியங்களை மூத்த மகன் தான் செய்ய வேண்டும். ஒரு வருட காரியம் முடிந்த பிறகு தான் இளைய மகன் வருட திவசம் போன்ற காரியங்களைச் செய்யலாம்.

19519) வீட்டில் பகல், இரவு பார்க்காமல் எந்நேரமும் பஞ்சாங்கம் ஜோதிடம் தொழிலாகச் செய்வது சரியா?

சூரியன் அஸ்தமனமான பிறகு பஞ்சாங்கம் ஜோதிடம் பார்க்கமாட்டார்கள். நவக் கிரங்களுக்குத் தலைவன் சூரியன். அவன் மறைந்துவிட்டால் கிரகங்கள் அனைத்திற்குமே பலம் கிடையாது. எனவே இரவில் ஜோதிடம் சொன்னால் பலிக்காது என்பார்கள். இரவில் ஜோதிடம் பார்ப்பதைத் தவிர்ப்பது நல்லது.

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி சுவாமி ஆலயத்தின் புனர்நிர்மாணப்பணிகள் சிறப்பாக இடம்பெற்றுவரும் தருணத்தில் நவக்கிரக்களுக்கான பீடம் அலங்காரத் தேர் வடிவத்தில் சிற்பிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

(படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்)

யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 70

வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாகவும் எதிர் கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களை நம் வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.

அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர் கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது.

பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.

நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான்.

நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை. உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது. வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது.

சுவாமி விவேகானந்தர்....

உலகின் தலைசிறந்த சமயத் தலைவர்களுள் ஒருவராகவும், 19ஆம் நூற்றாண்டின் சிறந்த ஆன்மீக வாதியாகவும் விளங்கியவர் சுவாமி விவேகானந்தர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடனான இவர் வேதாந்த தத்துவங்களை உலகிற்கு தெரியப்படுத்தியவர் ஆவார்.

கல்கத்தாவின் விஸ்வநாத தத்தர் புவனேஸ்வரி அம்மையாரின் தவப்புதல்வராக, 1863, ஜனவரி 12ல் அவதரித்தார். பெற்றோர் இவருக்கு நரேந்திரன் எனப் பெயரிட்டனர்.

இவரது தாய் மொழி வங்காளம், இளம் வயதிலேயே தியானம் பழகினார். சிறு வயதிலேயே மிகுந்த நினைவாற்றல் கொண்டவராகவும், சிறந்த விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தார்.

மிகுந்த பகுத்தறிவாளராகவும் திகழ்ந்த இவர் இசை மற்றும் தியானத்தில் ஆற்றல் கொண்டவராக விளங்கினார்.1879ம் ஆண்டு பள்ளிப்படிப்பை முடித்தவுடன் கல்கத்தாவில் உள்ள மாநில கல்லூரியில் விவேகானந்தர் சேர்ந்தார்.

ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் தத்துவம் பயின்றார். அந்த சமயத்தில் அனைத்து மேற்கத்திய தத்துவங்களையும் அவர் முழுவதுமாகப் படித்தார்.

மேலும் மேற்கத்திய கலாச்சாரம் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வரலாறு ஆகியவற்றினையும் முழுமையாக அறிந்துகொண்டார்.

இளைஞர்களின் மீது அளப்பரிய நம்பிக்கை கொண்டிருந்தார். அதனால் தான் இவர் "சுவாமி விவேகானந்தர் வீரத்துறவி100 இளைஞர்களைத் தாருங்கள் உலகத்தையே மாற்றிக் காட்டுகிறேன்" என்றார். ஒவ்வொரு இளைஞனும் தன்னை முதலில் உயர்த்திக் கொள்ள வேண்டும். அதன்பின் தனக்கு வந்த உயர்வைக் கொண்டு, அதற்குக் காரணமாக இருந்த சமுதாயத்தை உயர்த்த வேண்டும் என்றார் சுவாமி விவேகானந்தர்.

இராமநாதபுரத்தின் மன்னனாக இருந்த பாஸ்கர சேதுபதிக்கு சிக்காகோவில் நடைபெற இருந்த உலக ஆன்மீக மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு வந்திருந்தது.

விவேகானந்தரின் விவேகத்தை உணர்ந்திருந்த மன்னர் அந்த மாநாட்டில் பேச தம்மை விட விவேகானந்தரே சிறந்தவர் என முடிவு செய்தார். அவரது வேண்டுகோளை ஏற்று அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் 1893ஆம் ஆண்டு நடைபெற்ற உலக சமய மாநாட்டில் கலந்துகொண்டார்.

இங்கு விவேகானந்தர் ஆற்றிய உரையின் மதிப்பினை உணர்ந்த பலர் அவருக்கு சீடர்களாக மாறினர். மேலும் 4 ஆண்டுகள் வெளிநாடு சுற்றுப்பயணத்தில் இருந்த அவர் உலகம் முழுவதும் விவேகானந்தா மிஷன் மற்றும் விவேகானந்தா மடம் என்று நிறுவி தனது கருத்துக்களைப் போதித்து வந்தார்.

சுவாமி விவேகானந்தரின் இறப்பு குறித்த எண்ணற்ற கருத்துக்கள் நிலவுகின்றன.

எனினும் தனது சொந்த ஊரான கல்கத்தாவில் பேலூர் எனும் இடத்தில் தனது மடத்தில் 1902ஆம் ஆண்டு ஜூலை 4 நாள் தனது 39ஆவது வயதில் இறந்தார்.

ஐயப்ப சுவாமி தரிசனத்தையிட்டு வாழைச்சேனை கிண்ணையடி சுழலும் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 48 நாட்களாக நடைபெற்றுவந்த மண்டல மகரஜோதி பெருவிழா தீர்த்தத்துடன் நிறைவுற்றது. நேற்றிரவு கருப்பண்ணன் பூசை நடைபெற்றதுடன் தினமும் பஜனை நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு நிகழ்வாக வரலாற்றில் முதல் முறையாக இங்கு ரதோட்சவம் நடைபெற்றது. இதில் பெரும் எண்ணிக்கையிலான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர். கிழக்கு மாகாணத்தில் இந்த ஆலயத்திலேயே ஐயப்ப சுவாமிகளுக்காக ரதோற்சவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. கிரியாஜோதி கலாமணி கிரியாஜோதி திருமுக கலாமணி ஈசான சிவாச்சாரியார் சிவஶ்ரீ மாணிக்கம் குலேந்திரரூப குருக்கள் தலைமையில் அனைத்து கிரியைகளும் நடைபெற்றன. மஞ்சள் மாதா, நாகபூசை மற்றும் கருப்பன் பூசை போன்ற கிரியைகள் இங்கு நடைபெற்றன. இதன்போது பஞ்சாங்க நாட்காட்டியினை கல்குடா வலய சைவ குருமார் சங்கம் வெளியீடு செய்தது.

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

யாழ், சிவில் சமூக நிலைய தலைவருடன் ஜனாதிபதி பேச்சு

வடமாகாணத்துக்கு, நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ். சிவில் சமூக நிலையத்தின் தலைவர் அருண் சித்தார்த்தனுடன் சந்திப்பில் (06) ஈடுபட்டார்.

வடக்கின் சிவில் சமூகத்தில் நிலவும் சாதிப் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இந்தப் பிரச்சினைகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். வடக்கிலுள்ள அரசியல் கட்சிகள் எவ்வாறு செயற்பட்டாலும் சாதிப் பிரச்சினையால் மக்கள் அவதிப்படுவதாகவும், யாழ்ப்பாணத்தை தவிர்த்து கொழும்பில் வாழும் அரசியல்வாதிகள் இப்பிரச்சினை குறித்து குரல் எழுப்பாதது வேதனைக்குரியது எனவும் அருண் சித்தார்த் சுட்டிக்காட்டினார். வடமாகாணத்தில் பல சாதிப் பாடசாலைகள் இருப்பதாகவும், அவற்றுக்கு அடிப்படை வசதிகள் கூட கிடையாது என்றும் சுட்டிக்காட்டிய அருண் சித்தார்த், அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரினார். இவ்வாறான நூறு பாடசாலைகளின் பெயர்களை முன்வைக்குமாறும் அப் பாடசாலைகள் உடனடியாக அபிவிருத்தி செய்யப்படும் எனவும் யாழ்.சிவில் சமூக நிலையத்துக்கு ஜனாதிபதி உறுதியளித்தார். சாதிப் பிரச்சினைகளுக்காக மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காத பிரதேச செயலகங்கள் தொடர்பில் ஆராயவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது குறிப்பிட்டார்.

காணாமல் போனவர்களின் குடும்பங்கள் என்று கூறிச் சங்கங்களை அமைத்துள்ள காணாமல் போனவர்களில் பெரும்பாலானோர், வெளிநாடுகளில் இருப்பதாக யாழ்.சிவில் சமூக நிலையத்தின் தலைவர் அருண் சித்தார்த், இச்சந்திப்பின் போது தெரிவித்தார். காணாமல் போனோர் சங்கங்களைச் சேர்ந்த எவருடனும் விவாதத்துக்கு தாம், தயாராக இருப்பதாகவும், அவர்கள் காணாமல் போனவர்கள் எனக் கூறி வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் சித்தார்த் மேலும் குறிப்பிட்டார். யாழ். மக்கள் எதிர்நோக்கும் ஆனால் கவனத்தில் கொள்ளப்படாத பல பிரச்சினைகள் அடங்கிய கடிதம் ஒன்றையும் யாழ் சிவில் சமூக நிலையத்தினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

'யுக்திய' விசேட சுற்றிவளைப்பு 24 மணி நேரத்தில் 1,135 பேர் கைது

போதைப்பொருள் மற்றும் பாதாள உலக சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் கீழ், கடந்த 24 மணித்தியாலங்களில் 1135 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களுள் 46 சந்தேக நபர்களை தடுத்துவைத்து விசாரணை செய்வதற்கான உத்தரவைப்பெற்றுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை, போதைப்பொருளுக்கு அடிமையாகியோர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இவர்களில், பொலிஸாரால் தேடப்பட்டுவரும் பட்டியலிலுள்ள 58 சந்தேக நபர்கள் உள்ளடங்குவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் 56 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருள் 189 கிலோ ஐஸ் ரக போதைப்பொருள் 5 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா மற்றும் போதைப்பொருள் மாத்திரைகளையும் இதன்போது கைப்பற்ற முடிந்துள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் கடற்படையினரும் இணைந்து தென் பகுதி கடற்பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் பெருந்தொகை போதைப்பொருளை கைப்பற்ற முடிந்துள்ளதாகவும் அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

சுகாதாரம், கல்வி பிரச்சினைகள்...

வடமாகாணத்தை தேசிய பொருளாதாரத்துடன் இணைப்பதற்கு தேவையான சகல ஆதரவையும் வழங்குவதாக தெரிவித்த ஜனாதிபதி, அரச அதிகாரிகள் மற்றும் இளைஞர்களும் தங்களின் பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் காணப்படும் குறைபாடுகள்,பௌதீக மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவது தொடர்பிலான பரிந்துரையொன்றும் கையளிக்கப்பட்டது. யாழ், பல்கலைக் கழக சிரேஷ்ட பேராசிரியர் ஒருவர் இதை, ஜனாதிபதியிடம் கையளித்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க, யாழ். மாவட்ட செயலாளர் எஸ். சிவபாலசுந்தரன் உள்ளிட்டவர்கள் மற்றும் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீ சத்குணராஜா, முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், கல்விசார் ஊழியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இக்கலந்துரையாடலின் பின்னர் யாழ்ப்பாணம் ரியோ ஐஸ்கிரீம் விற்பனை நிலையத்திற்கு விஜயம் செய்து , ஐஸ்கிரீம் சாப்பிட்டார். meetandgreet என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் வடமாகாணத்தில் கல்வி, விளையாட்டு, நாடகம் மற்றும் திரைப்படக் கலை, சமூக ஊடகங்கள் போன்ற துறைகளில் திறமை செலுத்தியோர் கலந்துகொண்டதோடு அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு...

நாளை (09) கூடவுள்ளது. இக்குழுவில் தொழிற்சங்கங்கள், பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் தொழிலமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபாவை பெற்றுக் கொடுக்கும் வகையில், இப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. இதற்கான கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட பெருந்தோட்ட நிறுவனங்களிடம் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே, பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார். இதன் போது கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பில் தமக்கு அறிவிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டிருந்தார். இதற்கிணங்க இதுவரை பெருந் தோட்ட நிறுவனங்கள், இது தொடர்பான தமது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு தெரிவிக்க வில்லை என்பதையும் வடிவேல் சுரேஷ் எம்பி சுட்டிக் காட்டியுள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்...

இவ்வருடத்தின் முதலாவது பாராளுமன்ற அமர்வு, நாளை (09) ஆரம்பமாகி எதிர்வரும் 12 வரை இடம்பெறவுள்ளன.

இதற்கான தீர்மானத்தை கடந்த டிசம்பர் மாதம் 12ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பாவின் தலைமையில் கூடிய பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான குழு தீர்மானித்திருந்தது. அதற்கிணங்க நாளை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடுகிறது.

வாய் மூல விடைக்கான வினாக்கள் இடம்பெற்று தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஸ்தாபிக்கும் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மற்றும் தேசிய நீரியல் திருத்தச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதங்களும் இடம் பெறவுள்ளன.

IMF பிரதிநிதிகள் குழு...

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் சாத்தியமான மட்டத்தை அடைந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள இராஜாங்க அமைச்சர், இந்த வகையில் தொடர்ந்து முன்னோக்கி பயணிப்பதற்கும் மேற்படி கடன் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் தொடர்பிலும் நாட்டுக்கு வருகை தரும் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க வுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆயுள்தண்டனை புலி உறுப்பினர்கள் பொது மன்னிப்பில் கீழ் விடுதலை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஆயுள்தண்டனை அனுபவித்து வந்த மேலும் இரண்டு முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு சிறைக்கைதிகளும் வெலிக்கடை மற்றும் மகசின் சிறைச்சாலைகளில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்தனர்.இந்நிலையில், அவர்களை விடுதலை செய்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களில் பொன்னம்பலம் மதன் என்ற கிருபாகரன் 47 வயதுடையவர் மகசின் சிறைச்சாலையில் ஆயுள்தண்டனை அனுபவித்துவந்த நிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவர் தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறையில் டைக்கப்பட்டவராவார்.

ஏனைய சிறைக்கைதி வெலிக்கடை சிறைச்சாலையில் ஆயுள் தண்டனை அனுபவித்த வந்தார். அவர் 2015 ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஹோர்ட்டன் பிரதேசத்தில் பஸ் வண்டியொன்றுக்குள் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்துடன் அவர் தொடர்புபட்டதாக குற்றவாளியாக தீர்ப்பிடப்பட்டு இவர்,ஆயுள் தண்டனை பெற்றவராவார்.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க இவ்விருவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முதலில் ஜனாதிபதி தேர்தலே நடக்கும் வேட்பாளராக ரணிலே களமிறங்குவார்

நிமல் லான்சா எம்.பி நம்பிகை தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடைபெறும் என்றும் அத்தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவார் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பில் நாட்டு மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், அவரே எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவாரென்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முக்கிய வர்த்தகர் குழுவொன்றை சந்தித்தபின்னர் ஊடக வியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, நிமல் லான்சா எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மீது நாட்டு மக்கள் பெரும் நம்பிக்கை வைத்துள்ளனர்.

மிக மோசமாக வீழ்ச்சியடைந்த நாட்டை அவரே மீண்டும் கட்டியெழுப்பியுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் நிலவுகிறது. வெறுமனே வாய் வீச்சுக்களையும் பொய்களையும் கூறிவருவோர் நாட்டை மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளுவதற்கு முயற்சிக்கின்றனர். அதனால், ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் நிற்கவேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தம்மிக்க பெரேரா என்பவர் சிறந்த தொழிலதிபராக இருந்தாலும் அவர் ஒரு அரசியல்வாதியல்ல. மொட்டுக் கட்சி அவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதாகத் தெரிவித்து வந்தாலும் அதுதொடர்பில் எந்த உறுதியான தீர்மானத்தையும் அக் கட்சி இதுவரை வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு...

அதேவேளை, டெங்கு ஒழிப்பு மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடுகள் தொடர்பில் அறிவிப்பதற்காக அவசர தொலைபேசி இலக்கமொன்றையும் சுகாதார அமைச்சு நேற்று அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கிணங்க பொதுமக்கள் 011 7966366 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, டெங்கு கட்டுப்பாட்டு வேலைத் திட்டம் தொடர்பில் அறிவிக்க முடியும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து 24 மணித்தியாலங்களும் செயற்படும் வகையில், விசேட கரும பீடம் ஒன்றும் சுகாதார அமைச்சில் இதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை பலமானதாக முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விசேட வழிகாட்டலை வழங்கியுள்ளதுடன் இதற்கான பணிப்புரைகளை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண சம்பந்தப்பட்ட துறையினருக்கு வழங்கியுள்ளார்.

'உங்கள் சுற்றாடலை நுளம்புகள் உருவாகாத வகையில் வைத்துக் கொள்ளுங்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த வேலைத் திட்டம் நேற்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது. அந்த வகையில் இவ்வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று, மேல் மாகாணத்தில் சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் பாலித மஹிபாலவின் தலைமையில் நடைபெற்றுள்ளது. பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக் கோனின் வழிகாட்டலில், இதற்கான செயற் திட்டம் நேற்று கொழும்பு கொம்பனி வீதி, வெள்ளவத்தை மற்றும் விஜேராம பிரதேசங்களில் சம காலத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பொலிஸார், முப்படையினர், சுகாதார அமைச்சின் அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் இத்தேசிய வேலைத் திட்டத்தில் இணைந்து செயல்பட்டனர்.

இளம் தமிழ் பெண் வைத்தியர்...

வைத்தியரைச் சுட்டுக் கொன்று விட்டு, தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துள்ளரென்று சந்தேகிக்கப்படுகிறது. எனினும் மூன்றாவது நபர் எவராவது இதில் சம்பத்தப்பட்டுள்ளனரா ?என்பதை அறிவதற்காகப் பொலிஸார் சாட்சிகளிடம் தகவல்களைக் கோரியுள்ளனர்.

கொலைசெய்யப்பட்ட யுவதி முப்பது வயதான ராகவி வரதராஜன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் ஒரு பல் மருத்துவர். உயிரிழந்த ஆணின் விவரங்கள் தெரியவில்லை. அத்துடன், உயிரிழந்தப் பெண் பலமுறை உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாகவும், அது குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

மிக மோசமான குற்றவாளிகள்...

குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் சுட்டிக்காட்டியுள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அவ்வாறான 42 பேர், குற்றச் செயல்களை புரிந்து சில மணித்தியாலங்களில் நாட்டிலிருந்து வெளியேறி வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளமை தொடர்பில் தெரியவந்துள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. அதே வேளை, அவ்வாறான வர்களை இனங் கண்டு கைது செய்யும் வகையில், அந் நாடுகளின் பொலிசாரின் ஒத்துழைப்புடன் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

2024 இல் 23 இலட்சம்...

வருகை தந்துள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக ஜெர்மனி, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் இந்த நான்கு தினங்களுக்குள் குறிப்பிடத்தக்களவு உல்லாசப் பிரயாணிகள் வருகை தந்துள்ளதாகவும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது. அதேவேளை, கடந்த வருடத்தில் மாத்திரம் 14,87,303 உல்லாசப் பிரயாணிகள் நாட்டிற்கு வந்துள்ளதாகவும் இவ்வருடத்தில் அந்த எண்ணிக்கை 23 இலட்சமாக அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல்:...

பொன்னம்பலத்தின் கட்சியுடனும் பேசுவதற்கு முயற்சிப்போமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். வவுனியாவில் ரெலோ அலுவலகத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், ஜனாதிபதி வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது நில அபகரிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக நாம் அவருடன் பேசியிருந்தோம். இன்னும் பல விடயங்களை பேசியிருந்தோம். நாம் கூறும் விடயங்கள் உடனடியாக தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில் சென்றிருந்தோம். ஆனால் அது நடைபெறவில்லை. நாங்கள் கேட்ட விடயங்களுக்கு சரியான பதிலை அவர் தரவில்லை. சம்பிரதாய பூர்வமான ஒரு கூட்டமாகவே இது நடைபெற்றது. பல அபிவிருத்திகள் அறிவிக்கப்பட்டாலுங்கூட அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

இதேவேளை, ஜனாதிபதி வந்துசென்ற பின்னர் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இராணுவமுகாம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அது என்ன தேவைக்காக அமைக்கப்பட்டது என்ற விடயம் தெரியவில்லை. எமது மக்களை அச்சுறுத்துவதற்கான செயற்பாடே அது.

இன்றைய பலன்கள்

(01.01.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

மேஷம்:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். குடும்பத்தில் சலசலப்புகள் ஏற்படாமல் கலகலப்பாக இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது உத்தமம்.

ரிஷபம்:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது உத்தமம். சகோதரருக்குள் இருந்த வாக்குவாதங்கள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

மிதுனம்:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும். குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களின் வருமானம் கிடைத்து மகிழ்ச்சி படுத்தும்.

கடகம்:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் பிரச்சினைகள் உருவாக்கலாம். உத்தியோகத்தில் வேலை பளு அதிகரிக்கும்.

சிம்மம்:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். பெற்றோர் வழியில் சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். கடல் தாண்டி செல்வதில் தாமதங்கள் உருவாகும். புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கன்னி:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். சிறு சிறு ஆரோக்கிய தொல்லைகள் வந்து அலைமோதும். பங்குதாரர்களின் விரோதத்தால் இதுவரை மூடி கிடந்த தொழில் இப்போது திறக்கப்படும்.

துலாம்:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். தம்பதிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கல்யாண முயற்சிகளில் இருந்த தடை விலகும்.

விருச்சிகம்:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். முத்தான தொழில்கள் வாய்க்கும் யோகம் உண்டு. முன்னேற்ற பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். எதிரிகள் பலம் குறையும்.

தனுசு:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். பங்குச் சந்தை,வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வருமானம் திருப்திகரமாக இருக்கும். அதே நேரம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும்.

மகரம்:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். பாக்கியங்கள் வசூல் ஆகி பரவசப்படுத்தும். இடம் பூமி வாங்குவதிலிருந்த பிரச்சினை அகலும்.

கும்பம்:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்கள் வரலாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

மீனம்:
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். வெளி நாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகத்திற்கான அழைப்புகள் வரலாம். பணிபுரியும் இடத்தில் பல நாட்களாக இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

யாழ். ரயில் சேவைகள்...

ரயில் சேவைகள் நடைபெறுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு ரயில் மார்க்கத்துக்கு மேலதிகமாக மட்டக்களப்பு ரயில் பாதையையும் இவ்வருடம் புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஆளுநர் செந்திலின்...

ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாயர்கள் திரண்டிருந்தனர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற வெற்றியாளர்களுக்கு முதல் பரிசாக 1,00,000 ரூபாயும், இரண்டாம் பரிசாக 50,000 ரூபாவும், மூன்றாம் பரிசாக 25,000 ரூபாயும் வழங்கப்பட்டது.

டிசம்பர் மாதத்தில் மாத்திரம்...

இவ்வருடத்திலும் சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கடந்த வருடத்தில் திறைசேரிக்கு 07 பில்லியன் ரூபாவை பெற்றுக் கொடுத்துள்ளது.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியை கவனத்திற் கொண்டு அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கொள்வனவு, அரசாங்க ஊழியர்களின் சம்பளம் உள்ளிட்ட அத்தியாவசிய நடவடிக்களுக்காக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் நடவடிக்கைகளின் மேலதிக நிதியிலிருந்து இந் நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்துக்கு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நான், இந்த அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர், அமைச்சுக்களுக்கு நிதி ஒதுக்கப்படாத ஒரு காலமிருந்தது.இருந்தும் இதற்காக ஒரு விசேஷ அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து கிடைத்த நிதியின் மூலமே இக் கட்டடம் திறந்து வைக்கப்படுகிறது.

இந்த கட்டிடத்தை தனிப்பட்ட நபர்களுக்கு கொந்தராத்து கொடுக்காது, என்னுடைய அமைச்சின் பொறியியல் நிர்வாக பகுதியினருக்கே ஒப்படைத்தேன். தபால் திணைக்களத்தின் ஒரு சில நடவடிக்கைகள், தனி அமைப்புக்களால் இயக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் பணத்தை அச்சடித்துக் கொண்டும் கடன் பெற்றுக்கொண்டும் எவருக்கும் சம்பளத்தை வழங்க முடியாது. அருகிலே இருக்கின்ற கல்லடி பாலத்தை கட்டி முடிப்பதற்கு 2.6 பில்லியன் டொலர் தேவைப்பட்டது. கிண்ணியா பாலத்துக்கு அதைவிட கூடுதலான தொகை தேவைப்பட்டது. இன்று கல்லடி பாலத்தை கட்டுவதாயின் 2.6 பில்லியனுக்கு பதிலாக 6.2 பில்லியன்கள் தேவைப்படும்.

சுதந்திர தினத்துக்கு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்டவர்களிடம் இருந்து கையெழுத்துக்கள் திரட்டப்பட்டன.

இம்மகஜர், சனிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கபட்டது.

இ.போ.சபைக்கு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ருவன்வெலிசாய சைத்தியாராமதிபதி, சாஸ்த்ரபதி பூஜ்ய ஈதனவெட்டுனுவெவே ஞானதிலக நாயக்க தேரரரின் வேண்டுகோளுக்கிணங்க, அநுராதபுரம் புகையிரத நிலையத்திலிருந்து ஜய ஸ்ரீ மஹாபோதி, லோவமஹாபாய, ருவன்வெலிசாய, ஜேதவனாராமய, அபயகிரிய, லங்காராமய, மிரிஸ்ஸவெட்டிய ஆகிய இடங்களுக்கு வழிபாடு செய்ய வரும் பக்தர்களின் வசதிக்காக இலங்கை போக்குவரத்து சபையால், புதிய பஸ் வண்டி பயணமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வடக்கு விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ். மாவட்டச் செயலகத்தில் யாழ். மாவட்ட சர்வ மதத்தலைவர்களைச் சந்தித்துப் பேசியபோது பிடிக்கப்பட்ட படம்.

பிலிப்பைன்சில் நடைபெற்ற 22 ஆவது மூத்தோருக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற முல்லைத்தீவைச் சேர்ந்த அகிலத் திருநாயகி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். வடக்கு மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் (06) நடைபெற்ற இந்நிகழ்வில் ஆளுநர் பி.எஸ்எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொண்டனர்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு ஜனாதிபதி விருது வழங்கி பாராட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க, தனது யாழ். விஜ யத்தின்போது க. பொ. த சாதாரண தரத்தில் அகில இலங்கை ரீதியில் இரண் டாமிடமும் தமிழ்மொழி மாணவர்களுள் முத லிடமும் பெற்ற யாழ். வேம்படி மகளிர் கல்லூரி யைச் சேர்ந்த அக்ஷ்யா அனந்த சயனன் என்ற மாணவியை சந்தித்து பாராட்டி நினைவுப் பரி சையும் வழங்கினார். அத்துடன் இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்ப பிரிவில் தரம் 05 புல மைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவியை யும் பாராட்டி நினைவுப் பரிசையும் வழங்கினார். யாழ். நல்லூர் ரியோ ஜஸ்கிறீம் நிறுவனத்தில் நடைபெற்ற இச்சந்திப் பின்போது பொதுமக்கள் சிலரையும் ஜனாதிபதி சந்தித்து உரையாடினார்.

INVITATION FOR BIDS (IFB)

PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA, MULLAITIVU DISTRICT

LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - Performance Transfer-(SET II – PT 2)
Strengthening the Capacity of Local Authority

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **PURCHASING OF CHILDREN INDOOR PLAY EQUIPMENT FOR PRE-SCHOOLS.**

02. The Chairman, Provincial Project Procurement Committee (PPPC) on behalf of the Puthukkudiyiruppu Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **CHILDREN INDOOR PLAY EQUIPMENTS as** described below.

No	Contract No	Contract Name	Tentative Estimated Cost (Rs. Mn)	Contract Period
01	LDSP/NP/MU/PTKPS/2024 /SET II PT2/01	PURCHASING OF CHILDREN INDOOR PLAY EQUIPMENT FOR PRE-SCHOOLS	1.10	45 Days

03. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

04. Qualification requirement include: possessing the minimum 3 years' experience in selling and having island wide maintenance in the particular brand and field.

05. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

06. Interested bidders may obtain further information from **Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu** (T.P No: 0212291023, 0212290847 Fax No: 0212061640) and inspect the bidding documents at the address given below from **08th January 2024** until **05th February 2024** Hrs on normal working days.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu** from **08th January 2024** until **05th February 2024** during **09:00** Hrs to **15:00** Hrs on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees** (**Rs.2,000.00**). The method of payment will be by cash.

08. Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu** on or before **15.00**Hrs **on 06th February 2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

09. Bids shall be valid up to **25th March 2024.** All bids shall be accompanied by a Bid-Security, of **Rs.20, 000.00.** Bid Security shall be valid up to **22nd April 2024**.

10. A pre-bid meeting will be held at 10.00 Hrs on **16th January 2024** at **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu.**

Chairman,
Local Authority Procurement Committee (LAPC)
Puthukkudiyiruppu Pradeshiya Sabha,
A35 Road, Puthukkudiyiruppu,
Mullaitivu.
08.01.2024.

கிழக்கின் குரல்

2023 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

2023 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள், கிண்ணியா விஷன் மண்டபத்தில் நடந்தது.

கே டீ வீ எற்பாடு செய்த இந்நிகழ்வில்,கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஈ,எச், எம், டபிள்யூ திசாநாயக்க, வலயக்கல்வி பணிப்பாளர் ஏ நசூகர்கான் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர்.கிண்ணியா அல் இர்பான் கணிஸ்ட வித்தியாலயத்தில் சித்தியடைந்த மாணவர்களான அஸ்வர் முஹம்மது றனத் (162) முபாரக் றஸ்னி (161) ஆகியோர் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பிரிவுகளில் சின்னமுத்து தடுப்பூசிகள்

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளிலுள்ள 67 மத்திய நிலையங்களில், சின்னமுத்து நோய் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு, 06 தொடக்கம் 09 மாத குழந்தைகளுக்கு மேலதிகமாக சின்னமுத்து தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய கடந்த சனிக்கிழமை (06) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள சுகாதார வைத்தியதிகாரி காரியாலயங்கள் மற்றும் இதற்கென தெரிவு செய்யப்பட்ட மையங்களில் சின்னமுத்து தடுப்பூசி ஏற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளில் இதுவரை, சின்னமுத்து தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத 15 வயதுக்குட்பட்டவர்களுக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. சில பிரதேசங்களில் நடமாடும் சேவை ஊடாகவும், தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. வீடு வீடாகச் சென்று சுகாதார அதிகாரிகள் குழந்தைகளுக்கு தடுப்பூசிகளை ஏற்றினர்.

நாட்டில் தற்போது சின்னமுத்து மற்றும் ஜெர்மன் சின்னமுத்து நோய் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, இவ் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது கொழும்பை அண்டிய பகுதிகளில் தடுப்பூசிகளை பெறாதவர்களுக்கு, இவ்வாறான நோய் பரவல் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்தே, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சின்னமுத்து தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளில் சுகாதார வைத்தியதிகாரிகள் தலைமையில், பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள், பிரதேச பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல மருத்துவ மாது உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருதைச் சேர்ந்த ஆதம் பாவா நௌஷாத், அகில இலங்கை சமாதான நீதவனாக நியமிக்கப்பட்டுள்ளார். அண்மையில் கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் நீதவான் முஹம்மட் றியால் முன்னிலையில், இவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சாய்ந்தமருது 10ஆம் பிரிவைச் சேர்ந்த இவர், ஆதம்பாவா மற்றும் பரீதா தம்பதியினரின் மூத்த புதல்வராவார். தனது ஆரம்பக் கல்வியை கமு/கமு/ றியாலுல் ஜன்னா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்ற இவர், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்லூரியில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமோ பட்டதாரியுமாவார்.

இறக்காமத்தில் குழந்தைகளுக்கு சின்னமுத்து தடுப்பூசி ஏற்றும் திட்டம்

(இறக்காமம் தினகரன் நிருபர்)

நாட்டில் தற்போது பரவி வரும் சின்னமுத்து நோயை கட்டுபடுத்தும் வகையில், ஆரம்பிக்கப்பட்டுள்ள தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் இறக்காமத்திலும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ்வரும் 13 பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் கடந்த சனிக்கிழமை(06) காலை 9.00 மணி முதல் இவ்வேலைத்திட்டம் ஆரம்பமாகின.

இறக்காமம் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள ஆறு முதல் ஒன்பது மாத குழந்தைகளுக்கு, தடுப்பூசிகள் ஏற்ப்பட்டன. இந்நிகழ்வு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எம்,என், எப், றஸ்கா ஆஸ்மி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தாய் மார்களுக்கு விழிப்பூட்டும் வகையிலான பல்வேறு ஆலோசனைகளும் இங்கு வழங்கப்பட்டன.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

வரக்காபொல பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.எப். இல்மா, 2023 ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

வகுப்பாசிரியை பரூஷாவின் வழிகாட்டலில், இவர் இப் பெறுபேற்றைப் பெற்றுள்ளார். வரக்காபொலையைச் சேர்ந்த பிர்னாஸ் பர்ஸானா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி இவர் என்பது குறப்பழடத் தக்கது.

நாட்காட்டி, குறிப்பேடுகள் விநியோகம்

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளன ஏற்பாட்டில், (2024) நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பேடுகள் வெளியிடப்பட்டன.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத் தலைவர் ஏ.மாபீர் தலைமையில் ஒலுவில் கிறீன் விலாவில் நேற்று (07) இந்நிகழ்வு நடைபெற்றது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசிய தலைவர்எ ம்.ஐ.உதுமாலெப்பை மற்றும் மாவட்ட பிரதம ஆலோசகர் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஆதம்பாவா ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பேடுகளை வெளியீட்டு வைத்தனர்.

இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனதின் செயலாளர் எம்.எச்.ஏ.வ ஹாப், மாவட்டப் பொருளாளர் ஐ.அஹமட் ஸிறாஜ், மாவட்ட முன்னாள் தலைவர் (ஐ.பீ.பீ) எம். ஐ.எம்.றியாஸ் முன்னாள் தலைவர்களான எம்.எம்.அஜ்வத், யூ.எம். நியாஸி, பாலமுனை பாறூக், உட்பட முன்னாள் மாவட்ட தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆலோசகர்கள், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பொங்கலை முன்னிட்டு திருமலையில் சிலம்பம், பீச் கபடி, படகுச்சவாரி போட்டிகள்

கிழக்கு ஆளுநர் ஏற்பாடு,மருதபாண்டி ராமேஷ்வரன் எம்பி, பிரதம அதிதி

கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டைமானின் ஏற்பாட்டில், திருகோணமலையில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.பொங்கலை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் பலர் பங்கேற்றனர்.

சிலம்பம் போட்டி,படகுச்சவாரி உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.சிலம்பம் மற்றும் பீ ச் கபடி போட்டிகள் நேற்று முன்தினம் (06) ஆரம் பமாகிய நிலையில் நேற்றும் இப்போட்டிகள் இடம்பெற்றன.

இறுதிப்போட்டிகள் இன்று (08) திங்கட்கிழமை இடம்பெறுகிறது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் பங்கேற்றத்துடன், பல்வேறுப் பட்ட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திடீர் இராஜினாமா

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவராக கடமையாற்றிய முபாறக் அப்துல் மஜீத் மௌலவி, தனது தலைமை பதவியை ராஜினாமா செய்துள்ளார். கட்சியை இளைஞர்களிடம் பாரம் கொடுக்க வேண்டும் எனக் கருதியுள்ள இவர், கட்சியின் வருடாந்த பொதுக்கூட்டத்தில், தனது தலைமை பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதையடுத்து அண்மையில் (05) நடைபெற்ற கட்சியின் உயர்பீடக் கூட்டத்தில் முபாரக் அப்துல் மஜீத் மௌலவி புதிய தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் கருணை யோகன் பேராசிரியர் செ.யோகராசா நினைவேந்தல்

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

கருணை யோகன் பேராசிரியர் செ.யோகராசாவின் நினைவேந்தல் நிகழ்வு "நீங்களும் எழுதலாம்" ஒழுங்கமைப்பில் திருகோணமலையில் இடம்பெற்றது.

"நீங்களும் எழுதலாம்" ஆசிரியர் எஸ். ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் (06) திருமலை பொது நூலக கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடந்தது.

நினைவுச் சுடர் ஏற்றி நடத்தப்பட்ட இந்நினைவேந்தல் நிகழ்வில், கவிஞர் க.யோகானந்தம் உட்பட பலர் உரையாற்றினர்.

கேப்டன் விஜயகாந்திற்கு ஆத்மசாந்தி பிரார்த்தனை

(காரைதீவு குறூப் நிருபர்)

மறைந்த பிரபல நடிகரும் தமிழ் உணர்வாளருமான புரட்சிக்கலைஞர் கேப்டன் விஜயகாந்திற்கு ஆத்மசாந்தி வேண்டி, நேற்று (07) காரைதீவில் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவுக் கிளைத் தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில், சமூக செயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் காரைதீவு பொது நூலக மண்டபத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரதம பிரமுகராக கலந்து கொண்டார். மேலும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஜி.சிறிநேசன், சி லோகேஸ்வரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மா. நடராஜா உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

கேப்டன் விஜயகாந்தின் திருவுருவ படத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் மற்றும் முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் ஆகியோர் மலர் மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து ஏனைய பிரமுகர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். இதன் பின்னர் இரண்டு நிமிடநேர மௌன அஞ்சலி நடத்தப்பட்டது.

நாட்டை கட்டியெழுப்பும் அபிவிருத்தி திட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்!

பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களால் முக்கிய பங்கு வகிக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

விவசாயம், சுற்றுலா, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அபிவிருத்திக்காக பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த முயற்சிகளில் தீவிரமாக இணைந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடன் அண்மையில் யாழ்.ஜெட்விங் ஹோட்டலில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் அபிவிருத்திக்காக பல்கலைக்கழக சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னணி பங்களிப்பு குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் வகையில் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் குறித்து மாணவர்களுக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி, இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு மாணவர்களை ஒன்றிணையுமாறும் கேட்டுக்கொண்டார்.

மனித வளமே ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உந்துசக்தியாக அமைகின்றது எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நவீன தொழில்நுட்பத்தை மையப்படுத்தி அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல் உள்ளிட்ட உயர்கல்வித் துறையை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து இதன்போது மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற துறைகளில் விரைவான முன்னேற்றத்தின் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்யும் வகையில் எதிர்காலத்தில் புதிய சட்டம்

ஒரு நாடு என்ற ரீதியில் பிராந்திய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களை வலுவான துறைமுகங்களாக மாற்றுவதற்கான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.தென்னிந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் மன்னாரிலிருந்து இந்தியாவுக்கான நில ரீதியிலான தொடர்பை ஏற்படுத்துவது குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தான் கலந்துரையாடியதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

2025 ஆம் ஆண்டளவில் 5% பொருளாதார வளர்ச்சியை அடைவதன் இலக்கையும் 2030 ஆம் ஆண்டளவில் படிப்படியாக அதனை 78% ஆக அதிகரிப்பதன்

இலக்கு குறித்தும் விளக்கமளித்த ஜனாதிபதி, இலங்கை உயர் பொருளாதார வளர்ச்சி வீதத்தை விரைவில் அடைய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

வளமான மற்றும் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை மேலும் வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பல்கலைக்கழக மாணவர்களும் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

இதன்போது மாணவர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி பதிலளித்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி அழைப்பு

கேள்வி: ஜனாதிபதி அவர்களே, இத்திட்டம் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஊக்கமளித்தால், அது மிகவும் பொருத்தமானது என்பதைக் கூற வேண்டும்.

பதில்: பல்கலைக்கழக மாணவர்களுக்கு குழுக்கள் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு திறைசேரிக்குச் சென்று அது எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்து கற்கலாம்.

கேள்வி: பல்கலைக்கழக மாணவர்கள் ஆங்கில மொழியில் தமது கல்வியைத் தொடர்வதில் பெரும் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர். ஒரு சந்தர்ப்பத்தில், எமது பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியில் கல்வி கற்க வேண்டியதன் காரணமாக தற்கொலைச் சம்பவம் ஒன்றும் பதிவாகியுள்ளது. எனவே, அடிப்படை நிலையிலிருந்து மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்த ஏற்பாடு செய்ய முடியுமா?

பதில்: கொழும்பு பல்கலைக்கழகத்தில் அவ்வாறான பிரச்சினை இல்லை என நான் நினைக்கிறேன். மொரட்டுவ பல்கலைக்கழகத்திலும் அவ்வாறானதொரு பிரச்சினை எழவில்லை. ஆனால் நீங்கள் அனைவரும் ஆங்கிலம் கற்க வேண்டும். ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழி. நீங்கள் செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பத்துடன் செயற்பட வேண்டுமென்றால் ஆங்கில அறிவு அவசியம். அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா, இந்தியா உட்பட உலகின் பல நாடுகள் ஆங்கில மொழியில் பணிகளை மேற்கொள்கின்றன. எதிர்காலத்தில் சீனாவும் இந்த வழிமுறையைப் பின்பற்றும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு (AI) பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ள நிலையில், பல்கலைக்கழக மாணவர்களின் ஆங்கிலமொழித் திறனை மேம்படுத்துவது கட்டாயமாகியுள்ளது. அதன்படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலமாகவும் தேவைப்பட்டால், பிரிட்டிஷ் கவுன்சில் போன்ற நிறுவனங்கள் மூலம் அதற்கான வசதிகளை வழங்க நாம் எதிர்பார்க்கிறோம்.

கேள்வி: ஜனாதிபதி அவர்களே, ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடிப்பதற்கு செலவழித்த காலத்தை விட, ஒரு அரச பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவன் பட்டப்படிப்பை முடிப்பதற்கான கல்வித் தகுதிகளைப் பெறச் செலவழிக்கும் காலம் மிக அதிகம். எனவே நாம் தொழில் சந்தைக்குச் செல்லும்போது, அவர்களுக்கு நம்மை விட அதிக அனுபவம் கிடைக்கிறது.. இதற்கு உங்கள் பரிந்துரை என்ன?

பதில்: நான் ஒரு அரச பல்கலைக்கழகத்தில் படித்தேன். நான் 18 வயதில் பல்கலைக்கழக கல்வியைத் தொடங்கி 21 வயதில் பட்டம் பெற்றேன். 23 வயதில் வழக்கறிஞரானேன். இது பல்கலைக்கழகத்தின் உள்ளகப் பிரச்சினை. இன்று சிலர் பல்கலைக்கழக கல்வியை சீர்குலைத்து வருகின்றனர். ஆனால் நாங்கள் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது, முதல் தவணையின் கடைசி இரண்டு வாரங்கள் மட்டுமே வேலை நிறுத்தத்திற்கு ஒதுக்க உபவேந்தருடன் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வோம். அவரும் அதற்கு உடன்பட்டார். அவ்வாறே நாமும் நடந்துகொண்டோம்.

எனவே, நாம் ஒரு முறைமையின் கீழ் செயல்படுவது மிகவும் முக்கியம் என்று நான் நினைக்கிறேன். அத்துடன், மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர், மூன்று அல்லது நான்கு வருடங்களுக்குள் கல்வியை நிறைவு செய்து பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற சட்டத்தை எதிர்காலத்தில் கொண்டு வர எதிர்பார்க்கின்றோம். மருத்துவ பீடங்களுக்கு அது தேவையில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, வடமாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் விசேட திட்டப்பணிப்பாளர் திக்ஷன அபேவர்தன, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீ சற்குணராஜா, யாழ் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் வசந்தி அரசரத்னம் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

நெடுந்தீவில் பெரும்போக நெற்செய்கையில் இம்முறை கணிசமான விளைச்சல்

(பரந்தன் குறூப் நிருபர்)

யாழ். நெடுந்தீவுப் பிரதேசத்தில் "நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் "நல்வாழ்வு நம்கையில்" எனும் விவசாய செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக செய்கையில் கணிசமான விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ் நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் தொடர்ச்சியாக விவசாயச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கடந்த ஆண்டுகளில் விவசாய நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன.

மக்களின் போசாக்கு மற்றும் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் "நல்வாழ்வு நம்கையில்" எனும் விவசாய செயற்றிட்டத்தின் மூலம் நெடுந்தீவு பிரதேசத்தில் அதிகளவான இடங்களில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பெரும் போக செய்கையில் கணிசமான விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளதுடன் அண்மையில் அறுவடை நிகழ்வும் நடைபெற்றுள்ளது.

அதாவது தற்போதைய பெரும் போகத்தில் வெங்காயச் செய்கை மற்றும் மிளகாய், கத்தரி, பூசணி, கீரை போன்ற பயிர் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவத்தமிழ் செல்வியின் 99வது பிறந்த நாள் விழாவில் ஐவருக்கு சைவத்தமிழ் விருது

(யாழ்.விசேட நிருபர்)

சிவத்தமிழ் செல்வியின் 99வது பிறந்த நாள் விழாவில் ஐந்து பெருந்தகைகள் சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பேராசிரியர் சிவலிங்கராசா, வைத்திய கலாநிதி அருளானந்தம், இளைப்பாறிய விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், நாதஸ்வர வித்துவான் இ.கேதீஸ்வரன் மற்றும் இளைப்பாறிய அதிபர் மு.அருணாசலம் ஆகிய ஐந்து பெருந்தகைகள், விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். சிவத்தமிழ் செல்வியின் 99வது பிறந்தநாள் அறக்கொடை விழா நேற்று தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரனும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ மற்றும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட வைத்திய கலாநிதி பாலகோபி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் விருதுகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலைக்கு 2 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டதுடன், உடுவில் கோட்ட கல்விப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி கண் சத்திரசிகிச்சை நிபுணர் பாராட்டி கௌரவிப்பு

(கிளிநொச்சி குறூப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட கண் சத்திரசிகிச்சை நிபுணர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் மு. ஞானரூபன் மற்றும் அவரது குழுவினர் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கண் சத்திர சிகிச்சை நிபுணரும் அவரது குழுவினரும் சிறப்பான முறையில் பணியாற்றி ஏராளமான வர்களின் பார்வை குறைகளை நீக்கியதோடு, ஏராளமான கண் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளனர்.

எனவே இவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையினை பாராட்டி மதிப்பளிக்கும் நோக்கில் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் இவ் ஏற்பாட்டினை மேற்கொண்டனர்.

நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ஓய்வுபெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர் க. முருகவேல் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சுகந்தன் தாதியர்கள், வைத்தியசாலை பணியாளர்கள், நோயாளர் நலன்புரி சங்கத்தின் உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

வடக்கின் உதயம்

யாழ். சித்த மருத்துவத்துறையை பீடமாக தரமுயர்த்த கோரிக்கை!

ஜனாதிபதியிடம் மாணவர்கள் முன்வைத்தனர்

(கரவெட்டி தினகரன் நிருபர்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையை பீடமாக தரமுயர்த்த வேண்டும் என பல்கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையேயான கலந்துரையாடல் இடம்பெற்ற போதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா ஆகியோரும் அக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இக் கலந்துரையாடலில், மாணவர்களினால், மாணவ விடுதிகளில் உள்ள குறைபாடு, முகாமைத்துவ பீடத்திற்கான பேருந்து வசதிகளை ஏற்படுத்தல், சித்த மருத்துவத் துறையை பீடமாக தரமுயர்த்தல், இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களுக்கான உள்ளக பயிற்சி வழங்குதல் போன்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ் மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலய காணியை விரைவில் விடுவிக்க நடவடிக்கை

(கரவெட்டி தினகரன் நிருபர்)

சுமார் 28 வருடங்களின் பின்னர் பாதுகாப்புப் படையினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்திற்கான புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க இலங்கை விமானப்படை முன்வந்துள்ளது. அதற்கமைய குறித்த பிரதான மண்டபக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை விமானப்படையின் வான்வெளிப் பொறியியல் துறையின் பணிப்பாளர் நாயகம் ஏயார் வைஸ் மார்சல் முதித்த மஹவத்தகே, திட்ட இணைப்பாளர் குரூப் கப்டன் துஷார பண்டார, இலங்கை விமானப் படையின் பலாலி படைத்தளத்தின் கட்டளை அதிகாரி குரூப் கப்டன் சமிந்த ஹேரத், இலங்கை விமான படையின் அதிகாரிகள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கல்வி துறைசார் அதிகாரி, மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சுமார் எட்டு மில்லியன் ரூபா செலவில் இலங்கை விமானப் படையினரால் பாடசாலைக்கான புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. விமானப் படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் அங்குரார்ப்பண நிகழ்வாக இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வு அமைந்துள்ளது. அத்துடன் பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன், நூலகத்திற்கான புத்தகங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

205 வருடகால வரலாற்றை கொண்ட யாழ்ப்பாணம் மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்திற்கு சொந்தமான 2.5 பர்சஸ் காணி இதுவரை விடுவிக்கப்படாமல் உள்ளதாகவும், விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படவில்லை எனவும் பாடசாலையின் அதிபர் இதன்போது கூறினார்.

பொகவந்தலாவையில் விசேட டெங்கு வேலைத்திட்டம்

பொலிஸ்மா அதிபரின் பணிப் புரைக்கமைய பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் 07.01.2024.ஞாயிற்றுக்கிழமை டெங்கு நோயினை கட்டுப்படுத்தும் நோக்கில் சுத்தப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டது.

இந்த வேலைத்திட்டத்தில் ஹட்டன் பொலிஸ் வலையத்திற்கு பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிப்புன தெய்கம பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பண்டார. பொக வந்தலாவ பொதுசுகாதார வைத்திய

அதிகாரி.பொகவந்தலாவ பொது சுகாதார பரிசோதகர்கள். பொகவந்த லாவ வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஏ.எஸ்.கே.ஜயசூரிய. பொகவந்தலாவ முச்சக்கர வண்டி சாரதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த வேலைத்திட்டத்தில் பொகவந்தலாவ மாவட்ட வைத் தியசாலை. பொகவந்தலாவ பிரதான பேருந்து தரிப்பிடம்.பொக வந்தலாவ சென்மேரீஸ் தேசிய பாடசாலை ஆகிய பகுதிகளில் இந்த டெங்கு நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

எல்கடுவ, உனுகலைத தோட்டத்தில் அண்மையில் அதிக மழையுடன் கூடிய கடுமை யான காற்றின் காரணமாக இரண்டு லயன் தொகுதியில் நான்கு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. இதில் பாதிக்கப்பட்ட ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 22 நபர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாத்தளையைச் சேர்ந்த சமூக சேவையாளர் எஸ்.கேசவன் தோட்டத்திற்கு சென்று உணவுப்பொருட் கள் வழங்குவதை படத்தில் காணலாம். (நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

எட்டியாந்தோட்டை, பகல கராகொடை அல் ஹிக்மா குர்ஆன் மத்ரஸாவின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் ஏழாவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் என்பன அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் விஷேட அதிதியாகக் கலந்து சிறப்பித்த அஷ்ஷெய்க் ஹஸன் பாரிஸ் மதனி உரையாற்றினார். மத்ரஸாவிலிருந்து வெளியேறிச் செல்லும் மாணவர்களால் மத்ரஸாவிற்கான தளபாடம் மற்றும் ஆசிரியர் அஷ் ஷெய்க் ஏ.கே. முஹம்மத்துக்கு பரிசில்கள் வழங்கப்படுவதையும், நிருவாகத்தினரால் விசேட அதிதி நினைவுச் சின்னம் வழங்கி கௌர விக்கப்படுவதையும், கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

விலைமனுக்கருக்கான அழைப்பு

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு சமைக்காத/சமைத்த உணவுகளை வழங்கல் – 2024

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கும் பின்வரும் வைத்தியசாலைகளுக்கு சமைக்காத/சமைத்த உணவுகளை வழங்குவதற்காக, கிழக்கு மாகாணத்திலிருந்து தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

தொ. இல.	நிறுவனத்தின் பெயர்	மீளளிக்கும் வைப்புத் தொகை (ரூபா)	சொத்துச் சான்றிதழின் பெறுமதி
சமைக்காத உணவுகள்			
01	ஆதார வைத்தியசாலை, கிண்ணியா	35,000	100,000
02	ஆதார வைத்தியசாலை, மூதூர்	35,000	100,000
03	ஆதார வைத்தியசாலை, புல்மோட்டை	6,000	75,000

அ. சமைக்காத விலைமனுக் கோரும் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் G170 படிவத்தில் மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்துச் சான்றிதழுக்கான தொகைக்காக உரித்தான வைத்தியசாலை அமைந்திருக்குமிடத்து அல்லது ஒப்பந்தக்காரர் வசிக்குமிடத்து பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ். இச் சான்றிதழானது வழங்கப்படும் திகதியில் இருந்து 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

ஆ. விலைமனுக்கோரல் ஆவணங்களை பெறுவதற்காக உரிய நிறுவனத்தின் தலைப்புக் கடிதத்தில் கோரிப் பெறலாம்.

இ. வியாபார பதிவுச் சான்றிதழ்

சமைத்த உணவுகள்		மீளளிக்கும் வைப்புத் தொகை (ரூபா)	சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்
01	பிரதேச வைத்தியசாலை, கிளிவெட்டி	2,000.00	1. தனிப்பட்ட கம்பனிகளாயின்/ விற்பனை நிலையமாயின் வியாபார சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பத்திரப் பிரதி சமர்ப்பித்தல் வேண்டும். உரிய பிரதேச செயலாளரினால் நடப்பாண்டில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண் டும். (Copy of Business Registration certificate certified by Divisional Secretary)
02	பிரதேச வைத்தியசாலை, கோமரன்கடவெல	2,000.00	
03	பிரதேச வைத்தியசாலை, நிலாவெளி	2,000.00	
04	பிரதேச வைத்தியசாலை, ஈச்சிலம்பத்து	2,000.00	
05	பிரதேச வைத்தியசாலை, பதவிசிறிபுர	2,000.00	
06	பிரதேச வைத்தியசாலை, சம்பூர்	2,000.00	
07	பிரதேச வைத்தியசாலை, மகாதிவுல்வெவ	2,000.00	2. பதிவு செய்யப்பட்ட சங்கங் களாயின் உரிய பிரதேச செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட சிபாரிசுக் கடிதத்தினை கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் சங்கத்தினை பதிவு செய்த பிரதியானது உரிய பிரதேச செயலாளரினால் நடப்பாண்டில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண் டும்.
08	பிரதேச வைத்தியசாலை, தோப்பூர்	2,000.00	
09	பிரதேச வைத்தியசாலை, சேருவில	2,000.00	
10	பிரதேச வைத்தியசாலை, குச்சிவெளி	2,000.00	
11	பிரதேச வைத்தியசாலை, தம்பலகமம்	6,000.00	
12	பிரதேச வைத்தியசாலை, சேருநுவர	6,000.00	

01. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் ஆவணங்களை கையேற்பதற்கு முன்னராக இலவசமாக 120, நீதிமன்ற வீதி, திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் அலுவலக நேரங்களில் பரீட்சிக்கலாம்.

02. திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120ஆம் இலக்கத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் 08.01.2024ஆம் திகதியிலிருந்து 26.01.2024ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையும் தலா ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000.00 செலுத்தி விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

03. சங்கங்கள் விலைமனு கோரலுக்கு விண்ணப்பிப்பதாயின் உரிய பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்துவதற்கான ஆவணத்தினை திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

04. விலைமனுக்கள் 29.01.2024ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை 120, நீதிமன்ற வீதி திருகோணமலை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் உரித்தான வைத்தியசாலையின் பெயர் தனித்தனியாக குறிப்பிடப்படல் வேண்டும்.

முடிவுத்திகதியன்று உடனடியாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் மாநாட்டு மண்டபத்தில் கூறுவிலைதாரர் அல்லது அவர் தம் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

05. மேலதிக விபரங்களை திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120ஆம் இலக்கத்தில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பெறுகைப் பிரிவிலும் மற்றும் 026-2220103 என்ற தொலைபேசி எண்ணூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.

06. விலைமனுக்களை வழங்குவதற்கான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமை பெறுகைக் குழுவுக்கே உரியது.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,
120, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.

சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்வால் வீதிகள் தாழிறக்கம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

காபட் வீதிகளின் இரு பக்கங்களும் சட் டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வுக்காக நிலம் தோண்டப்படுவதால் இரத்தினபுரி மாவட்டத்தின் பல இடங்களில் வீதிகள் தாழிற ங்கியுள்ளதாக சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு குற்றம் சாட் டுகிறது. இரத்தினபுரி மாவட்ட செயல கத்தில் நேற்று நடைபெற்ற இணைப்புக் குழுக் கூட்டத்தில் சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ். கொடெல்லவத்த இவ்விடயமாக உரையாற் றினார். இரத்தினபுரி மாவட்டத்தில் பல மில்லியன்கள் செலவில் அமைக்கப்பட் டுள்ள இந்த வீதிகள் பல இடங்களில் பாதிப் படைந்து வருகின்றன. பலாங்கொடை கலவான, இரத்தினபுரி, பெல்மதுளை போன்ற பல இடங்களில் இந்நிலைமை பர வலாக காணப்படுகிறது.

இவ்விடயத்தில் இர த்தினக்கல் அதிகார சபை காட்டும் ஆர்வம் போதுமானதாக தெரியவில்லை. எனவே இரத்தினக்கல் அதி காரசபை வீதிகளின் இரு பகுதிகளிலும் இரத்தினக்கல் அகழ்வுக்கு அனுமதி வழங் கக்கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தீவிரமான அரசியல்...

(03ஆம் பக்கத் தொடர்)

மறுபக்கத்தில், சுதந்திரக் கட் சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர். நீண்டகால சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா மற்றும் புத் தளம் மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தயாசி றித திசேராவும் எதிர்க்கட்சியில் இணைந்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக பாரா ளுமன்ற உறுப்பினர் பேராசிரி யர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பாரா ளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா ஆகியோரும் தாம் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு அளிக்கப் போவதாக அறிவிக் கப்பட்டிருந்தது. இது பற்றிக் கருத்துத் தெரிவித்திருந்த டிலான் பெரரா, உத்தியோகபூர்வமாக தாம் அந்தக் கட்சியில் இணை யவில்லையென்றும், தற்போ தைய உடனடித் தேவைக்கு ஏற்ற வகையில் பாரிய கூட்டணி யொன்றை அமைக்கும் நோக்கில் அக்கட்சியுடன் இணைந்து செயற்படப்போவதாகவும் கூறி யிருந்தார். இதுபோன்று மேலும் பலர் தம்முடன் இணையவிருப் பதாக அக்கட்சி தெரிவித்துள் ளது.

ஏனைய கட்சிகளில் இருப்ப வர்களை இவ்வாறு இணைத் துக் கொள்வது ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ்மட்டத்தில் அதி ருப்தியை ஏற்படுத்தியிருப்ப தாகவும் தகவல்கள் வெளியா கியுள்ளன. இதுவரை காலமும் கட்சிக்காகப் பாடுபட்டவர்களை விடுத்து வெளியிலிருந்து வந்த புதியவர்களுக்கு உறுப்புரிமை வழங்கி அவர்களை அமைப்பா ளர்களாக நியமிப்பது குறித்து ஒரு சில உறுப்பினர்கள் கட்சித் தலைமைமீது அதிருப்தியை வெளிப்படுத்தியிருப்பதாக செய் திகள் வெளியாகியுள்ளன.

இதுபோன்று கூட்டணி அமைப்புக்கள், கட்சித் தாவல் கள் என்பன பரபரப்பாகியி ருக்கும் சூழ்நிலையில், எந்தத் தேர்தல் முதலில் நடத்தப்படும் என்பதே தற்போது காணப்ப டும் பாரியதொரு கேள்வியாக உள்ளது. எந்தவொரு தேர்தலை எ தி ர் கொ ள் வ த ற் க ா க வு ம் தம்மைத் தயார்ப்படுத்துவதில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருவதையே காண முடி கின்றது. எவ்வாறாயினும் 2024 புத்தாண்டானது தீவிரமான அர சியல் பரபரப்புடனேயே உதய மாகியிருப்பதைக் காண முடி கின்றது.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

ரூ.100,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 ஜனவரி 10ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்படும்

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

முதிர்வுக் காலம்	91 நாட்கள்	182 நாட்கள்	364 நாட்கள்	மொத்தம்
ஐஎஸ்ஐஎன்*	LKA09124D126	LKA18224G126	LKA36425A104	
முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.)	30,000	40,000	30,000	100,000

ஏல விற்பனைத் திகதி : 2024 ஜனவரி 10
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஜனவரி 12
வழங்கப்படும் திகதி : 2024 ஜனவரி 10
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஜனவரி 10, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொது மக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட்	2206297
இலங்கை வங்கி	2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி	2317777
கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி	2639883
என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட்	2425010
மக்கள் வங்கி	2206783
சம்பத் வங்கி பிஎல்சி	2305842
செலான் வங்கி பிஎல்சி	2456340
வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட்	2675096

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

என். டி. வை. சி. வீரசிங்க
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்

வழங்கும் அலுவலகம்:
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

முடிவுறுத்தல் தொடர்பான அறிவித்தல்

கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் அதன் சிவில் நியாயாதிக்கத்தை அழல்படுத்தல்

வாத்துவ, பொஹாதரமுல்ல, வெரல பார என்ற முகவரியில் அதனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள ஈஎம் ஹோட்டல்ஸ் இன் முடிவுறுத்தல் தொடர்பான விடயமானது.

வழக்கு இலக்கம் : CHC 102/2023/2022/CO
தன்மை : (கம்பனி முடிவுறுத்தல்)

Limitone Global LTD
CMC Chambers, Wickhams Cay 1, Road Town,
Tortola, British Virgin Islands.

மனுதாரர்

மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனம் கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் அதன் சிவில் நியாயாதிக்கத்தை அழல்படுத்தல் மூலமாக கணக்குகளை முடித்து மூடிவிடுவதற்கான மனுவொன்றை 2023 டிசம்பர் 08 திகதியன்று மேலே பெயரிடப்பட்டுள்ள மனுதாரரினால் மேற்கூறப்பட்டுள்ள நீதிமன்றத்திற்கு மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த மனுவானது 2024 மார்ச் 25 ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுக்கப்பட கட்டளை இடப்பட்டதாகவும் அம்மனு தொடர்பான கட்டளையொன்று வழங்குவதற்கு சாதகமாக அல்லது எதிராக கூற்றுக்களை எடுத்துரைக்க எதிர்பார்க்கும் குறித்த நிறுவனத்தின் கடன் வழங்குநர் அல்லது உடனுதவுனர் இருப்பின் அது குறித்து பிரத்தியேகமாக அல்லது சட்டத்தரணி மூலமாக குறித்த விசாரணை நடத்தும் போது ஆஜராக முடியும் என்றும் குறித்த மனுவின் பிரதியொன்றை பெற்றுக் கொள்வதற்காக உரிய கட்டணங்களை பெற்றுக் கொண்ட பின்னர், அதன் பிரதி தேவைப்படும் குறித்த நிறுவனத்தின் கடன் வழங்குநர் அல்லது உடனுதவுனருக்கு கீழே கையொப்பமிடுபவரினால் வழங்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கையொப்பமிட்டது : கே.ஏச்.பி. தனுஷிக்கா பிரியதர்ஷனி
மனுதாருக்கான சட்டத்தரணி,
இல.: 166/1, ஹல்ஸ்டோர்ப் வீதி,
கொழும்பு-12.

குறிப்பு : குறித்த மனுவை விசாரணை செய்யும் போது ஆஜராக எதிர்பார்க்கும் எவரேனும் இருப்பின், அவ்வாறு செய்வதற்கு தான் திட்டமிட்டு இருப்பதாக எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று மேற்படி பெயரிடப்பட்ட சட்டத்தரணியிடம் கொண்டுவந்து கையளித்தல் வேண்டும் அல்லது தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த அறிவித்தலில் குறித்த நபரின் பெயர் மற்றும் முகவரி அல்லது வர்த்தக நிறுவனமென்றால் அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி போன்றவற்றைக் குறித்து, குறித்த நபரால் அல்லது அவ்வர்த்தக நிறுவனத்தினால் அல்லது அவரின் அல்லது அவர்களது சட்டத்தரணிகள் இருப்பின் அவர்களினால் கையொப்பமிட்டு மேற்படி நபருக்கு 2024 மார்ச் 24 ஆம் நாளன்று மாலை (ஆறு) 6 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுமாறு கொண்டுவந்து கையளிக்கப்படல் வேண்டும் அல்லது தபாலில் அனுப்பப்படுமானால் போதுமான கால அவகாசத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

அநுராதபுரத்தில் 219 பேருக்கு நிரந்தர நியமனம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்தில் கடமையாற்றிய பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் 219 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு வடமத்தியமாகண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு கடந்த காலங்களில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட குழுவினருக்கு 2023 டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனம் வழங்கிவைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய ஆலோசனைக்கிணங்க இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி 72 சாரதி நியமனங்கள், சுகாதார துணை மின் நிலையில் 18 நியமனங்கள், 18 சுகாதார தொலைபேசி நியமனங்கள், 05 சுகாதார தொலைபேசி நடத்துனர் நியமனங்கள் உட்பட ஏனைய நியமனங்கள் மாகாண சபை அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன் போது மாகாண பிரதான செயலாளர், ஆளுநரின் செயலாளர், பல்நோக்கு திணைக்களத்தின் பணிப்பாளர் மேஜர் ஏ.எம்.லசந்த கபில குமார உட்பட மாகாண சபை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

வெளிநாட்டு மொழி கற்பிக்க 163 பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் சீன மொழி, ஜப்பானிய மொழி, கொரிய மொழி உள்ளிட்ட ஆறு வகையான வெளி நாட்டு மொழிகளைக் கற்பிக்க இலங்கை ஆசிரியர் சேவையைச்சேர்ந்த மூன்றாம் தரத்துக்கு 163 பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் கடந்த ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற பொது நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை அடிப்படையில் தகுதி பெற்ற 163 பேரின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

வெளிநாட்டு மொழிகளான சீன மொழி 63, ஜப்பானிய மொழி 30, ஹிந்தி 28, கொரியா 22, ஜெர்மன் 15, பிரெஞ்சு 05 பேர் என்றவாறு தெரிவான விண்ணப்பதாரிகள் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

மேற்படி ஆசிரியர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பில் 18.06.2021 ஆம் திகதிய அரச வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக திறந்த எழுத்துப் பரீட்சை இடம்பெற்றதுடன் கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி பொது நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

உலக உணவுத்திட்டத்தின் புதிய அலுவலகம் திறப்பு

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

உலக உணவுத்திட்டத்தின் வேலைத்திட்டங்களை துரிதப்படுத்தும் நோக்கில் அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உலக உணவுத்திட்டத்தின் புதிய அலுவலக காரியாலயமொன்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு மாவட்ட அரச அதிபர் ஜனக்க ஜயசுந்தரவின் தலைமையில் நடைபெற்றது. அநுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் விதத்தில் மேற்படி உலக உணவுத்திட்டத்தின் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முன்னரை விடவும் உலக உணவுத்திட்டத்தின் வேலைத்திட்டங்களை செயற்திறன்மிக்கதாகவும் பயனுள்ளதாகவும் அமைய வேண்டுமென்ற முக்கிய நோக்கத்திற்காக வேண்டியே உலக உணவுத் திட்டத்தின் புதிய அலுவலகம் அரச அதிபர் அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பாடசாலை உணவு வேலைத்திட்டம் மற்றும் முட்டைக்காக வேண்டி கோழி வளர்ப்புத் திட்டங்கள் உள்ளிட்ட வேலைத்திட்டங்களுக்கு இதன் மூலம் வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மோ. சைக்கிள் – லொறி நேருக்கு நேர் மோதி விபத்து; ஒருவர் பலி

(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)

பாலாவி கற்பிட்டி பிரதான வீதியில் கரம்பை பகுதியில் வெள்ளிக்கிழமை (5) இடம்பெற்ற வீதி விபத்துச்சம்பவத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மதுரங்குளி, கரிக்கட்டை பகுதியைச் சேர்ந்த விஜேசிங்க ஆராச்சிகே சஞ்சீவ அனுர மங்கள குமார (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி பகுதியில் இருந்து பாலாவியை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும், எதிர்த் திசையில் பயணித்த லொறியொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விலைமனுக்களுக்கான அழைத்தல்

பரீட்சைகள் திணைக்களம்

விடை புத்தகங்களை வழங்குவதற்கான பெறுகை – 2023(2024)

Contract No.: 4/3/13/2023

01. விடை புத்தகங்களை வழங்கல் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
02. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இலங்கையில் நிகரான ஒப்படைப்புக்களை வழங்குவதில் மூன்று வருட அனுபவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.
04. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவிற்கமைவாக பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
05. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை பரீட்சைகள் திணைக்கள 3 ஆம் மாடியின் வழங்கல் பிரிவிற்கான உதவி ஆணையாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி/ தொலைநகல்: 022-2785219) 2024.01.26 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
06. ஒவ்வொரு ஆவணத்திற்கும் 15,600 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, பெலவத்த, இலங்கை பரீட்சைகள் திணைக்கள பரீட்சைகளுக்கான ஆணையாளர் நாயகத்திற்கு 2024.01.08 ஆம் திகதியிலிருந்து 2024.01.26 ஆம் திகதியன்று வரையும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்)
07. விலைமனுவானது அதனை திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு (2024.04.28) ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
08. தொள்ளாயிரத்து பத்தாயிரம் ரூபாவிற்கான இலங்கை ரூபாவிலமைந்ததும் (910,000 இ.ரூபா) இலங்கையில் செயற்படும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்ட நிபந்தனையற்றதும் விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டதும் விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2024.05.27 ஆம் திகதி வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமானதொரு விலைமனுப் பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
09. விலைமனுக்கள் 2024.01.29 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்கள, 3 ஆம் மாடியின் வழங்கல் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்களை மூடிய பின்னர் மேலேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் (ஒரு தபாலுறையில் இரு பிரதிகள்) **"Supply of Answer Books – Contract No.: 4/3/13/2023"** என தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் அடையாளம் குறிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
11. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எவ்வித கடப்பாட்டையும் சுமத்தாமல் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு திணைக்கள பெறுகைக் குழுவின் செயற்பாட்டை அறிவிக்காமல் இருப்பதற்கான எவ்வித கடப்பாட்டையும் காரணத்தையும் திணைக்கள பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

தலைவர்,
மேல்மட்ட பெறுகைக் குழு,
இலங்கை பரீட்சைகள் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
08.01.2024

விலைமனுக்களுக்கான அழைப்பு

போதனா வைத்தியசாலை - கராப்பிட்டி

கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணப் பணிகளுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கராப்பிட்டி, போதனா வைத்தியசாலை, பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுவானது இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

இல.	வேலை உருப்படி	விலைமனுதாரரின் தகைமை தேவை	மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்	விலைமனு பிணை செல்லுபடி	அடிப்படை செலவு மதிப்பீடு (மில்லியன்)
1	SIMULATION நிலையத்தின் நிர்மாணம்	C6 மற்றும் C7	3,500.00	78,000.00	7.8
2	CATH ஆய்வுகூடத்தின் விரிவாக்கம்	C6 மற்றும் C7	3,500.00	76,000.00	7.6
3	முன்மொழியப்பட்ட பாதுகாப்பு நிலையம் மற்றும் நுழைவாயில் நிர்மாணம்	C6 மற்றும் C7	3,500.00	59,000.00	5.9
4	நடைபாதைகளின் புனரமைப்பு வேலை	C5, C6 மற்றும் C7	3,500.00	201,000.00	20.1
5	புற்றுநோய் வார்டின் வெளிப்புறம் வர்ணம் பூசுதல்	C6 மற்றும் C7	3,500.00	50,000.00	5.0
6	2024/ 2025 ஆம் ஆண்டுக்காக கராப்பிட்டி வைத்தியசாலையின் வளிச் சீராக்கி செயற்பாடு மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளல். (Split AC)	வளிச் சீராக்கி நிறுவுதல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்த தாரர்கள்	3,500.00	163,000.00	16.3

01. கராப்பிட்டி, போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரம் விலைமனுவை மேற்கொள்ளல் வேண்டும்.
02. வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 15.00 வரை 2024.01.29 ஆம் திகதி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்தி வைத்தியசாலை அலுவலகத்தில் இருந்து விலைமனு ஆவணங்களை பெற முடியும்.
03. கராப்பிட்டி, போதனா வைத்தியசாலை, பணிப்பாளர் அலுவலகத்தில் 2024.01.30 ஆம் திகதி மு.ப. 10.00க்கு விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை கராப்பிட்டி, போதனா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் மற்றும் அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.
04. விலைக்கேட்பு கடித உறையில் இடது மேல் பக்கத்தில் விலைமனுவின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.
05. எந்த ஒரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் ஏற்பது அல்லது நிராகரிப்பது தொடர்பில் அல்லது இந்த கேள்வியை வழங்குவதன் இறுதி முடிவு பெறுகைக் குழுவின் வசமானதாகும்.

தொடர்பு இல. 091-2232250, 091-2232176

பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை, கராப்பிட்டி, காலி
2024.01.08

சுகாதார அமைச்சு

போதனா வைத்தியசாலை – களுத்துறை

பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளுக்காக வழங்குநர்களைப் பதிவுசெய்தல் – 2024

2024ஆம் வருடத்தில் களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக பதிவுசெய்துகொள்ள விரும்பும் உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள், அரச கூட்டுத்தாபனம் மற்றும் அரச நிறுவனங்கள், பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஏனைய அரசாங்கத்தில் பதிவு செய்துள்ள நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01) **வழங்கல்**
- 01. அனைத்து வகையான காகிதாதிகள்
- 02. தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் (பலகை/உருக்கு/ பிளாஸ்திக்)
- 03. இறப்பர் மெத்தைகள், தும்பு மெத்தை மற்றும் இறப்பர் கலந்த தும்பு மெத்தை மற்றும் தலையணை
- 04. அனைத்து வகையான பாவனைப் பொருட்கள் காபோலிக் சவர்க்காரம், சலவைத் தூள் மற்றும் திரவம்/ பார் சவர்க்காரம்/ சுத்திகரிப்புத் திரவம் மற்றும் தூள் உட்பட துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் சுத்திகரிப்புப் பொருட்கள், சவர அலகுகள், தீப்பெட்டி போன்றன.)
- 05. அனைத்து வகையான துணிகள், நுளம்பு வலை மற்றும் தைத்து முடிக்கப்பட்ட ஆடைகள் (கட்டில் விரிப்பு, தலையணை உறை, கட்டமிட்ட துணி மற்றும் சத்திரசிகிச்சை உடை/ பிஜாமா உடை மற்றும் நூல் வகைகள்)
- 06. அலுமினியப் பொருட்கள்/ மட்பாண்டப் பொருட்கள்/ கண்ணாடிப் பொருட்கள்/ பிளாஸ்திக் பொருட்கள் உட்பட சமையலறை உபகரணங்கள்
- 07. அனைத்து வகையான பொலித்தின் மற்றும் குப்பை பைகள் (சூழலுக்கு இசைவானவை)
- 08. டயர், டியுப் மற்றும் வாகன பற்றரி மற்றும் வாகன உதிரிப்பாகங்கள்
- 09. அரியப்பட்ட பலகைகள் மற்றும் ஏனைய மர வகைகள்
- 10. காலணிகள் (வைத்தியர்/தாதி/தொழிலாளர்)
- 11. அனைத்து வகையான கனரகப் பொருட்கள் (உலோகப் பொருட்கள்/ கட்டிடப் பொருட்கள் / நீர்க்குழாய் உபகரணங்கள் / ட்ரொலி சக்கரம்/ ஆணி/ பிணைச்சல்/ இறப்பர் கையுறை, தோற்பொருட்கள் மற்றும் இறப்பர் கால்துடைப்பம் மற்றும் சகல வகையான பகுதிபிரிப்புக்குத் தேவையான பொருட்கள், டோர்ச் பெட்டறி வகைகள் / மின்குமிழ்கள் / வயர்கள் போன்றன)
- 12. பெயர்ப் பலகைகள், அறிவித்தல் பலகைகள், இறப்பர் முத்திரை திகதி முத்திரை
- 13. அச்சு வேலைகள் (மருந்துகள் இடும் உறை/ கதிரியக்கப் படங்கள் இடும் உறை/ சான்றிதழ்கள் போன்றன வழங்குதல் மற்றும் அச்சிடல்)
- 14. அனைத்து மின்சார உபகரணங்கள் (தொலைக்காட்சிப் பெட்டி/ குளிர்சாதனப் பெட்டி/ வளிச்சீராக்கி இயந்திரம் / சலவை இயந்திரம் போன்றன)
- 15. அனைத்து வகையான மின்சார துணைப்பாகங்கள் (டோர்ச் பெற்றறி வகைகள் / மின்குமிழ்கள்/ வயர்கள் மற்றும் கம்பியிணைப்புக்குத் தேவையான பொருட்கள் போன்றவை)
- 16. நோயாளர்களுக்கான (கட்டில்/ட்ரொலி, சக்கர நாற்காலிகள், வெள்ளியிரும்பு வைத்தியசாலை உற்பத்திகள்)
- 17. அலுவலக உபகரணங்கள் மற்றும் தொலைத்தொடர்பு உபகரணங்கள் (தொலைநகல் / ரோணியோ / புகைப்படப் பிரதி / தொலைபேசி / நகல் பிரதி இயந்திரங்கள் போன்றன)
- 18. கணனிகள், அச்சுப்பொறிகள் மற்றும் துணைப்பாகங்கள்
- 19. மருத்துவ சத்திரசிகிச்சை உபகரணங்கள்
- 20. ஆய்வுகூட உபகரணங்கள்
- 21. எலும்பியல் சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள்
- 22. எலும்பியல் அல்லாத ஏனைய சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
- 23. ஆய்வுகூட பாவனைப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்
- 24. கதிரியக்க பாவனைப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்
- 25. பற்சிகிச்சை உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
- 26. மருந்து வகைகள் மற்றும் மருத்துவ பரிந்துரையின் அடிப்படையில் வழங்கப்படும் விசேட பால்மா வகைகள்
- 27. CCTV கமரா பொருத்துதல்

02) **ஒப்பந்தக்காரர்கள் (கட்டிடப் பராமரிப்பு மற்றும் நிர்மாணம்)**
நீர்க்குழாய் திருத்தவேலைகள் / மின்னியலாளர்கள் / சாக்கடை வேலைகள் / நிறப்பூச்சு வேலைகள் / கொங்கிறீட் / செங்கல் / அலுமினிய நிர்மாணங்கள் / நீர்க் கசிவுகளை சீர்படுத்தல் போன்றன

03) **சேவைகள்**
- 01. மின்பிறப்பாக்கிகளின் திருத்தவேலைகள்
- 02. ஆடை தைத்தல் (திரைச்சீலை/கட்டில் விரிப்பு/ பிஜாமா உடை போன்றன)
- 03. உரிமை கோரப்படாத சடலங்கள் மற்றும் உடற் பாகங்களைப் புதைத்தல்
- 04. அனைத்து வாகனங்களையும் சேர்விஸ் செய்தல்
- 05. அனைத்து மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் (குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள் போன்றன)
- 06. வாகன திருத்தவேலைகள்
- 07. வாகன மின்னியல் / வளிச்சீராக்க திருத்தவேலைகள்
- 08. மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் / ஆய்வுகூட உபகரணங்கள் / பல் வைத்திய உபகரணங்கள் மற்றும் பல் சத்திரசிகிச்சை உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்.
- 09. மருத்துவ வாயுக்கள் வழங்குதல், அதற்குரித்தான உபகரணங்கள் மற்றும் வழங்கல் முறைமையின் திருத்தவேலைகளைச் செய்தல்
- 10. தளபாடங்களின் திருத்தவேலைகள் (பிரம்பு நாற்காலி பின்னல் / அலுவலக நாற்காலிகளின் திருத்தவேலைகள் போன்றன.)
- 11. குஷன் வேலைகள் / திருத்தவேலைகள்
- 12. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சர்விஸ் செய்தல் (கணனி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம்/ புகைப்படப் பிரதி இயந்திரம்/ ரோணியோ இயந்திரம்/ நகல் பிரதி இயந்திரம் / அச்சுப்பொறிகள் போன்றன)
- 13. ஊழியர்களின் அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
- 14. தீயணைப்பு உபகரணங்களை மீள் நிரப்புதல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்
- 15. மருத்துவ சிகிச்சைக் கழிவுகள் அல்லாத குப்பைகளை அப்புறப்படுத்தல்
- 16. பக்கோ இயந்திரங்கள், போர்க் லிப்ட், டிராக்டர்கள் மற்றும் ஏனைய வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்
- 17. அவசர தேவைகளின் போது ஆய்வுகூடம் / கதிரியக்கம் / ஸ்கான் போன்ற பரிசோதனைகளை மேற்கொள்ளல்.
- 18. அனைத்து வகையான மின் உபகரணங்களின் திருத்தவேலைகள்
- 19. சமையலறை உட்பட அனைத்துவிதமான வாயு அடுப்புகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
- 20. அனைத்துவிதமான வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
- 21. கலி பவுசர் சேவையை வழங்குதல் (கலி வழிகளின் அடைப்புகளை அப்புறப்படுத்துதல் மற்றும் கலி குழிகளைச் சுத்தம் செய்தல்)
- 22. CCTV கமரா திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு
- 23. உக்கிப்போன / அபாயகரமான மரங்களை வெட்டி அப்புறப்படுத்துதல்

04. **விற்பனை செய்தல்**
- 01. வைத்தியசாலையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் பொருட்களை விற்பனை செய்தல் (கண்ணாடி போத்தல்கள் / பிளாஸ்டிக் கேன்கள்/ பிளாஸ்டிக் போத்தல்கள் / சேலைன் போத்தல்கள் / எக்ஸ் கதிர் படங்களைக் கழுவிய கழிவு திரவம் / சிரட்டை / காகித அட்டைகள் / காகிதங்கள் / இரும்பு / வெள்ளியிரும்பு / அலுமினியம் / கட்டிடப் பொருட்கள் / டயர் / டியூப் / பிளாஸ்டிக் கேன்கள் போன்றன)

05. **அறிவுரைகள் மற்றும் நிபந்தனைகள்**
- i. ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களுக்கு வழங்குநர்களாக பதிவாகலாம்.
- ii. 02ஆம் இலக்க உருப்படிக்காக இங்கு கீழே தரப்படும் விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் பதிவிற்காக விண்ணப்பிக்க முடியாது என்பதுடன் இந்த நிறுவனத்தினால் வழங்கப்படும் விசேட விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பித்தல் வேண்டும்.
- iii. ஒவ்வொரு பொருளுக்காகவும் மீளளிக்கப்படாத 500.00 ரூபா பதிவுக் கட்டணத்தை இவ்வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவுக்கு வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரைச் செலுத்தலாம் என்பதுடன் அவ்வாறு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அல்லாவிடில் ''பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, களுத்துறை'' எனும் பெயரில் மக்கள் வங்கியில் 039100189025215 எனும் கணக்கிலக்கத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட வரவுப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது பண வரவுப் பற்றுச்சீட்டுகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். காசுக் கட்டளைகள் மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- iv. பின்வரும் மாதிரி விண்ணப்பத்துக்கு அமைய தம்மால் முறையாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு சகிதம் 2024-02-07ஆம் திகதிக்கு மு.ப. 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, களுத்துறை'' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது இந்நிறுவனத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- v. ஒன்றுக்கு மேற்பட்டவைகளுக்கு பதிவு செய்து கொள்வதாயின் ஒவ்வொரு அம்சத்திற்காகவும் வெவ்வேறான விண்ணப்பம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் வெவ்வேறாக பதிவுக் கட்டணம் செலுத்துதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பங்களையும் ஒரே கடித உறையில் இட்டு அனுப்பலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களை பதிவு செய்தல் - 2024'' என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
- vi. பொருட்கள் மற்றும் சேவைகளின் பொருட்டு குறைந்தபட்சம் 08 வார காலம் கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
- vii. வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் விலைமனு கோரப்பட்டாலும் பதிவு செய்யப்படாத வெளி வழங்குநர்களிடம் விலைமனு கோரும் உரிமையை இவ்வைத்தியசாலை பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
- viii. இந்த நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிரூபிக்க முடியாத சந்தர்ப்பங்களில் எவ்வித முன்னறிவித்தலும் இல்லாமல் பதிவு செய்வதற்கான எந்தவொரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமையை இவ்வைத்தியசாலை பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
- ix. தருவித்தற் கட்டளையில் வழங்கப்படும் அனைத்துப் பொருட்களையும் முறையாக களஞ்சியசாலைக்கு வழங்கியதன் பின் மற்றும் சேவைகள் முறையாக நிறைவேற்றப்பட்ட பின்னர் மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
- x. கட்டணம் அறவிடாமல் போக்குவரத்து வசதிகள் வழங்குதல் வேண்டும்.
- xi. விலைமனு கோரி அனுப்பும் போது விலைமனுக்கள் சமர்ப்பிக்காத மற்றும் சமர்ப்பிக்கின்ற விலை மனுவுக்கு பொருட்கள் வழங்காத நிறுவனங்கள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு (Black List) உட்படுத்த நேரிடும்.

களுத்துறை போதனா வைத்தியசாலையில் வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் - 2024

1. i. வழங்குநர்களின் / ஒப்பந்தக்காரர்களின் பெயர்:
   ii. அலுவலக முகவரி:
   iii. தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம்:
   iv. ந-அயடை முகவரி:
   v. whatsapp இலக்கம்:
2. வழங்கப்படும் பொருட்கள் / சேவைகள் மற்றும் இலக்கம்:
3. வியாபாரத்தின் பெயர் / பதிவிலக்கம் (பிரதிகளை இணைத்தல் வேண்டும்)
4. ஏயுவு பதிவிலக்கம் (பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைத்தல் வேண்டும்)
5. வழங்குநர்களின் தன்மை (வியாபார முகவர்கள், விநியோகஸ்தர்கள், உற்பத்தி நிறுவனங்கள்)
6. எட்டு வார (08) காலத்திற்கு கடன் அடிப்படையில் வழங்க முடியுமா என்பது பற்றி. முடியும்/முடியாது
7. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம், திகதி:
   செலுத்திய வங்கிக் கிளை:
   வங்கிக்கு வரவு வைக்கப்பட்ட திகதி மற்றும் தொகை:
8. பொருட்கள் கட்டளையிட்டதன் பின் போக்குவரத்து வசதிகள் இலவசமாக வழங்கப்படுமா என்பது பற்றி: ஆம் / இல்லை
9. வழங்கல் செயற்பாடுகளுக்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ள முகாமையாளரின் பெயர்/மற்றும் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம்:

திகதி: .....

.....
பணிப்பாளர் / முகாமையாளர்
(இறப்பர் முத்திரை)

மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை	இத் திகதி வரை மீட்கப்படாதவை	ஏல விற்பனைத் திகதி
03/10/2023	02/11/2023	26 & 30 /01/2024

கிளைகள் : அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொட, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ;பினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ;பினான்ஸ் பீஎல்சீ
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

108

நிஸான் கார்
விற்பனைக்கு

300- 504 NISSAN-PRIMERA-MOTOR CAR-1997-Silver கூடிய விலைக் கோரிக்கைக்கு, CBC பினான் ஸ் லிமிடட். 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. இல. 0812081033 002146

122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்
விற்பனைக்கு

WP-YE-1827-BA-JAJ AR RE-200 THREE WHEELER-2010-Neptune Blue கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான் ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. இல 0812081033 002137

WP- Y O-5741-BAJAJ-RE- 2 05-Three Wheeler - 2011 - Eco Green கூடிய விலைக் கோ ரிக்கைக்கு. CBC பினான் ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. இல 0812081033 002140

அறிவித்தல்

2023 நவம்பர் 13ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் கீழ் குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயரானது மாற்றப் பட்டுள்ளதென 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2)ஆம் பிரிவிற்கமைவாக அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.
கம்பனியின் முன்னைய பெயர்:
சனிசைட் அக்கவுண்டன்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம்:
பிவீ **00221239**
கம்பனியின் பதிவு அலுவலக முகவரி: **புருதுவெல்லகெதர காலமுன, குடாவெவ**
கம்பனியின புதிய பெயர் :
குரோத் புரொ.ப் லங்கா (பீவிவ) எல்டீ

பணிப்பாளர்
குரோத் புரொ.ப் லங்கா (பீவிவ)

வேலைவாய்ப்பு

323

வெற்றிடங்கள்
தொழிலாளர்கள்

ஹோமாகம கொடகம பழைய இரும்பு பொருட் கடைக்கு இரும்பு வெட்டு வதற்கு லொறிக்கு இரும்பு ஏற்றுவதற்கு ஆண் ஊழியர்கள் தேவை. காலை பகல் இரவு உணவு தங்குமி டம் இலவசம். சம்பளம் பேசித் தீர்க்கலாம். லசிரு ஸ்டோர்ஸ், கொடகம. 0777 542910. 001340

Repeat Your ad For Better Offers

பெறுகை அறிவித்தல்

சுகாதார அமைச்சு - போதனா வைத்தியசாலை, குருநாகல்

1. குருநாகல் போதனா வைத்தியசாலையில் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலை விடயங்களுக்காக பிராந்திய பெறுகைக்குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. விலைக்கோரல் ஆவணங்களை 2024-01-08ஆம் திகதி முதல் 2024-01-30ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வியாபாரப் பதிவு மற்றும் தகைமைகளை உறுதி செய்வதற்கான சாட்சிகள் மற்றும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிரதான கணக்காளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளும் 172 மாதிரிப் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. 02 பிரதிகளில் பிழையின்றி பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கோரல் பிணையுடன் 2024-01-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அவ்வாறல்லாவிடில் வைத்தியசாலையின் பிரதான கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வேலையின் பெயரைக் குறிப்பிடவும்.
4. இந்த பெறுகை தொடர்பில் குருநாகல் போதனா வைத்தியசாலை பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
5. பின்வரும் வேலை விடயங்கள் தொடர்பில் பெறுகை முன்னோடிக் கூட்டமொன்று 2024-01-19ஆம் திகதி பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
6. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8வது அத்தியாயத்தின் கீழ் நிறுவனப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் (PCA3) (விலைக்கோரல் ஆவணம் வழங்குவதற்காக மட்டும் சான்றிதழுக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஏற்றுக்கொள்ளப்படும்)
7. இந்த பெறுகை தொடர்பில் ஏதாவது மாற்றம் அல்லது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் அதுபற்றி www.kurunegalahospital.healthgow.lk எனும் இணையதளத்தில் பிரசுரிக்கப்படும்.

விடய இலக்கம்	வேலை விபரம்	தகைமை / அனுபவம்	மீளளிக்கப் படும் விலைக் கோரல் பிணைக் கட்டணம் ரூபா	மீளளிக்கப் படாத விலைக் கோரல் விண்ணப்பக் கட்டணம் ரூபா
01.	வைத்தியசாலையின் விசேடப் பிரிவுகளில் உள்ள பிளவு வகையான சிறிய அளவிலான 42 வளிச்சீராக்கி இயந்திரங்களுக்கான சேவை பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள் 2024/2025	CIDA (EM04) செல்லுபடியாகும் பதிவு, சேவை பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகளை நிறைவேற்றுதல் தொடர்பில் 03 வருட கால அனுபவம். இதில் 01 வருட காலம் அரச வைத்தியசாலையில் சேவையாற்றியிருத்தல் கட்டாயமாகும்.	ரூபா 20,000.00	ரூபா 2,000.00
02.	வைத்தியசாலையின் வார்ட்டுகள் மற்றும் பல்வேறு பிரிவுகளில் உள்ள பிளவு வகையான சிறிய அளவிலான 606 வளிச்சீராக்கி இயந்திரங்களுக்கான சேவை பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள் 2024/2025	CIDA (EM04) செல்லுபடியாகும் பதிவு, சேவை பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகளை நிறைவேற்றுதல் தொடர்பில் 03 வருட கால அனுபவம். இதில் 01 வருட காலம் அரச வைத்தியசாலையில் சேவையாற்றியிருத்தல் கட்டாயமாகும்.	ரூபா 50,000.00	ரூபா 2,000.00

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
போதனா வைத்தியசாலை,
குருநாகல்.

தொலைபேசி இல. 037-2233906-09 (நீடிப்பு 2800)

பெறுகை அறிவித்தல்

அரச அச்சக கூட்டுத்தாபனம்

விலைமனுக்களுக்கான அழைப்பு – (NCB)

இறக்குமதிகள்

கீழேயுள்ள பொருளின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் முகவர்களிடமிருந்து அரச அச்சக கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

FILE REFERENCE	QTY (M/Tons)	ITEM	BID BOND (Rs.)
SPC/SUP/F1/001/2023/39	25(±5%)	Procurement of White Printing Paper in reams 500 shts/24" x 30"/100±2.5% gsm	100,000.00

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக விலைமனுதாரர் பின்வரும் தகுதித்தன்மை தகவுத்திறனுடன் இணைந்தொழுகுதல் வேண்டும்.
   அ. முகவராண்மையின் நிலபரத்தை உறுதிசெய்வதற்கான உற்பத்தியாளரின் அதிகாரம்/ அற்றோணித்தத்துவம்
   ஆ. செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வர்த்தக பதிவு
3. 2024.01.16 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அரச அச்சக கூட்டுத்தாபனத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
4. 2024.01.08 ஆம் திகதியிலிருந்து 2024.01.26 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு தொகுதிக்கும் 5,000 ரூபாவை செலுத்திய பின்னர், பாதுக்க, பணாலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி குறிப்பீடு குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், 2024.01.29 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பாதுக்க, பணாலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம், பணாலுவ, பாதுக்க என்ற மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை முடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.
6. விலைமனுவானது அதனை மூடும் திகதியிலிருந்து 45 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கோரும்போது பெற்றுக் கொள்ளும் விலைமனு உத்தரவாத பணவைப்புக்கள் அல்லது நிபந்தனையற்றதும், தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம் என்ற முகவரிக்கு செலுத்தக்கூடிய வங்கி உத்தரவாதமானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை 011-2757500 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக / தொலைநகலூடாக வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைக் குழு,
அரச அச்சக கூட்டுத்தாபனம்,
பணாலுவ, பாதுக்க.
08.01.2024

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை

ஆவண முகாமைத்துவ அமைப்பை ஸ்தாபித்து நடத்திச் செல்வதற்கான (Document Management System)

பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரல்

Procurement No - PR/27/2024

கூட்டு ஆதன முகாமைத்துவ அமைப்பை ஸ்தாபித்து நடத்திச் செல்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தகைமையுள்ள மென்பொருள் கம்பனிகளால் சேவையை வழங்க வேண்டியது கீழே தரப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காகும்.

- கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் சான்றிதழ் பத்திர பிரிவில் கூட்டு ஆதன சான்றிதழ் விநியோகிப்பதற்கு குறித்த கோவை மற்றும் கட்டிட வரைபடத்தை ஸ்கேன் (Scan) செய்து ஆவண முகாமைத்துவ அமைப்பிற்குள் ஸ்தாபித்தல்

அவ்விலைமனுக்களைப் பெற்றுக் கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகள் மற்றும் விதிகள் கீழ்க்காணுமாறு அமையும்

1. விலைக்கோரல் அரச பெறுகை வழிகாட்டல் செயற்பாட்டின் பிரகாரம் இடம்பெறும்.
2. மேற்படி சேவையை வழங்குதல் சம்பந்தமாக குறைந்தபட்சம் 05 வருட அனுபவம் இருப்பதுடன் அதில் குறைந்தபட்சம் ஒரு சேவை அரச துறையில் நிறுவனத்திற்காக இருத்தல் வேண்டும். அரச துறையில் அல்லது தனியார் துறை நிறுவனங்களில் ஆவண முகாமைத்துவ அமைப்பை ஸ்தாபித்தல் சம்பந்தமாக 03 வருட அனுபவத்துடன் தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு இதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
3. இதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டியது கடந்த வருடங்களில் கூட்டு ஆதன சான்றிதழ் விநியோகிப்பதுடன் சம்பந்தப்பட்ட கோவைகள் மற்றும் கட்டிட வரைபட பிரதிகள் பற்றிய தெளிவுடன் கூடியதானபடியால் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டியது ஆவண பரிசீலனையின் பின்னராகும்.
4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் நிதிப் பிரிவு, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபைக்கு 2024.01.08 முதல் 2024.01.22 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அதிகார சபை காசாளாளரிடம் மீளளிக்கப்படாத ரூபா 1,000/- (+ VAT) கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கேள்வி ஆவணத் தொகுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
5. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்களை 'பொது முகாமையாளர், கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை, 1ம் மாடி, தேசிய வீடமைப்புத் திணைக்கள கட்டிடம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொழும்பு 02' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் மேற்கொள்ளலாம்.
6. கீழ்க்காணும் முகவரிக்கு 2024.01.29 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் தாமதாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை திறத்தல் அன்றே பி.ப. 2.00 இற்கு ஆரம்பிக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

பொது முகாமையாளர்,
கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை,
முதலாம் மாடி,
தேசிய வீடமைப்பு திணைக்கள கட்டிடம்,
சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு -02.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகார சபை

விலைமனுக்கான அழைப்பு

கீழேயுள்ள விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை நகர அபிவிருத்தி சபை சார்பாக திணைக்கள பெறுகைக் குழு (பாரிய) தலைவர் இப்போது அழைக்கின்றார்.

அட்டவணை - 01

விலைமனு இல.	செயற்றிட்ட பெயர்	மதிப்பிடப் பட்ட தொகை VAT உள்ளடங்கலாக (ரூ.)	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூ.)	விலைமனு பிணை தொகை (ரூ.)	ஒப்பந்த காலம் (நாட்கள்)	தகைமை CIDA பதிவுத் தரம்	விலை மனு பிணை செல்லு படியாதல்
1	தெமட்டகொட தளத்தில் பிரவேச வீதியை அகலமாக்குதல் மற்றும் காணி அபிவிருத்தி வேலைகள் PD/UDA/ DPC/ LAND DEV/ DEMATAGODA/ 01/2024	28,000,000.00	10,000.00 மற்றும் வரிகள்	280,000.00	90 நாட்கள்	C6, C5 & C4 கட்டிட வீதி நிர்மாண வேலைகளில் விசேடத் துவம்	27.05.2024

01. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனு கோரல் (NCB) முறையில் நடத்தப்படும்.
02. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாது இருப்பதுடன் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகள் மற்றும் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள ஏனைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பத்தரமுல்ல செத்சிரிபாய கட்டம் I, 07ம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகையின் தலைவரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2024 ஜனவரி 08 முதல் 2024 ஜனவரி 29 வரை வேலை நாட்களில் பெறுகை அலுவலகத்தின் தலைவரிடம் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.
04. நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவின் காசாளருக்கு மேற்படி அட்டவணை 01இல் உள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில் வேலை நாட்களில் 2024 ஜனவரி 08 முதல் 2024 ஜனவரி 29 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பத்தரமுல்ல, செத்சிரிபாய கட்டம் I, 07ம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகையின் தலைவருக்கு ஓர் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பிப்பதன் பேரில் எந்த உத்தேச விலைமனுதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைத் கொள்வனவு செய்யலாம்.
05. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்த இலங்கையின் ஓர் வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் விலைமனு ஆவணங்களில் மாதிரியின் பிரகாரம் வங்கி உத்தரவாதத்தின் படிவத்தில் ஓர் விலைமனுவிணை விலைமனுவுடன் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப் பிணையின் பெறுமதி மற்றும் விலைமனுப் பிணை செல்லுபடியாகும் காலம் அட்டவணை 01இல் குறிப்பிடப்பட்டுள்ளது அத்துடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு முகவரியிடப்படல் வேண்டும்.
06. அசல் மற்றும் நகல்களுடனான விலைமனுக்கள் 2024 ஜனவரி 30 மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பத்தரமுல்ல, செத்சிரிபாய கட்டம் I, நகர அபிவிருத்தி அதிகார சபை. 7ம் மாடி, திணைக்கள பெறுகைக் குழு (பாரிய) தலைவருக்கு முகவரியிடப்பட்டு கையோடு கொண்டு வந்து விநியோகிக்கலாம். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளிக்கும் அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும்.
07. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2024 ஜனவரி 22 மு.ப. 11.00 மணிக்கு பத்தரமுல்ல செத்சிரிபாய கட்டம் I, 07ம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைப் பிரிவில் நடைபெறும். எல்லா விலைமனுதாரர்களும் இந்தக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றார்கள்.
08. விலைமனுதாரர்களை தேர்ந்தெடுக்கும் போது விலைமனுதாரர்களின் முன்னைய திறமைகள் மற்றும் பணப்புழக்க நிலை கடுமையாக மதிப்பிடப்படும். திறமை குறைந்த விலைமனுதாரர்கள் எந்த விலைமனுக்கள் வழங்கலுக்கும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டார்கள்.
09. விலைமனுக்கள் தயாரிப்புடனும் சம்பந்தப்பட்ட எந்தச் செலவுகள் பற்றிய எந்தப் பொறுப்பையும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஏற்காது. கிடைக்கப்பெறும் விலைமனுக்களில் பொருத்தமான விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது எல்லா விலைமனுவையும் நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு (பாரிய) கொண்டிருக்கும். திணைக்கள பெறுகைக் குழு (பாரிய) இன் முடிவு இறுதியானதாகும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (பாரிய),
நகர அபிவிருத்தி அதிகார சபை,
07ம் மாடி, 'செத்சிரிபாய' கட்டம் I,
பத்தரமுல்ல.

ஜயா கொண்டேனர் டெர்மினல்ஸ் லிமிட்டெட்
(PB 960)
பதவி வெற்றிடம்

ஒப்பந்த வேலைவாய்ப்பில் 06 மாதங்களுக்கு உள்ளக கணக்காய்வாளர் பதவியை நிரப்புவதற்காக பொருத்தமான தகைமை மற்றும் அனுபவமுமுள்ள நபரொருவரை ஜயா கொண்டேனர் டெர்மினல்ஸ் லிமிட்டெட் அழைக்கின்றது.

மேலேயுள்ள பதவி வெற்றிடத்திற்கான விபரமான தகவல் மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியவற்றை www.jctltd.lk என்ற இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் cob@slpa.lk என்பதற்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்களுடன் கீழேயுள்ள முகவரியை 2024.01.23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

தலைவர்,
ஜயா கொண்டேனர் டெர்மினல்ஸ் லிமிட்டெட்,
இல.: 69, வோல்ஸ் ஒழுங்கை,
கொழும்பு-15.
தொடர்பெண்கள்: 2540045/6

NSB National Savings Bank

தேசிய சேமிப்பு வங்கி
விலைமனுக்களுக்கான அழைத்தல்
Tender No.: NSB/PT/2024/02

Procurement of Pre-Personalized EMV Dual Interface Cards to National Savings Bank of Sri Lanka

100,000 Master Card Pre-Personalized EMV Dual Interface அட்டைகளை வழங்குவதற்காக கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் கூட்டாண்மை பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

பெறுகையின் விளக்கம்	Procurement of EMV Dual Interface Card (Pre-Personalized Master Card 100,000)
ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்	18,000 இ.ரூபா – ரொக்கப்பணக் கொடுப்பனவு
சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைமனு உத்தரவாதப் பெறுமதி	850,000 இ.ரூபா
விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கான இறுதித் திகதி மற்றும் நேரம்	2024.01.30 ஆம் திததியன்று பி.ப. 3 மணிக்கு (1500 மணித்தியாலங்கள்)
கேள்வியை மூடும் திகதி மற்றும் நேரம்	2024.01.31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு (1000 மணித்தியாலங்கள்)
விலைமனு முன்னோடிக்கூட்டம்	2024.01.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு
தகுதித்தன்மை தகவுத்திறன்	

- பிரதான விலைமனுதாரரானவர் இலங்கையில் பதிவு பெற்ற கம்பனியாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் EMV Card Printing and Personalization இல் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு முதன்மையாளரொருவருடன் வணிக தொடர்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- பிரதான விலைமனுதாரரானவர் ஆகக் குறைந்தது 500,000 EMV அட்டைகளை இலங்கையில் கடந்த மூன்று வருடங்களில் (2021-2023) வழங்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் முதன்மையாளர் இலங்கையில் EMV 500,000 இற்கு மேற்பட்ட அட்டைகளை இலங்கைக்கு வழங்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் கடந்த மூன்று வருடங்களில் (2021-2023) பூகோளரீதியாக 25,000,000 EMV அட்டைகளை வழங்கியிருத்தல் வேண்டும்.
- விலைமனுதாரர் அல்லது முதன்மையாளர் '' Dual Interface Card வழங்கலை கையேற்பதில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- விலைமனுதாரரானவர் கடந்த இரு வருடங்களில் (2022-2023) இலங்கையின் வங்கியொன்றிற்கு ஆகக் குறைந்தது ஒரு personalized அட்டையின் ஒப்படைத்தலை சித்திகரமாக பூர்த்தி செய்திருப்பதுடன் பூர்த்தி செய்தலுக்கான சான்றொன்றை வழங்கல் வேண்டும்.
- முதன்மையாளரின் personalization அமைப்பானது PCIDSS சான்றழிக்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டுமென்பதுடன் தெளிவான அட்டை இலக்கங்களுடனான பாதுகாப்பு திறப்புக்கள் மற்றும் அட்டைகள் மற்றும் தரவு கோவை அட்டைகளை கையாளுதல் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை விபரிக்கும் ஒரு ஆவணத்தையும் வழங்கல் வேண்டும்.

1. விலைமனுக்கோரலானது தனியுடை முறையின் கீழான தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலைப் பெற்று 2024.01.30 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் 011-2372690/011-2377200 நீடிப்பு 413 அல்லது manager.supplies@nsb.lk என்பதன் வழியாக கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
3. 2024.01.08 ஆம் திகதிக்கும் 2024.01.30 ஆம் திகதிக்குமிடையில் வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமான 18,000 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், கூட்டாண்மை பெறுகைக் குழுவிற்கு கம்பனி தலைப்புக் கடிதத்தில் (மூலப்பிரதி) எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று பெற்றுக் கொள்ளப்படலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் தலைமையலுவலக கிளையின் கரும பீடத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
4. விலைமனுக்கள் தலைவர், கூட்டாண்மை பெறுகைக் குழு, வழங்கல் பிரிவு, தேசிய சேமிப்பு வங்கி, 255 காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரியில் முத்திரையிடப்பட்ட உறையில் பதிவுத் தபாலில் 2024.01.31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும் அல்லது முத்திரையிடப்பட்ட உறையில் மேலேயுள்ள முகவரியின் தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் 850,000 இலங்கை ரூபா பெறுமதியானதும் உரிமமுள்ள உள்ளூர் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் 2024.05.29 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனு உத்தரவாதம்/ விலைமனுப்பிணையமொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் மேலே குறிப்பிட்டுள்ளவாறான பொருத்தமானதொரு விலைமனு உத்தரவாதமொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியவற்றை தனித்தனியாக அடக்கும் முத்திரையிடப்பட்ட வெளியக உறையின் இடது பக்க மேல் மூலையில் "PROCUREMENT OF EMV DUAL INTERFACE CARD" என குறிப்பிடப்படல் வேண்டும்.
7. 2024.01.31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவில் விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் சமுகமளிப்பதற்காக சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் விலைமனுவொன்றின் பகுதியொன்றை ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை தேசிய சேமிப்பு வங்கியானது கொண்டுள்ளது.
9. விலைமனுக்கள் 2024.04.30 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

தலைவர்,
கூட்டாண்மை பெறுகைக் குழு,
தேசிய சேமிப்பு வங்கி,
255, காலி வீதி,
கொழும்பு-03.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

இலங்கை வங்கி

புல்மோட்டை பணியாளர் விடுதிக்குப் பொருத்தமான கட்டிடமொன்று தேவைப்படுகின்றது

உத்தேசக் கட்டிடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

- போதுமான வாகன நிறுத்துமிட வசதி இருத்தல் வேண்டும்.
- ஆகக் குறைந்தது 750 சதுர அடி தரைப் பரப்பளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.
- முறையான கழிவறைகள், மின்சாரம், தொடர்ச்சியான நீர் வழங்கல் போன்ற அடிப்படை வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் 1,000 லீற்றர் நீர் சேமிப்பு தாங்கி வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நான்கு நபர்கள் தங்கக்கூடிய குறைந்தபட்சம் இரண்டு அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- முறையான காற்றோட்டம் கொண்ட கட்டிடமாகவிருத்தல் வேண்டும்.
- தீ காப்புறுதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர், கட்டிட வரைபடப் பிரதி மற்றும் ஏனைய அனைத்து விபரங்களை பின்வரும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''புல்மோட்டை பணியாளர் விடுதிக்கான பொருத்தமான கட்டிடம்'' எனத் தயவு செய்து குறிப்பிடவும்.

உதவிப் பொது முகாமையாளர்,
(கிழக்கு மாகாணம்),
இலங்கை வங்கி,
கிழக்கு மாகாண அலுவலகம்,
இல. 455, பிரதான வீதி,
திருகோணமலை.

1975 BOC | A (lka) Fitch இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும் | தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. | இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

விலைமனுக்களுக்கான அழைப்பு

i. ஒப்பந்தம்: வடமத்திய மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்
ஒப்பந்த இலக்கம்: NCP/LG/LDSP/ACC/01

ii. ஒப்பந்தம்: வடமத்திய மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அலுவலக உபகரணங்களை (Branded மேசைக் கணனிகள், Branded மடிக் கணனிகள், டிஜிட்டல் புகைப்படப் பிரதி இயந்திரங்கள், Line Interactive UPS (650VA) மற்றும் லேசர் அச்சுப்பொறிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்
ஒப்பந்த இலக்கம்: NCP/LG/LDSP/ACC/02

1. உள்ளூராட்சி அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டத்தின் கிரயச் செலவிற்காக உலக வங்கியிடமிருந்து இலங்கை சோஷலிசக் குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது. இதன் ஒரு பகுதியை மேற்படி ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு பிரயோகிக்கவுள்ளது.
2. i. வடமத்திய மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்
   ii. வடமத்திய மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அலுவலக உபகரணங்களை (Branded மேசைக் கணனிகள், Branded மடிக் கணனிகள், டிஜிட்டல் புகைப்படப் பிரதி இயந்திரங்கள், Line Interactive UPS (650VA) மற்றும் லேசர் அச்சுப்பொறிகளை (A4) வழங்குதல் மற்றும் நிறுவுதல்

   என்பவற்றுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வடமத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

i ஒப்பந்தத்திற்கு

(பின்வரும் அட்டவணையின் பிரகாரம் பொருட்களின் பட்டியல் மற்றும் நிறுவவேண்டிய இடங்கள்)

தொ. இல.	பொருட்களின் உருப்படி விபரங்கள்	பிரதேச சபைகள்				விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா)
		நுவரகம்பலாத்த (கிழக்கு)	இபலோகம	மிகிந்தலை	பதவிய	
1	24000 But/hr குளிர்மையாக்கும் கொள்ளளவைக் கொண்ட பிளவு வகையான வளிச்சீராக்கி அலகு	1	3	5	-	100,000.00
	18000 But/hr குளிர்மையாக்கும் கொள்ளளவைக் கொண்ட பிளவு வகையான வளிச்சீராக்கி அலகு	2	-	1	-	
	12000 But/hr குளிர்மையாக்கும் கொள்ளளவைக் கொண்ட பிளவு வகையான வளிச்சீராக்கி அலகு	-	1	2	5	
	9000 But/hr குளிர்மையாக்கும் கொள்ளளவைக் கொண்ட பிளவு வகையான வளிச்சீராக்கி அலகு	-	-	1	2	

ii ஒப்பந்தத்திற்கு

(பின்வரும் அட்டவணையின் பிரகாரம் உருப்படிகளின் பட்டியல் மற்றும் வழங்கும் இடங்கள்)

லொட் இல.	லொட் 01	லொட் 02	லொட் 03	லொட் 04	லொட் 05
பொருட்களின் உருப்படி விபரங்கள்	Branded மேசைக் கணனி (All in One PC)	Line Interactive UPS (650VA)	Branded மடிக் கணனி	டிஜிட்டல் புகைப்படப் பிரதி இயந்திரம்	லேசர் அச்சுப்பொறி (Wi-Fi and Full Display)
பதவிய	2	2	1	1	-
கலென்பிந்துனுவெவ	2	2	2	1	-
கல்நேவ	6	6	-	-	2
கெபிதிகொல்லாவ	1	1	-	1	1
திறப்பனே	-	-	-	1	-
மிகிந்தலை	-	-	-	2	-
ரம்பேவ	20	20	1	-	1
மொத்த எண்ணிக்கை	31	31	4	6	4
விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா)	85,000.00	3,500.00	12,000.00	20,000.00	2,500.00

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் விலைகள் கோரப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வார நாட்களில் 09.00 மணித்தியாலம் முதல் 03.00 மணித்தியாலம் வரையில் (தொலைபேசி: 025-2224945, மின்னஞ்சல்: ncplg2020@gmail.com) அனுராதபுரம், தர்மபால மாவத்தை, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சித் திணைக்களம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் (LDSP) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
5. 2024-01-09ஆம் திகதி முதல் 2024-01-26ஆம் திகதி வரையான காலத்தில் மீளளிக்கப்படாத 1.500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் அனுராதபுரம், தர்மபால மாவத்தை, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சித் திணைக்களம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் (LDSP) அவர்களிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
6. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2024-01-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள தெரிவு செய்யப்பட்ட விலைனுதரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றினால் வழங்கப்பட்ட மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விலைமனுப் பிணை முறித் தொகை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி 2024-05-16ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2024-04-14ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. 2024 ஜனவரி 19ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அனுராதபுரம், தர்மபால மாவத்தை, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சித் திணைக்களம் எனும் முகவரியில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் தங்கள் சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

தலைவர்,
மாகாண செயற்றிட்டப் பெறுகைக் குழு,
உள்ளூராட்சி அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டம்,
மாகாண சபை கட்டிடத் தொகுதி,
ஹரிஸ்சந்திர மாவத்தை,
அனுராதபுரம்.

SRI LANKA CONVENTION BUREAU

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
இலங்கை மாநாட்டுப் பணியகம் (SLCB)

வெற்றிடங்கள்

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை மாநாட்டு பணியகம் (SLCB), கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணம், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகளை மேம்படுத்தும் நிறுவனமாகும்.SLCB இனால் பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரப்படுன்கிறது.

உதவி முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) பதவி

வெளி விண்ணப்பதாரர்கள் (1 அல்லது 2 அல்லது 3 கீழே)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி/கணக்கியல்/வணிகம்/நிதி முகாமைத்துவம் ஆகியவற்றில் பட்டம் மற்றும் பட்டப்படிப்புக்குப் பின்னர் முகாரமத்துவ மட்டத்தில் கண்காய்வாளர் பதவியில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம்.

02. அங்கீகரிக்கப்பட்ட பட்டய கணக்காய்வு நிறுவமொன்றில் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (ICASL/CIMA/ACCA அல்லது அதற்கு சமமான தொடர்புடைய தொழிற்திறன் நிறுவனத்திலிருந்து பிற தகுதிகள்) மற்றும் தமைமையினை பெற்றப் பின்னர் அரச சேவை, கூட்டுத்தாபனத்தில் சட்டப்பூர்வ அமைப்பு / தனியார் நிறுவனத்தில் கணக்காய்வு துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம்.

03. கணக்கியல் துறையில் உயர் தேசிய டிப்ளோமா பெற்றிருக்க வேண்டும் மற்றும் அரச சேவை, கூட்டுத்தாபனத்தில் சட்டப்பூர்வ அமைப்பு / தனியார் நிறுவனத்தில் கணக்காய்வு துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்

மேலே குறிப்பிட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்கள் தேவையான தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

வயதெல்லை : விண்ணப்பதாரர்கள் 22 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

சம்பள அளவு : ரூ. 54,550/- 10 x 1,375 -15x 1,910/- 96,950/= (MM 1-2)

அடிப்படைச் சம்பளம் : ரூ.54,550/- வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு + ஏனைய மாதாந்த கொடுப்பனவுகள்

உதவி முகாமையாளர் பதவி (நிறுவனம், ஊக்கத்தொகை மற்றும் நிகழ்வுகள்)

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சந்தைப்படுத்தல் /வணிகம் /நிகழ்வு முகாமைத்துவம்/ சுற்றுலா மேலாண்மை /வணிக நிர்வாகம்/ வணிக முகாமைத்துவம் ஆகியவற்றில் இளங்கலைப் பட்டம் மற்றும் குறைந்தபட்சம் அரச சேவை, கூட்டுத்தாபனத்தில் சட்டப்பூர்வ அமைப்பு / தனியார் நிறுவனத்தில் கணக்காய்வு துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம்.

பட்டய நிறுவனத்தில் இருந்து சந்தைப்படுத்தலில் தொழில்முறை முதுகலை டிப்ளமோ கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்

மேலே குறிப்பிட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்கள் தேவையான தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

வயதெல்லை : விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

அடிப்படைச் சம்பளம் : ரூ. 54,550/- 10 x 1,375 -15x 1,910/- - 96,950/= (MM 1-2)

அடிப்படைச் சம்பளம் : ரூ. 54,550/- வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு+ ஏனைய மாதாந்த கொடுப்பனவுகள்

முகாமைத்துவ உதவியாளர் பதவி (தொழிநுட்பமல்லாத)

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

க.பொ.த (சா/த) பரீட்சையில் முதல் இருப்பில் ஆறு பாடங்களில் சித்தியுடன் சிங்களம் / தமிழ், ஆங்கில மொழி மற்றும் கணிதம் பாடம் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் சாதாரன சித்தி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சையில் வணிக பிரவில் தோற்றி ஒரு இருப்பின் மூன்று பாடங்களில் (பொதுப்பரீட்சை அல்லாமல்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்

பின்வரும் தகுதிகளுடன் முதன்மை - பயிற்சி பெற்ற, முதன்மை - அரை பயிற்சி பெற்ற மற்றும் முதன்மை - திறமையற்ற பிரிவுகளின் பணியாளர்கள் இதற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

க.பொ.த (சா/த) பரீட்சையில் முதல் இருப்பில் நான்கு பாடங்களில் சித்தியுடன் சிங்களம் / தமிழ், ஆங்கில மொழி மற்றும் கணிதம் பாடம் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் சாதாரன சித்தி பெற்றிருத்தல் வேண்டும் மேலும் மேற்கண்ட சேவைப் பிரிவின் கீழ் நிரந்தர பதவியில் குறைந்தது ஐந்து வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.

வயதெல்லை : விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

சம்பள அளவு : ரூ. . 27,910/- 10 x 300- 7x350-12x600-12x710 -49,080 (MA 1-2)

அடிப்படைச் சம்பளம் : ரூ. 27,910/- வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு+ ஏனைய மாதாந்த கொடுப்பனவுகள்

வாகன ஓட்டுனர் பதவி

உள்ளக விண்ணப்பதாரர்கள்

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியுடன் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் வழங்கிய உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் வழங்கிய உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மற்றும் முதன்மை திறனற்ற (PL1) பிரிவில் உள்ள பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்தல்

வயதெல்லை :விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு அதிகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது.

சம்பள அளவு : ரூ. 26,290/- 10 x 270- 10x300-10x330-12x350 - 39,490 (PL 3)

அடிப்படைச் சம்பளம் : ரூ. 26,290/- வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு+ ஏனைய மாதாந்த கொடுப்பனவுகள்

ஏனையவை :

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை நன்கு நிறைவேற்றவும், நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றவும் கூடிய உடல் மற்றும் மனரீதியான திடகாத்திரத் தினை கொண்டிருத்தல் வேண்டும்.
iii. நேர்மையான ஒழுக்காற்றுத் தன்மையை கொண்டவராக இருத்தல் வேண்டும்

நன்மைகள் :

i. பணியாளர் மற்றும் குடும்பத்தினரை உள்ளடக்கிய விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.
ii. கடன் வசதிகள்
iii. தொலைபேசி கொடுப்பனவு (MM 1-2 தரத்திற்காக)
iv. தொழில்முறை கொடுப்பனவு (MM 1-2 தரத்திற்காக)

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களின் கல்வி / தொழில்முறை தகுதிகள், பணி அனுபவம் மற்றும் உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர்கள் ஆகியவற்றைக் உருதிப்படுத்தும் சான்றிதழ்களின் நகல்களுடன் **2024 ஜனவரி 22** ஆம் திகதிக்கு முன் **slcbmice@gmail.com** எனும் மின்னஞ்சல் அனுப்புதல் வேண்டும். தயவுசெய்து நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை உறையின் மேல் இடது பக்க மூலையில் குறிப்பிடவும்.

அரச திணைக்களங்கள் / அரச கூட்டுத்தாபங்கள் / சட்டப்பூர்வ அமைப்புகளில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத்தின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு.
இலங்கை மாநாட்டுப் பணியகம்,
நான்காம் மாடி, ஹோட்டல் பாடசாலை கட்டிடம், இல-78, காலி வீதி,
கொழும்பு 03.

SELACINE

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

மாத்தறை மாநகர சபை

2024 ஆம் வருடத்திற்கான வரிக் கட்டணம் அறவிடல்

இலங்கை நீதிப் பிரமாணத்தின் 252 ஆம் அதிகாரத்தின் கீழ் மாத்தறை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 230 ஆம் சரத்தின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் விடயப்பொறுப்பு அமைச்சர் மாநகர சபை அவர்களின் அனுமதியின் கீழ் பிரதான விலைமதிப்பாளரினால் மாத்தறை மாநகரசபை வளுப்பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து சொத்துகளுக்கும் 2019 ஆம் வருடத்தில் நடத்தப்பட்ட விலைமதிப்பின் திருத்தத்தின்படி பெற்றுக்கொடுக்கப்பட்ட வருடாந்த விலைமதிப்பின் பெறுமதியை 2024 ஆம் வருடத்திற்கென ஏற்றுக்கொண்டு குறித்த வருடாந்த பெறுமதியில் வியாபார மற்றும் வணிக செயற்பாட்டிற்கான பாவனைக்கு உட்படும் இடங்களுக்கு நூற்றுக்கு 12% (பன்னிரண்டு) வரிமதிப்பு வரியையும், ஏனைய சொத்துகளுக்கு (ஐந்து) 5% வரிமதிப்பு வரியையும், 2024 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடப்படவும் 2023/11/02 ஆம் திகதி நடைபெற்ற தீர்மான இலக்கம் 2023/11/02/1674 இன் கீழ் ஏகமனதாக ஏற்றுக்கொண்டதாகவும், அதன் படி கீழே குறித்த விதத்தில் வரி அறவிடவென தீர்மானித்தாகவும் இத்துடன் அறியத்தருகின்றேன்.

1. முறைப்படி மார்ச் மாதம் 31, யூன் மாதம் 30, செப்டெம்பர் மாதம் 30 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் முடிவுறும் விதத்தில் நான்கு தவணைகளாக செலுத்தி முடிக்கலாம்.
2. 2024 ஆம் வருடத்திற்கான வரிக் கட்டணத்தை அவ்வருடத்தின் ஜனவரி 31 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் வருடத்திற்குமான குத்தகையை முற்றுமுழுதாக கட்டி முடிப்பதாயின் குத்தகைப் பணத்தில் நூற்றுக்கு 10% கழிவு வழங்கப்படும் ஒவ்வொரு தவணைக்குமான வரியை தவணைக் கால ஆரம்பத்தில் கட்டி முடிப்பதாயின் நூற்றுக்கு (5%) கழிவும் வழங்கப்படும்.
3. மேற்குறிக்கப்பட்டுள்ள அத்தியாயத்தில் குறித்த திகதிகளின் பின் வரிமதிப்புப் பணம் செலுத்தப்படுமிடத்து காணி வதிவிடம் சொத்துகள் போன்றவற்றிற்கு நூற்றிற்கு (15%) தண்டப் பணமும் ஏனைய சொத்துகளுக்கு நூற்றுக்கு (20%) மேலதிக தண்டப் பணமும் அறவிடப்படும்.

கான்சனா கே. தல்பாவில,
நகர ஆணையாளர்,
மாத்தறை மாநகர சபை
மாத்தறை

2023.11 மாதம் 29 ஆம் திகதி
மாத்தறை மாநகர சபை அலுவலகத்தில்

விலைமனு கோரல்

கண்டி மாநகர சபை

கண்டி மாநகர சபைக்குரித்தான 79/11ஆம் இலக்க மாதிரி வீடுகள் வீதி, மாவில்மட, கண்டி எனும் இடத்தில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் காணியை மறுசீரமைத்தல் மற்றும் மேம்படுத்தி முகாமைத்துவம் செய்தல், பராமரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக செயற்படுத்தல் குத்தகை முறையின் கீழ் பதினைந்து (15) வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்குதல்

01. கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளரினால் கண்டி மாநகர சபைக்குரித்தான 79/11ஆம் இலக்க மாதிரி வீடுகள் வீதி, மாவில்மட, கண்டி எனும் இடத்தில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் காணியை மறுசீரமைத்தல் மற்றும் மேம்படுத்தி முகாமைத்துவம் செய்தல், பராமரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக செயற்படுத்தல் குத்தகை முறையின் கீழ் நடாத்திக் கொண்டு செல்வதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதன்பொருட்டு தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 10,000.00 + (வெட் மற்றும் முத்திரைக் கட்டணம்) பெறுமதியான மீளளிக்கப்படாத விலைக்கோரல் வைப்புத் தொகையை கண்டி மாநகர சபையின் மாநகர சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றையும் மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழான பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் சமர்ப்பித்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

01	விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம்	CPC/KMC/FD/M06/03/2023
02	மீளளிக்கப்படாத வைப்புத் தொகை	1. ரூபா 10,000.00 + (வெட் மற்றும் முத்திரைக் கட்டணம்) • கண்டி மாநகர சபையின் சிறாப்பருக்குச் செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03	ஆகக் குறைந்த விலைக்கோரல்	முப்பத்தாறு மில்லியன் ரூபாவாகும். (ரூபா 36,000,000.00) இது அரச மதிப்பீட்டிற்கு உள்ளாகும். அரச மதிப்பீட்டுத் தொகை சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் தொகைக்கும் அதிகமாக இருந்தால் அரச மதிப்பீட்டுத் தொகை சாதகமான தொகையாகவும் அரச மதிப்பீட்டுத் தொகை சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் தொகையை விடக் குறைவாக இருந்தால் விலைமனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொகை சாதகமாக விலைக்கோரல் தொகையாக ஏற்றுக்கொள்வதற்கு விலைமனுதாரர் இணங்குதல் வேண்டும்.
04	விலைமனு ஆவணங்கள் வழங்க ஆரம்பிக்கும் திகதி	2024-01-03ஆம் திகதி முதல் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை வாரத்தின் வேலை நாட்களில்
05	விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம்	கணக்காளர் (வருமானம்) அலுவலகம், இல. 12, தபோவன வீதி, மாநகர சபை, கண்டி.
06	விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம்	2024-02-05ஆம் திகதி பி.ப. 2.45 மணி வரை
07	விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் இடம், திகதி மற்றும் நேரம்	2024-02-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி மாநகர சபையின் சபை மண்டபத்தில்
08	விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம்	2024-03-01ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்
09	பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடம் மற்றும் விலைமனு ஆவணங்கள் (தொழில்நுட்ப முன்மொழிவுகள்) திறக்கப்படும் இடம், திகதி மற்றும் நேரம்	2024-03-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தொழில்நுட்ப முன்மொழிவுகள் திறக்கப்படும் என்பதுடன் மு.ப. 10.00 மணிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து கண்டி மாநகர சபையின் நிதி நிர்வாகத் திணைக்களத்தின் பிரதான முகாமைத்துவ உதவியாளரிடம் பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொண்டு பிரதான மாநகர கணக்காளர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் / ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் தொழில்நுட்ப விலைக்கோரல் ஆவணங்கள் திறக்கப்படும்.
10	நிதி விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி, இடம் மற்றும் நேரம்	தொழில்நுட்ப முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களுக்கு நிதி முன்மொழிவுகள் திறக்கப்படும் நாள் பற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் எதிரில் நிதி விலைக்கோரல் ஆவணங்கள் திறக்கப்படும்.
11	விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்	விலைமனு ஆவணங்களை ஏற்றுக்கொண்ட நிறுவனத்தின் (நிறுவனம்/ பங்கு வியாபாரம் / தனி நபர் வியாபாரம்) பெயரிலேயே விலைமனு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனு ஆவணங்களை பரிமாற்றம் செய்ய முடியாது.
12	விலைமனுப் பிணை முறி	2024-07-01ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரத்துச் செய்ய முடியாத கோரப்படும்போது செலுத்தப்படும், நிபந்தனையற்றதாக வழங்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபா (100,000.00 ரூபா) பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
13	செயலாற்றுகை பிணை முறி	தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரினால் சாதாரண வருடாந்த கேள்வித் தொகைக்குச் சமமான பெறுமதியான இரத்துச் செய்ய முடியாத கோரப்படும்போது செலுத்தப்படும், நிபந்தனையற்ற செயலாற்றுகை பிணை முறியொன்றை இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து 12 மாதங்கள் வரை செல்லுபடியாகும் வகையில் வழங்குதல் வேண்டும். இந்த செயலாற்றுகை பிணை முறி ஒவ்வொரு வருடமும் காலாவதியாகும் மாதத்திற்கு முன் கடந்த வருடத்திற்கான செயலாற்றுகை பிணை முறியின் பெறுமதியை விட 2% வருடாந்த அதிகரிப்புடன் வழங்குதல் வேண்டும்.
14	தகைமைகள்	1. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம், கூட்டு வியாபாரங்கள் அல்லது தனிநபர் வியாபாரங்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். 2. 2021/2022ஆம் வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையின் பிரகாரம் நடைமுறைச் சொத்து விகிதம் 1:1.5 ஆக இருத்தல் வேண்டும். 3. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் பணிப்பாளரொருவர், கூட்டு வியாபாரத்தின் பங்குதாரர் அல்லது தனி வியாபாரத்தின் உரிமையாளர் இலங்கை கடன் தகவல் பணியகத்தில் (CRIB) கடனைச் செலுத்தாத அறிக்கை இல்லாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 2023-12-31ஆம் திகதியன்றுள்ளவாறு CRIB அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். 4. விலைமனுதாரர் கண்டி மாநகர சபையினால் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதுபற்றி சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் உறுதிப்படுத்துதல். 5. விலைமனுதாரரினால் சமர்ப்பிக்கப்படும் தொழில்நுட்ப முன்மொழிவின் பிரகாரம் கட்டிடம் மற்றும் காணி மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தலுக்கு இயைபான மதிப்பீட்டுத் தொகைக்கு சமமான தகைமையுள்ள CIDA பதிவைப்பெற்ற ஒப்பந்தக்காரர்/காரர்கள் பெயரிட்டு அவர்களின் விபரங்களை தொழில்நுட்ப முன்மொழிவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். 6. விலைமனுதாரர் கண்டி மாநகர சபையுடன் நிதி நடவடிக்கைகள் தொடர்பான வழக்கு உள்ள நிறுவனம் / நிறுவனங்களாக அல்லது தனி நபர் / தனி நபர்களாக இருத்தல் கூடாது.

03. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் 2024-01-03ஆம் திகதி முதல் கண்டி மாநகர சபையில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.45 மணி வரையில் மாநகர கணக்காளர் (வருமானம்) அவர்களின் 081-2227395 எனும் தொலைபேசி இலக்கத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கே.கே.பீ.ஐ.டி.பீ. விஜேதிலக,
மாநகர ஆணையாளர்,
கண்டி மாநகர சபை.

கொழும்பு பாத்திமாவில் சயீடாவின் முக்கிய நிகழ்வு

ருசைக் பாரூக்

துபாய், சயீடா அமைப்பின் முக்கிய நிகழ்வொன்று கொழும்பு பாத்திமா மகளிர் கல்லூரியில் (03) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சயீடாவின் ஸ்தாபகத் தலைவர் சலீம் யூசுப் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

கௌரவ அதிதியாக கலந்துகொண்ட சென்னையிலுள்ள சூரியா வைத்தியசாலையின் நிர்வாக தலைவர் டொக்டர் ராகுல் ஸ்ரீகுமார் பாடசாலை மாணவியொருவரால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்படுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி உட்பட பிரமுகர்களையும் சயீடாவின் நிதியுதவியில் கொழும்பு மாவட்டத்திலுள்ள சுமார் 10 பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கட்டட நிர்மாண பணிகள் தொடர்பில் 'புரொஜெக்டர் திரை' மூலம் அவருக்கு ஏற்பாட்டாளர்களினால் காண்பிக்கப்பட்டது.

மேற்படி 10 பாடசாலைகளில் முஸ்லிம், தமிழ், கிரிஸ்தவம் மற்றும் சிங்கள பாடசாலைகள் உள்ளடங்குவதென்பது விசேட அம்சமாகும்.

யானை தாக்கி வயோதிபர் பலி

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

நோய்க்கு சிகிச்சை பெறுவதற்கு ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தருவதற்காக பஸ் ஸூக்காக காத்திருந்த வயோதிபர் யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளதாக மத்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

ரன்முதுவெவ பிரதேசத்தை வசிப்பிடமாக கொண்ட கே. எச். குணபால எனும் 69 வயது வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காணி சுவீகரித்தல் (திருத்த) சட்டத்தின் (460வது அத்தியாயம்) 7வது பிரிவின் கீழ் அறிவித்தல்

பொது மக்கள் பணி நிமித்தம் தேவையாகவுள்ள கீழ் காணப்படும் காணிப் பகுதியை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியுள்ளமையினால் 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7வது பிரிவின் (1)வது உப பிரிவின் கீழ் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

பெற்றுக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:
ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் அமபலாந்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் மாகம் பத்துவ சிறிய பகுதியில் ரிதியகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் கொடகொக்கல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை நாயகத்தின் இ.கி.வ. 564 மேலதிக இலக்கம் 30 பத்திர இலக்கம் 28இல் துண்டு இலக்கம் 387 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்திலிருந்து 0.1536 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் காணிப்பகுதி

01. துண்டு இலக்கம் 387

காணியின் பெயர் - பங்கலா கொடல்ல கொக்கல பெத்த கொக்கல்ல கெலே
காணியின் விபரம் - வீதி
உரிமை கோருபவர் - அரசு
முதல் உரிமையாளர் - அம்பலாந்தொட்ட பிரதேச சபை
விஸ்தீரணம் - 0.1536 ஹெக்டயார்

மேற்குறித்த காணிக்கு/ வழியுரிமைக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 தை மாதம் 22ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அம்பலாந்தொட்ட பிரதேச செயலகத்தில் என் முன்பாக தோன்றல் வேண்டும்.

மேலும் 2024.01.14ஆம் திகதிக்கு முன்னர் அக்காணி/காணிகள் சம்பந்தமாக அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணி/காணிகள் உரிமையை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் இரண்டு பிரதிகளையுடைய எழுத்துமூல ஆவணத்தினூடாக எனக்கு அறிவிக்க வேண்டும்.

பிரதேச செயலாளர்,
அம்பலான்தொட்ட.

2022 ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி
அம்பலாந்தொட்ட பிரதேச செயலகத்தில்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைத்தல்

இல.	ஒப்பந்தப் பெயர்
01.	CKE & OCH ஆகியவற்றிற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கல். RDA/EOM&M/Sec-Ser/OCH&CKE/2023/44
02.	கொட்டாவையிலிருந்து கொடகம/பாலதுவ வரையும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் விபத்துக்கள் இடம்பெறும் அமைவிடங்களில் பாதுகாப்பு வேலிகள் மற்றும் தொடர்புடைய துணைப்பாகங்களை கழற்றல் மற்றும் நிறுவுதல். RDA/EOM&M/SE/GDRL-REP/2023/48

மேலேயுள்ள வேலைக்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.01.08 ஆம் திகதியிலிருந்து 2024.01.30 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்,
அதிபராமமு பிரிவு பெறுகைக் குழு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரிப்பு (மறுசீரமைப்பு) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டம் (460ஆம் அத்தியாயம்) 39 ஆ(1) பிரிவின் கீழான அறிவித்தல்

குறியீட்டு இலக்கம்: 03J/91/HW/127

இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசு சுவீகரிக்க உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2023.08.16ஆம் திகதியின் 2345/49 இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டம் : மாத்தறை
பிரதேச செயலாளர் பிரிவு : திக்வெல்ல
கிராம சேவையாளர் பிரிவு : வத்தேகம, வத்தேகம தகுண
கிராமத்தின் பெயர் : பத்தேகம, பதிகம
காணியின் பெயர் : தெய்யன்கேவத்த, கலபுவ வத்த. வெலிபிடியெ கெதரவத்த முதியன்ஸெகெவத்த
வதிட்ட இலக்கம் : மு.பி. மாறை 1867
துண்டு இலக்கம் : 03,04,15,21,27,38,40,41,42

ஸுஷன்த அத்தநாயக,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

2023.12.30ஆம் திகதி
திக்வெல்ல பிரதேச செயலகம்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - களுத்துறை

2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் / முகவர்கள் / பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் / கூட்டுத்தாபனங்கள் உட்பட அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தனியார்களிடமிருந்து இந்த அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கச்சேரி கட்டிடத் தொகுதி, 04ஆம் மாடி, த.பெ. இல. 29, களுத்துறை எனும் முகவரிக்கு அனுப்பி அல்லது தலைமை அலுவலகத்திற்கு நேரடியாகக் கொண்டுவந்து ஒப்படைத்துக் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொருட்கள் வழங்குதல்

உருப்படி இல.	பொருட்கள் / வழங்கல்கள்
G-1	காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் புகைப்படப்பிரதி தாள்கள், கணனி அச்சுத் தாள்கள், இறப்பர் முத்திரைகள், போல்பொயின்ட் பேனைகள், பைல் கவர்கள், குண்டூசிகள், கடித உறைகள், பஞ்சர், ஸ்டேப்ளர் வேறு எந்தவொரு வகையான அலுவலக காகிதாதிகள்
G-2	அலுவலக உபகரணங்கள் (மரத் தளபாடங்கள், உருக்கு பிளாஸ்டிக் பொருட்கள்) மேசைகள், கதிரைகள், கணனி மேசைகள், பெயர்ப் பலகைகள், அலுவலகப் பைகள், பைல் பைகள், பைல் ராக்கைகள், அலுமாரிகள், கெபினெட்டுகள், டெஸ்க் வாங்குகள் போன்றன
G-3	கணனி மற்றும் கணனி சார்ந்த உபகரணங்கள் மேசைக் கணனிகள், மடிக்கணனிகள், டெப்லட், அச்சுப்பொறிகள், ஸ்கேனர் இயந்திரம், மாநாட்டு உபகரணங்கள், அச்சுப்பொறிகள், டோனர் வகைகள், கார்ட்ரிச், தடையற்ற மின் வழங்கிகள் (UPS), கணனி மென்பொருள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள், ஓவர் ஹெட் புரஜெக்டர் மற்றும் துணைப்பாகங்கள், மல்டிமீடியா புரஜெக்டர், நகல் பிரதி இயந்திரங்கள் (டுப்ளோ இயந்திரங்கள்), கணனி மென்பொருள் உருவாக்கம் மற்றும் ஏனைய இலத்திரனியல் துணைப்பாகங்கள் போன்றன
G-4	மின்சாரம், இலத்திரனியல் துணைப்பாகங்கள் மற்றும் பராமரிப்பு உபகரணங்கள் மின்விசிறிகள், பல்ப்கள் உட்பட மின்சார துணைப்பாகங்கள், குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டிகள், வானொலிப்பெட்டிகள், டிஜிட்டல் கமராக்கள், வீடியோ கமராக்கள், CCTV கமராக்கள், வளிச்சீராக்கி இயந்திரங்கள், மின்பிறப்பாக்கி இயந்திரங்கள், வெக்கும் கிளீனர்கள், பொலிஷர் போன்றன.
G-5	தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் கருவிகள் வலையமைப்பிடல் மற்றும் வலையமைப்பு உபகரணங்கள் (ரவுட்டர், சுவிட்ச், சேர்வர் களஞ்சியப்படுத்தல் உட்பட) கையடக்கத் தொலைபேசி: CDMA தொலைபேசி, டொங்கல், ஒலிப்பெருக்கி முறைமைகள் மற்றும் பராமரிப்பு உபகரணங்கள் (Tool kit, Blower, Screwdrivers) போன்றன
G-6	மென்பொருள் அபிவிருத்தி, பாவனையாளர் மென்பொருள் (மைக்ரோசொப்ட் பாவனையாளர் மென்பொருள் மற்றும் ஏனைய மென்பொருள்கள்), இயக்க முறைமை, தரவு நிரல் மற்றும் தகவல் பாதுகாப்பு சார்ந்த மென்பொருள் (பயர்வோல், வைரஸ் கார்ட், இணையதள செய்தி அனுப்புவதை இடையூறு செய்தல் (Anti-Spam) உட்பட பில்டர் செய்தல் போன்றன)
G-7	சகல வகையான டயர்கள், டியூப்கள், வாகன பெட்டறிகள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
G-8	சகல வகையான துணிகள் மற்றும் திரைச்சீலைகள், ரெக்சின், மெகின்டோஸ், நுளம்பு வலைகள்
G-9	பிளாஸ்டிக் உருப்படிகள் மற்றும் அலுமினிய பொருட்கள்
G-10	கட்டிட உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் சீமெந்து, மணல், செங்கல், மரம், ஓடுகள், இரும்பு, கூரைத் தகடுகள், மின் இணைப்பு வயர் மற்றும் துணைப்பாகங்கள், நிறப்பூச்சுகள், மின்சார துணைப்பாகங்கள், வெளிக்களத்தில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், நீர்த் தாங்கிகள், நீர்க் குழாய் துணைப்பாகங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் (உ-ம்: மண்வெட்டிகள், முள்ளுகள், கடப்பாறைகள், ரேக்கைகள் போன்றன), கால் துடைப்பம் (வெல்வட், PVC) பீங்கான் கோப்பைகள் மற்றும் கண்ணாடிக் குவளைகள்
G-11	தீயணைப்பு உபகரணங்கள்
G-12	நிகழ்ச்சிகளுக்கான சமைத்த உணவுகளை வழங்குதல் (சிற்றுண்டிகள், பகல் உணவுகள், பேக்கரி உற்பத்திகள்)
G-13	விளையாட்டுத்துறை உபகரணங்கள்
G-14	கெனபி கூடாரங்கள் மற்றும் பு.பே செட்கள்
G-15	ஆடை உற்பத்திகள் (காலணிகள், சத்திரசிகிச்சை காலணிகள், செருப்பு, கையுறை, முகக் கவசம், தொப்பி, பைகள், குடைகள், மழை அங்கிகள் போன்றன)
G-16	கேஸ் அடுப்புகள், கேஸ் பேர்னர்கள், ரெகியுலேட்டர், அடுப்பு உதிரிப்பாகங்கள், வீட்டு கேஸ் சிலின்டர்கள் மற்றும் ஏனைய சமையலறை உபகரணங்கள்
G-17	துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (சவர்க்காரம், கழுவும் தூள் / திரவம், மெதிலேடட் ஸ்பிரிட், தீப்பெட்டி, சவர அலகுகள், பெட்டறிகள், கைகழுவும் திரவம், ஹார்பிக், பைனோல், பொலிஷ் போன்றன), தும்புத்தடி, ஈர்க்கிள், தூரிகைகள், கால்துடைப்பம், மெத்தை மற்றும் ஏனைய சுத்திகரிப்பு உபகரணங்கள்
G-18	வைத்தியசாலைக் கட்டில், லொக்கர், ட்ரொலி, TV ஸ்டான்டுகள், சக்கர நாற்காலிகள் மற்றும் வார்ட்டுகளுக்குச் சமமான உபகரணங்கள்
G-19	திணைக்கள அடையாள அட்டைகள்
G-20	உத்தியோகபூர்வ உற்சவங்களுக்கான உணவு வழங்குதல் (சிற்றுண்டிகள், தேநீர், மதிய உணவு மற்றும் இனிப்பு - பு.பே மற்றும் பெட்டிகளாக)

சேவை வழங்கல்

S-1	புகைப்படப்பிரதி இயந்திரங்கள், அச்சுப்பொறிகள், கணனி மற்றும் நகல்பிரதி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
S-2	மின்சார உபகரணங்கள், ஒலிபெருக்கி உபகரணங்கள், வளிச்சீராக்கி இயந்திரங்கள், மின்பிறப்பாக்கி இயந்திரங்கள், CCTV கமரா மற்றும் குளிர்சாதனங்கள் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
S-3	உள்ளக மின் வழங்கல்கள் மற்றும் மின்சார பொருத்தல் வேலைகள்
S-4	மின்சார சேர்கியூட்கள், நீர்க் குழாய் மற்றும் நீர்ப் பம்பிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
S-5	அச்சு வேலைகள், புத்தகம் கட்டுதல், நினைவிதழ்கள் தயாரித்தல் (ஓப்செட் அச்சு வேலைகள் உட்பட) மற்றும் பெயர்ப் பலகைகளைத் தயாரித்தல் (டிஜிட்டல் அச்சு வேலைகள்), இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்
S-6	கணனி வலையமைப்பிடல்
S-7	ஒலிபெருக்கி இயந்திரங்கள் வழங்குதல்
S-8	வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்குதல் (கார், வேன், லொறி, பஸ் போன்றன)
S-9	உற்சவ வேளைகளுக்கான பொருட்கள் வழங்குதல் (பெரபோல் கூடாரங்கள், மேடைகள், தற்காலிக கண்காட்சிக் குடில்கள், கேட்டரிங் சேவைகள், பு.பே செட்கள், கதிரை, மேசைகள், தரை விரிப்புகள் போன்றன)
S-10	கிறில் கேட்கள் உட்பட வெள்ளியிரும்பு வேலை சேவைகள்
S-11	சகல வகையான வாகனங்களை காப்புறுதி செய்யும் நிறுவனங்கள்
S-12	சகல வகையான வாகனங்களுக்கான தகர வேலைகள், நிறப்பூச்சு வேலைகள்
S-13	சகல வகையான வாகன திருத்தவேலைகள் (இயந்திரம்) உட்பட ஏனைய சகல திருத்தவேலைகள்
S-14	சகல வகையான வாகனங்களுக்கு குஷன் இடுதல், கார்பட் இடுதல், கெனபி இடுதல் மற்றும் லொறி பொடி அமைத்தல் போன்றன
S-15	சகல வகையான வாகன வளிச்சீராக்கி இயந்திர முறைமைகளின் திருத்தவேலைகள்
S-16	சகல வகையான வாகன மின்சார முறைமைகளின் திருத்தவேலைகள்
S-17	சகல வகையான வாகனங்களை சேர்விஸ் செய்தல்
S-18	முச்சக்கர வண்டிகளை சேர்விஸ் செய்தல், திருத்தவேவைகள் (தகர வேலை, நிறப்பூச்சு, இயந்திரம், மின் முறைமை போன்றவற்றின் திருத்தவேலைகள்)
S-19	அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (கணனி, அச்சுப்பொறிகள் மற்றும் பாவனையாளர் உபகரணங்கள் போன்றன)

மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள்

M-1	பல் மருத்துவ உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உட்பட துணைப்பாகங்கள்
M-2	ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உட்பட துணைப்பாகங்கள் (Regents)
M-3	சகல வகையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் (Probe, Sensors, Cuff, Battery) (வழங்குநர்களால் வழங்கக்கூடிய மருத்துவ உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் தொடர்பான பட்டியலொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)
M-4	மின்சார துணைப்பாகங்கள் மற்றும் சகல வகையான Heating Element

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – களுத்துறை
வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பப்படிவம் – 2024

1. வழங்குநர்களின் / நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி: .....
.....
2. தொலைபேசி இலக்கம்: .....
3. தொலைநகல் இலக்கம்: .....
4. மின்னஞ்சல்: .....
5. வியாபார வர்த்தகப் பெயர்: .....
6. வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகள்: .....
7. வியாபாரத்தின் தன்மை: .....
(உற்பத்தியாளர்/ பிரதான வர்த்தக முகவர்.பே. மொத்த விற்பனை முகவர் என்பவற்றைக் குறிப்பிடவும்)

வியாபாரப் பதிவிலக்கம்:			வங்கிப் பற்றுச்சீட்டின் இலக்கம்
பொருள் / வழங்கல் உருப்படி இலக்கம்.	சேவை உருப்படி இலக்கம்	மருத்துவ வழங்கல் உருப்படி இலக்கம்	
G -	S -	M -	

1. கடன் அடிப்படையில் வழங்குதல் தொடர்பான விபரங்கள்: .....
(அதிகூடிய கடன் பெறுமதி மற்றும் காலஎல்லை)
2. வெட் வரி செலுத்துபவரானால் இலக்கம்: .....
(வெட் வரி பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)

மேற்கூறிய தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என இத்தால் பிரகடனப்படுத்துவதோடு, 2024ஆம் வருடத்திற்கு இயைபாக வழங்குநர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்குவதாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

வழங்குநரின் பெயர் மற்றும் கையொப்பம்:
திகதி:
உத்தியோகபூர்வ முத்திரை.

நிபந்தனைகள்

1. பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தில் ஒவ்வொரு உருப்படியையும் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் ஒவ்வொரு உருப்படிக்காகவும் விண்ணப்பக் கட்டணமாக 1000.00 ரூபா வீதம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் இலங்கை வங்கி, களுத்துறை கிளையில் பேணப்படும் 2026181 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்து அந்தப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியுடன் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவங்களுடன் வியாபாரம் மற்றும் வெட் வரி பதிவுச் சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
2. சகல விண்ணப்பங்களையும் 2024 பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 29, களுத்துறை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
3. தேவையான வேளைகளில் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் பட்டியலுக்குப் புறம்பாக விலைகளைக் கோரும் உரிமையை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
4. விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்யும் அல்லது பதிவு செய்யாதிருக்கும் உரிமையை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

பிராந்திய பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,
களுத்துறை.

மேலதிக விபரங்களுக்கு: 034 2222367 / 034 2228811

இலங்கையின் மகளிர், கனிஷ்ட கிரிக்கெட் தேர்வாளர் நியமனம்

இலங்கை மகளிர் மற்றும் கனிஷ்ட கிரிக்கெட் தேர்வுக் குழுக்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவினால் நியமிக்கப்பட்டுள்ளன.

வயது மட்ட (கனிஷ்ட) தேர்வுக் குழுவுக்கு வினோதன் ஜோன் தலைவராக நிமிக்கப்பட்டிருப் பதோடு துமிந்த விக்ரமசிங்க, ஹசன்த பெர்னாண்டோ, வருண வராகொட மற்றும் ஷேன் பெர் னாண்டோ ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இதில் மகளிர் தேர்வுக் குழுவில் ஹேமன்த தேவப்ரியவின் தலைமை பொறுப்பு தொடர்ந்து நீடிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தேர்வுக் குழுவில் முன்னாள் கிரிக்கெட் வீராங்கனைகளான ரசாஞ் சலி அல்விஸ், ஸ்ரீபாலி வீரக்கொடி, நில்மினி குணரத்ன மற்றும் ஜயமாலி இன்திகா ஆகியோர் உள்ளடக்கப்பட் டுள்ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் தென் னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை மகளிர் அணியை தேர்வு செய்வது இந்த புதிய தேர்வுக் குழுவின் முதல் பொறுப்பாக அமையவுள்ளது.

ஏற்கனவே இலங்கை ஆடவர் கிரிக்கெட் தேர்வுக் குழுவில் அதிரடி மாற்றம் மேற்கொள்ளப்பட்டு முன்னாள் வீரர் உபுல் தரங்க தலைமை யில் புதிய தேர்வுக் குழு ஒன்று நியமிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸில் இணைந்தார் குசல்

பொலிஸ் கிரிக்கெட் கழகத்தை கடந்த ஆண்டு தொடக்கம் பிரதிநி தித்துவம் செய்து வரும் இலங்கை யின் நான்கு கிரிக்கெட் வீரர்கள் இலங்கை பொலிஸில் இணைந் துள்ளனர்.

அதன்படி இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேரா மற்றும் சாமர சில்வா ஆகியோர் தலைமை பொலிஸ் பரிசோதகர்களாகவும் அஷேன் பண்டார மற்றும் நுவன் பிரதீப் ஆகியோர் பொலிஸ் பரி சோதகர்களாகவும் நியமிக்கப்பட் டுள்ளனர்.

இதில் கடந்த 13 ஆண்டுகளாக கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகத்திற்கு ஆடிய குசல் பெரேரா பொலிஸ் சேவையில் இணைந்து பின்னர் பொலிஸ் அணியில் இடம்பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நான்கு வீரர்களும் ஆடும் பொலிஸ் கிரிக்கெட் அணி அண்மை யில் நிறைவடைந்த முதல் தர கிரிக் கெட் தொடரில் இணை சம்பியன் பட்டத்தை வென்றமை குறிப்பிடத் தக்கது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் டிரான் அலஸ் இந்த நான்கு வீரர் களுக்கும் பொலிஸில் இணைவ தற்கான உத்தியோகபூர் நியமனக் கடிதங்களை வழங்கியதோடு பதில் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென் னகோனும் இந்த நிகழ்வில் பங்கேற் றிருந்தார்.

இலங்கை – சிம்பாப்வே 2ஆவது ஒருநாள் போட்டி இன்று

இலங்கை மற்றும் சிம் பாப்வே அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி மழையால் தடைப்பட்ட நிலையில் இரண்டா வது போட்டி இன்று (08) கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற வுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த முதலாவது ஒருநாள் போட் டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெ டுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்க ளுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 273 ஓட்டங்களை பெற்றது. உப தலை வராக களமிறங்கிய சரித் அசலங்க தனது 3ஆவது ஒருநாள் சதத்தை பூர்த்தி செய்தார். 95 பந்துகளுக்கு முகம் கொடுத்த அவர் 101 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய சிம்பாப்வே அணி 4 ஓவர்களில் 12 ஓட் டங்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை இழந்த நிலையில் மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது. டில்ஷான் மதுஷங்க அந்த இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.

இந்நிலையில் மாலை நேரத்தில் மழை பெய்யும் வாய்ப்புக்கு மத்தியி லேயே இன்று இரண்டாவது ஒருநாள் போட்டி நடைபெறவுள்ளது.

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர் சுகவீனம் காரணமாக இந்த ஒருநாள் தொடரில் இருந்து விலகிய நிலையில் இடைவெளிக்குப் பின்னர் அணிக்குத் திரும்பிய ஆரம்பத் துடுப் பாட்ட வீரர் அவிஷ்க பெர்னாண்டோ முதல் போட்டியில் டக் அவுட் ஆகி இருந்தார். தனது கன்னி ஒருநாள் போட்டியில் களமிறங்கிய ஜனித் லய னகேவும் சோபிக்கத் தவறியிருந்தார்.

எனினும் இன்றைய போட்டியில் இலங்கை அணியில் பெரிதாக மாற்றங் கள் இருக்காது என்று நம்பப்படுகிறது.

பங்களாதேஷில் எதிர்க்கட்சிகள் இன்று தேர்தலில் வாக்குப்பதிவு

பங்களாதேஷில் பிரதமர் ஷெய்க் ஹசீனா தனது நான் காவது தவணைக்கான பதவிக் காலத்தை உறுதி செய்யும் வகையிலான, அவரால் 'பயங் கரவாத அமைப்பு' என்று அறி விக்கப்பட்ட எதிர்க்கட்சிகள் புறக் கணித்த பொதுத் தேர்தலில் நேற்று (07) மக்கள் வாக்க ளித்தனர்.

எனினும் தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைகளில் தலைநகர் டாக்காவின் புறநகர் உட்பட குறைந்தது 14 வாக்குச் சாவடிகள் தீ வைக்கப்பட்டதோடு ரயில் நிலையம் ஒன்று தீ வைக்கப்பட்ட சம்பவத்தில் நால்வர் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் எதிர்கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹசீனாவின் பதவிக் காலத்தில் நாட்டில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை குறைப்பு ஆகியவை இடம்பெற்றபோ தும் மனித உரிமை மீறல்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் கடுமை யாக ஒடுக்கப்படுவது தொடர்பில் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்நிலையில் நேற்று இடம்பெற்ற தேர்தலில் ஆளும் கட் சிக்கு போட்டியாக எந்த பிரதான எதிர்க்கட்சியும் இருக்கவில்லை. இதனால் பாராளுமன்றத்தில் ஒரு கட்சி ஆட்சி அமைவதை தவிர்ப்பதற்கு ஆளும் கட்சி சில இடங்களில் போட்டியிடுவதை தவிர்த்துக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் வாக்குப் பதிவிலும் மந்த நிலை காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தலைநகர் டாக்காவில் உள்ள வாக்குச் சாவடி ஒன்றில் முதல் 30 நிமிடங்களில் மூவர் மாத்திரமே தமது வாக்கை பதிவு செய்திருந்ததாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. நேற்று பின்னேரம் 5 மணி யுடன் வாக்குப் பதிவுகள் முடிவடைந்த நிலையில் தேர்தல் முடிவு கள் இன்று வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பான் பூகம்பம்:

90 வயது மூதாட்டி ஐந்து நாட்களின் பின்னர் மீப்பு

மத்திய ஜப்பானை தாக்கிய பூகம்பம் இடம் பெற்று ஐந்து நாட்க ளின் பின் 90 வய துகளில் இருக்கும் பெண் ஒருவர் இடி பாடுகளில் இருந்து உயிருடன் மீட்கப் பட்டுள்ளார்.

சுசு நகரில் இடிந்த இரண்டு மாடி கட்டடம் ஒன்றுக்குள் இருந்தே அவரை மீட்பாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி 7.5 ரிச்டர் அளவில் தாக்கிய பூகம்பம் நோட்டோ தீபகற்பத்தில் உள்ள சிறு நகரங்களில் கடும் சேதங்களை ஏற்படுத்தியது. 120க்கும் அதிகமானவர்கள் உயி ரிழந்திருப்பதோடு மேலும் 200 பேர் வரை காணாமல்போயுள் ளனர். இடிபாடுகளுக்குள் இரு பெண்கள் உயிருடன் இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து சுசு நகருக்கு 100 மீட்பாளர்கள் அனுப்பப்பட்டதாக 'யொமியுரி சிம்புன்' பத்திரிகை குறிப்பிட்டது. இதனைத் தொடர்ந்தே அந்த மூதாட்டி மீட்கப்பட்டுள்ளார். அதே இடத்தில் இருந்து 40 வயதுகளில் இருக்கும் பெண் ஒருவரை யும் மீட்பாளர்கள் காப்பாற்றியுள்ளனர். சிகிச்சைக்காக மருத்து வமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட அந்த முதிய பெண்மணி, மருத்துவர்களின் கேள்விகளுக்குத் தெளிவாகப் பதிலளிப்பதாக என்.எச்.கே ஒலிபரப்புக் கழகம் தெரிவித்தது.

போயிங் விமானங்கள் அவசர தரையிறக்கம்

அமெரிக்காவில் போயிங் மெக்ஸ் விமா னங்கள் தற்கா லிகமாக நிறுத் தப்பட்டுள்ளன. அ மெரிக்க மத்திய விமானப் போக்குவரத்து நிர்வாகம் இந்த அவசர உத்தரவைப் பிறப்பித்தது. அலாஸ்கா ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று பறந்துகொண்டிருக்கும்போது விமானத்தின் பாகம் தூக்கி எறியப்பட்டது. அந்த விமானம் கலி போர்னியா நோக்கிப் புறப்பட்ட சிறிது நேரத்தில் அழுத்தத்தை உணர்ந்ததாக விமானப் பணியாளர்கள் கூறினர். அதில் இருந்த 171 பயணிகள் மற்றும் 6 பணியாளர்களும் பாதுகாப்பாக உள்ளனர். அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து 170க்கும் அதிகமான போயிங் மெக்ஸ் விமானங்கள் அனைத்தும் பறப் பதற்குத் தகுதியானவையா என்று உடனே சோதிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. அமெரிக்காவின் போயிங் நிறுவனம் நிர்வாகத்தின் உத்தரவை ஆதரிப்பதாகக் கூறியது. புதிய உத்தர வால் அலஸ்கா ஏர்லைன்ஸ் நூற்றுக்கும் அதிகமான பயணங் களை ரத்துச் செய்தது.

சர்வதேச செய்திகள்

காசா போர் 4ஆவது மாதத்தை தொட்டது: உயிரிழப்புகள், பிராந்திய பதற்றம் உச்சம்

போர் பரவுவதை தடுக்க இராஜதந்திர முயற்சிகள்

காசாவில் போர் நேற்றுடன் (7) 3 ஆவது மாதத்தை பூர்த்தி செய்த நிலையில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் இருப்பதோடு இந்தப் போர் பலஸ்தீன நிலப்பகு தியை தாண்டி பரவுவதை தடுப்பதற் கான இராஜதந்திர முயற்சிகள் தீவிரம் அடைந்துள்ளன.

இந்தப் போர் லெபனான், ஆக்கி ரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் செங்கடல் கப்பல் பாதையில் பர வுவதை தடுக்கும் முயற்சியாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் மற்றும் ஜரோப் பிய ஒன்றியத்தின் மூத்த இராஜதந்தி ரியான ஜோசெப் பொரல் ஆகியோர் பிராந்தியத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

லெபனான் எல்லையில் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையிலான பரஸ்பரம் தாக்குதல்கள் தீவிரமடைந் திருப்பதோடு மேற்குக் கரையில் பெரும் கொந்தளிப்பு சூழல் நீடித்து வருகிறது. காசாவில் உள்ள பலஸ்தீ னர்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்தும் வரை செங்கடலில் உள்ள கப்பல்கள் மீது தொடர்ந்து தாக்குதல் களை நடத்துவதாக ஈரான் ஆதரவு யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் உறுதியாக உள்ளனர்.

துருக்கி மற்றும் கிரேக்க நாடுகளுக் குச் சென்ற பிளிங்கன் ஜோர்தான் தலைநகர் அம்மானை சென்றடைந் துள்ளார். பொரல் லெபனானுக் குப் பயணம் மேற்கொண்டுள்ளார். மோதல் பரவுவதை தடுப்பதற்கே தாம் முன்னுரிமை அளித்து வருவ தாக இந்த இருவரும் செய்தியாளர்க ளிடம் தெரிவித்துள்ளனர்.

"இந்த மோதல் பரவுவதை தடுப்ப தில் நாம் தீவிர அவதானம் செலுத்தி யுள்ளோம்'" என்று ஜோர்தான் செல் வதற்கு முன் கிரேக்கத்தில் இருந்து பிளிங்கன் குறிப்பிட்டிருந்தார். கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மற்றும் காசா போர் வெடித்தது தொடக்கம் பிளிங்கன் பிராந்தியத் திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டி ருப்பது இது நான்காவது முறையா கும்.

இந்தப் போரின் மூன்று மாத நிறைவையொட்டி கடந்த சனிக்கி ழமை இஸ்ரேலிய இராணுவ பேச் சாளர் ரியர் அட்மிரல் டானியல் ஹகரி அது தொடர்பில் விபரங்களை வெளியிட்டிருந்தார். காசாவில் அதி கரித்துள்ள உயிரிழப்புகள் மற்றும் மனிதாபிமான நெருக்கடி தொடர்பில் அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தத் திற்கு மத்தியில் இஸ்ரேல் தனது படை நடவடிக்கையை தணிக்கும் சமிக் ஞைகளை அண்மைய நாட்களில் வெளியிட்டு வருகிறது.

இந்நிலையில் வடக்கு காசாவில் ஹமாஸ் ஆயுதக் குழுவின் 'இராணுவ கட்டமைப்பை' முழுமையாக தகர்த்த தாக ஹகரி குறிப்பிட்டுள்ளது. அந்தப் பகுதியில் 8,000 போராளிகள் கொல்லப்பட்டதாகவும் அவர் குறிப் பிட்டார். "தற்போது மத்திய மற்றும் தெற்கு காசா பகுதிகளில் ஹமாஸை செயலிழக்கச் செய்வதில் நாம் அவ தானம் செலுத்தியுள்ளோம்" என்று ஒன்லைன் வழியாக அளித்த விபரத் தில் அவர் கூறினார்.

"2024 ஆம் ஆண்டிலும் போர் தொடர்ந்து நீடிக்கும். வடக்கு மற்றும் தெற்கில் ஹமாஸை செயலிழக் கச் செய்யும் போர் இலக்குகளை அடையும் பொருட்டு நாம் தொடர்ந்து செயற்படுவோம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளி கள் நடத்திய தாக்குதலில் 1200 பேர் வரை கொல்லப்பட்டு 240 பேர் வரை பணயக்கைதிகளாக கடத்தப்பட்டதை அடுத்தே இந்தப் போர் வெடித்தது.

தொடர்ந்து 100க்கும் அதிகமான பணயக்கைதிகள் ஹமாஸ் பிடியில் இருப்பதாக நம்பப்படுகிறது.

எனினும் காசாவில் இஸ்ரேலிய தரைப்படை பலஸ்தீனன் போராளிக ளின் எதிர்ப்பை தொடர்ந்து சந்தித்து வருவதோடு வடக்கு காசாவில் கட்டுப் பாட்டை கொண்டுவந்ததாக இஸ்ரேல் கூறியபோதும் அங்கு பலஸ்தீன போராளிகளின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரி விக்கின்றன.

ஹமாஸை ஒழிப்பதாகக் கூறி இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் காசாவில் உயிரிழந்தோர் எண் ணிக்கை 23 ஆயிரத்தை நெருங்கி யுள்ளது. இந்த உயிரிழப்பு எண்ணிக் கையில் காசா சுகாதார அமைச்சு போராளிகள் மற்றும் பொதுமக்களை பிரித்துக் கூறாதபோதும் கொல்லப் பட்டவர்களில் 70 வீதமானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர். இந்தப் போரினால் காசாவில் 2.3 மில்லியன் மக்கள் தொகையில் கிட் டத்தட்ட அனைவரும் போல் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டி ருப்பதோடு வீடுகள் மற்றும் சிவில் கட் டுமானங்கள் தகர்க்கப்பட்டு உணவு, நீர் மற்றும் மருந்துக்கு பெரும் தட் டுப்பாடு நிலவி வருகிறது.

"அவர்கள் தொடர்ந்தும் எம் மீது குண்டு போடுகிறார்கள்"

தெற்கு காசாவின் பிரதான நகரான கான் யூனிஸில் மோதல்கள் தீவிரம் அடைந்திருப்பதோடு அங்கு இஸ்ரே லிய போர் விமானங்கள் மற்றும் பீரங்கிகள் சரமாரியாக குண்டுகளை வீசி வருகின்றன. கான் யூனிஸில் அல் நப்ரிஸ் குடும்பத்திற்கு சொந் தமான வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் (06) நடத்திய வான் தாக்குதலில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட ஏழு பேர் கொல் லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு கூறியது.

கான் யூனிஸின் அல் அமல் மருத் துவமனைக்கு அருகில் கடுமையான ஷெல் குண்டுகள் வீசப்பட்டு வருவ தாக பலஸ்தீன செம்பிறை சங்கம் குறிப்பிட்டுள்ளது. ஆளில்லா விமா னங்களில் இருந்து குண்டு விசும் சத்தங்களுக்கு மத்தியில் கூர்மை யான பாகங்கள் மருத்துவமனைக் குள் விழுந்து வருவதாகவும் அந்த அமைப்பு சமூக ஊடகத்தில் குறிப்பிட் டுள்ளது.

சனிக்கிழமை இரவு குடியிருப்பு கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரேல் நடத் திய வான் தாக்குதலில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டு 50 பேர் வரை காயமடைந்ததாகவும் மத்திய காசாவில் உள்ள பாடசாலை ஒன்றின் மீது இடம்பெற்ற மற்றொரு தாக்குத லில் நான்கு பேர் வரை கொல்லப்பட் டதாகவும் பலஸ்தீன உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான வபா கூறியது.

கான் யூனிஸில் பிணவறை ஒன் றுக்கு வெளியில் நின்று கொண்டி ருந்த 11 வயது மஹ்மூத் அவாத் இஸ்ரேலிய வான் தாக்குதலில் தமது பெற்றோர்கள் மற்றும் சகோதரர்கள் கொல்லப்பட்டதாகக் கூறினார். "நாம் அல் ஷட்டி அகதி முகாமில் இருந்த போது காசாவில் போர் நடப்பதாக அவர்கள் துண்டு பிரசுரங்களை வீசி னார்கள், எனவே நாம் பாதுகாப்பான இடம் என்பதால் கான் யூனிஸுக்கு தப்பி வந்தோம், அவர்கள் தொடர்ந் தும் எம் மீது குண்டு போடுகிறார்கள்" என்று அந்த சிறுவன் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

நூறாயிரக்கணக்கான மக்கள் தஞ் சமடைந்துள்ள காஸாவின் தெற்கு நகரமான ரபாவில் நேற்று முன்தி னம் அதிகாலை இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக ஏ.எப்.பி செய்தியாளர் கள் தெரிவித்தனர்.

பஞ்சம் தலைவிரித்தாடுவதாலும், நோய் பரவுவதாலும் தீவிரமடைந்து வரும் மனிதாபிமான நெருக் கடி குறித்து ஐ.நா எச்சரித்துள்ள நிலையில், தொடர்ந்து தாக்குதல்க ளால் பொதுமக்கள் மேலும் சிரமத் துக்குள்ளாகியுள்ளனர்.

மத்திய காசாவின் அகதிகள் முகாமிலிருந்து ரபாவுக்கு தப்பிச் சென்ற 60 வயதான அபு முகம்மது, காசாவின் எதிர்காலம் 'இருண்டு கிடக் கிறது, மிகவும் சிரமமானது' என்று கூறினார்.

அவ்வட்டாரத்தின் பெரும்பகுதி ஏற் கனவே சிதைந்துகிடக்கிறது. "காசா வாழ முடியாததாக மாறிவிட்டது" என்று ஐ.நா மனிதாபிமான தலைவர் மார்ட்டின் கிரிபித்ஸ் அறிவித்துள்ளார்.

தாக்குதல், ஊட்டச்சத்துக் குறைபாடு, சுகாதார சேவைப் பற்றாக் குறை ஆகியவை காசாவில் '1.1 மில் லியனுக்கும் அதிகமான குழந்தை களை பயமுறுத்துகிறது' என்று ஐ.நா குழந்தைகள் அமைப்பு எச்சரித்தது.

காசாவின் 36 மருத்துவமனைக ளில் பெரும்பாலானவை தாக்குதல்க ளால் செயலிழந்துவிட்டதாகவும் எஞ் சியுள்ள மருத்துவ வசதிகளில் கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜெனினிலும் அறுவர் பலி

இதேவேளை ஆக்கிரமிப்பு மேற்குக் கரையின் ஜெனின் நகரில் பொது மக்கள் ஒன்று கூடல் ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று (07) காலை நடத் திய குண்டுவீச்சில் குறைந்தது ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ள னர்.

ஜெனின் நகருக்கு அருகில் இருக் கும் தியாகிகள் சதுக்கத்தில் இடம் பெற்ற பொதுமக்கள் ஒன்றுகூடல் ஒன்றின் மீதே இஸ்ரேல் குண்டு வீசி யதாக பார்த்தவர்களை மேற்கோள் காட்டி அனடொலு செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதில் காயமடைந் தவர்கள் ஜெனின் அரச மருத்துவம னைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள் ளனர்.

இந்நிலையில் ஜெனின் நகர் மற்றும் அங்குள்ள அகதி முகாமில் இஸ்ரேலியப் படை நேற்று சுற்றிவ ளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள் ளது. இதன்போது துப்பாக்கி மற்றும் வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாக பார்த் தவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அந்த முகாம் மீது ஹெலிகொப்டர்கள் மூலமும் குண்டுகள் வீசப்பட்டபோ தும் பாதிப்புகள் குறித்து உறுதி செய் யப்படவில்லை.

காசாவில் போர் வெடித்தது தொடக் கம் கிழக்கு ஜெரூசலம் உட்பட மேற்குக் கரையில் குறைந்தது 325 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்ப தாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மறுபுறம் இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது. இஸ்ரேலின் மெரோன் மலையில் உள்ள வான் கண்காணிப்பு நிலையத்தின் மீது 60க்கும் அதிகமான ரொக்கெட் குண் டுகளை பாய்ச்சியதாக ஹிஸ்புல்லா அமைப்பு கூறியது. அதற்குப் பதில டியாக இஸ்ரேல் ஹிஸ்புல்லாவின் வட்டாரத்தில் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதலைத் தொடுத்ததாகக் கூறியது.

பிராந்தியத்துக்கான தனது ஒரு வார பயணத்தை ஆரம்பித்திருக் கும் பிளிங்கன் கடந்த சனிக்கிழமை துருக்கி மற்றும் கிரேக்க தலைவர் களை சந்தித்த நிலையில் இஸ்ரேல், இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரை, ஜோர்தான், கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், சவூதி அரேபியா மற்றும் எகிப்துக்கு பயணிக்கிறார்.

ஸ்தான்பூலில் அவர் துருக்கி வெளி யுறவு அமைச்சர் ஹகன் பிதான் மற்றும் ஜனாதிபதி தையிப் எர்து வானை சந்தித்தபோது, காசா மீதான இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கை தொடர்பில் கடும் விமர்சனத்தை எதிர்கொண்டார். மற்ற நேட்டோ நாடுகளைப் போலன்று ஹமாஸ் அமைப்பை பயங்கரவாத பட்டியலில் சேர்க்காத துருக்கி மத்தியஸ்த நடவ டிக்கைகளுக்கு முன்வருகிறது.

மறுபுறம் பெய்ரூட் சென்றிருக் கும் பொரல், போரில் லெபனானைச் சம்பந்தப்படுத்துவதற்கு எதிராக எச் சரிக்கை விடுத்தார். "இராஜதந்திர வாயில்கள் திறந்தே உள்ளன. போர் மாத்திரம் தீர்வல்ல – அது மோசமான தீர்வு" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 8ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.